பதிவு இலக்கம் : 105267
தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepamtv.asia
விலை 30 ரூபா • தீபம் 207 • 08.12.2019



சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
HOTLINE : 077 722 6247
E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com




## தொடரும் அடைமழை வெள்ளக்காடாகும் நாடு



## அருளர் மறைவு



## நீராவியடிக்கு புதிய புத்தர்



## முஸ்லீம்களை தவிர்த்த புதிய அமைச்சரவை



## இந்தியக் கனவில் தமிழ்த் தலைமைகள் ?!



## இது பௌத்த நாடு..



சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 221 7578, 021 221 7678
077 614 0361, 077 722 6247

HOTLINE : 077 722 6247
ஓடக்கரை வீதி, சங்கானை. 021 225 1664, 070 301 3016
கே.கே.எஸ் வீதி, மல்லாகம். 021 224 3393, 070 301 3014
வங்களாவடிச் சந்தி, வேலணை. 021 221 5472, 070 301 3012
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 070 255 4135
இல.281c, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம். 021 222 8004, 070 301 5004
பழைய கண்டி வீதி (பிரதான வீதி) காரைநகர். 021 225 2454, 070 510 2484
E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com


இது தமிழ் பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை




## உலகத்தில்..

- உலகில் மிகப்பெரிய விலங்கு எது? திமிங்கிலம்
- உலகில் உயரமான விலங்கு எது? ஒட்டகச்சிவிங்கி
- உலகில் மிக உயரமான மலை எது? இமயமலை
- உலகிலேயே மிக நீளமான நதி எது? அமேசன் (6.750 கிலோமீற்றர்)
- உலகிலேயே மிக நீளமான நதியாகக் கருதப்பட்ட நதி யாது? நைல் நதி(6.690 கிலோ மீட்டர்)
- உலகியே மிக ஆழமான ஆழி எது? மரியானாஆழி (11.522மீற்றர்)
- உலகிலேயே மிகப்பெரிய நகரம் எது? லண்டன்
- உலகிலேயே பெரிய பாலைவனம் யாது? சஹாராப்பாலைவனம்
- உலகிலேயே மிகச் சிறிய அரசு எது? வத்திக்கான்
- உலகிலேயே பெரிய சமுத்திரம் எது? பசுபிக் சமுத்திரம்
- உலகிலேயே பெரிய தீவு எது? கிறீன்லாந்து
- உலகிலேயே பெரிய கண்டம் எது? ஆசியாக்கண்டம்
- உலகிலேயே சிறிய கண்டம் எது? அவுஸ்ரேலியா
- உலகிலேயே பெரிய நாடு எது? கனடா (ரஷ்யா சிதறிய பிறகு)
- உலகிலேயே அதிகளவில் எரிமலைகள் உள்ள நாடு எது? இந்தோனேஷியா
- உலகிலேயே அதிக மழை பெறும் இடம் யாது? சீராப்புஞ்சி
- உலகிலேயே பெரிய நன்னீர் ஏரி யாது? சுப்பீரியர் ஏரி
- சூரியனை பூமி ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் யாது? 365 நாட்கள்.6 மணி 9நிமிடம். 9.54 செக்கன்
- உலகிலேயே மிகவுயர்ந்த சிகரம் யாது? எவரெஸ்ட்



## கலைமானும் கரடியும்

கலைமான் ஒன்று தான் இரண்டு குட்டிகளுடன் அடர்ந்த காட்டுக்குள் இரை தேடி அலைந்து கொண்டிருந்தது. மாலை நேரத்தில் இருப்பிடம் திரும்பும் வேலை வந்ததும், குட்டிகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டது. அப்போது கலைமான் குட்டிகளில் ஒன்று காட்டுக்குள் வழி தவறி விட்டது. அந்தக் காட்டுக்குள் சிறிது தூரம் தான் தாயை தேடியது. ஆனால் தாயையும், உடன் பிறந்த மற்றொரு குட்டியையும், அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் அது காட்டின் ஒரு ஓரமாக நின்று கண்களில் கண்ணீர் பொங்க அழுது கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அந்த வழியாக கரடிக் குட்டி ஒன்று அங்கு வந்தது. அது கலைமான் குட்டியிடம் எதற்காக அழுகிறாய், என்று கேட்டது .

கலைமான் குட்டியும் தன் சோகக் கதையைக் கூறியது. பரிதாபம் கொண்ட கரடிக்குட்டி, கலைமான் குட்டியை தன்னுடன் தான் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றது. இரண்டும் நண்பர்களாக இருந்து தங்களின் சிறு வயது காலத்தைக் கரடிக்குட்டியும், கலைமான் குட்டியும் சந்தோஷமாக கழித்து வந்தன.

கலைமான் வளர அதற்கு அழகிய கொம்பு முளைத்தது. அதன் காரணமாக அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக தோன்றியது. கலைமானைப் பார்த்த மற்ற விலங்குகள் அதன் அழகை பாராட்டிச் சென்றன. இதனால் கலைமானுக்கு கர்வம் உண்டானது. அது மற்ற எந்த விலங்குகளையும் மதிக்காமல், ஏளனமாகப் பார்க்கத் தொடங்கியது. இதனாள் வரை தனக்கு அடைக்கலம் கொடுத்து, தன்னுடன் உயிருக்கு உயிராக பழகி வந்த கரடியிடமும் அது தன் அழகின் கர்வத்தைக்காட்ட ஆரம்பித்தது. கரடியே! நீ என்னைப் போல் அழகாக இல்லை. உன் முகத்தைப் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது. ஆனால் என்னைப்பார், இயற்கையிலேயே அழகான எனக்கு, இப் போது வளர்ந்துள்ள கொம்புகள் மேலும் அழகு சேர்க்கின்றன. இப்போது உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்ளவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. எனக்கு நண்பனாக இருக்க, என்னைப் போல் அழகு படைத்தவரே தகுதியானவர்கள். உனக்கு அந்தத் தகுதி கொஞ்சமும் இல்லை, என்றது கலைமான்.

இதைக்கேட்ட கரடிக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதனை வெளியே காட்டிக் கொள்ளாமல் "கலைமானே! உனக்கு உன் கொம்புகள் மிகுந்த அழகுதான். அதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அது மட்டுமல்லாது, என் நண்பன் மிகவும் அழகானவன் என்பதும் எனக்கும் தானே பெருமை! என்றது பெருந்தன்மையுடன். ஆனால், உன்னை என் நண்பன் என்று சொல்லிக்கொள்வது எனக்கு அசிங்கமாக இருக்கிறது . நான் தனியாக வாழ முடிவு செய்துவிட்டேன், என்று கூறியபடி கலைமான் அங்கிருந்து புறப்பட்டு போய்விட்டது.

இது நாள் வரை தன்னோடு ஒருமையாக வாழ்ந்த மான், பிரிந்து போவதைக் கண்டு வேதனையில் துடித்தது கரடி. இருப்பினும் மனதை தேற்றிக்கொண்டது. ஒரு நாள் கலைமான், இரை தேடுவதற்காக வெளியில் சென்றது. அப்போது மரம் ஒன்றில் இருந்த சிறுத்தை, கலைமானை வேட்டையாட துரத்தியது. சிறுத்தைக்கு பயந்து தலை தெறிக்க ஓடிய கலைமானின் தலை ஒரு மரத்தின் கிளைகளுக்கு இடையில் வசமாக மாட்டிக் கொண்டது. எவ்வளவு முயன்றும் அதன் தலை வெளியே வரவில்லை. தன் முழுப் பலத்தினை கொண்டு கலைம்ான் தலையை வெளியே எடுக்க முயன்றது. இறுதியில் அதன் கொம்புகள் முறிந்து தலை வெளியே வந்தது. கொம்புகள் ஒடிந்து போன தால் கலை மான் பார்ப்பதற்கே அசிங்கமாக தோற்றம் அழித்தது. இதைப் பார்த்த மற்ற விலங்குகள் கேலிபேசி சிரித்தன. கலைமான் அழகிழந்து பழைய படி கரடியிடமே சென்றது. கரடியோ, கலைமானுக்கு நடந்ததைக் கேட்டு வருந்தியது.


"மானே ! அழகு என்பது எப்போதும் நம்முடன் இருக்கப்போகிற சொத்தில்லை. வயதாக அது நம்மை விட்டு விலகுவது உறுதி. உனக்கு கொஞ்சம் விரைவாகப் போய்விட்டது. இதற்காக வருந்தாதே" என்று கலைமானைத் தேற்றியது கரடி. கரடியின் பெருந்தன்மையைக் கண்டு வெட்கத்தில் தலை குனிந்த கலைமான், அதனிடம். மன்னிப்பு கேட்டது. இருவரும் பழையபடி நண்பர்களாக வாழத்தொடங்கினர்.



## அம்மா அம்மா அம்மா தான்...

அம்மா அம்மா அம்மா தான்
அன்பே எமக்கு அம்மா தான்.
விம்மி னாலே துடிப்பா
விழுமுன் கையைப் பிடிப்பா
எம்மைப் பார்த்து ரசிப்பா
என்றும் அன்பாய் இருப்பா
பாலும் தந்து வளர்ப்பா
பாசம் கொண்டு அணைப்பா
வாழ எம்மைப் படைத்தா
வாரமாய் அம்மா கிடைத்தா.

- வேலணையூர் சுரேஸ் -



வார இதழ்
# தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
08.12.2019 — இதழ் - 207
gmail : newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் : 021 492 7542, 077 198 9445

## தமிழ்த் தலைமைகளின் இந்தியக் கனவு

"அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த அனுமதிக்க மாட்டேன் "என்று ஹிந்து நாளிதழுக்கு இந்தியாவில் வைத்து அளித்த செவ்வி ஒன்றில் வெளிப்படையாகவும், இறுக்கமாகவும் சொல்லி இருக்கிறார் ஜனாதி கோத்தாபய ராஸபக்ஷ. அவர் அந்தச் செவ்வியின் மூலம் இனப்பிரச்சினை விவகாரத் தில் தனது ஆட்சி எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை தெட்டத் தெளி வாகவும், அதேசமயம் துணிச்சலாகவும் தெரிவித்துள்ளமையானது இந்திய ராஜதந்திர வட்டாரங்களில் கடும் அதிர்ச்சியையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி இருப்பதாகக் கூறப் படுகிறது.

ஜனாதிபதியின் இத்தகைய அறிவிப்பானது ஈழத்தமிழர் எதிர்பார்க்காத ஒன்றல்ல. ஒரு வேளை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் உதவியின்றி எதுவுமே நடைபெற ப்போவதில்லை என்ற கருத்தியலில் வேரூன்றி நிற்கும் சுயசிந்தனைத், தெளிவற்ற இந்திய சார்புடமை கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குத்தான் ஏமாற்ற த்தை அளித்திருக்கலாம். அதற்கு என்ன செய்வது?

தேர்தலுக்கு முன்னரே கோத்தாபயவின் பொதுஜன பெரமுன சார்பில் கருத்துக்கூறிய தற்போதைய பிரதமரும், முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ, "தங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் 13க்கு மேலும் சென்று (13+) தீர்வு பற்றியும் யோசிப்போம்" என்று உரையாற்றும் போதே அதனுள் புதைந்திருந்த பொய்மையை கடந்த கால இலங்கை அரசியல் வரலாற்றை நன்கு அறிந்தோர் உணர்ந்திருப்பர். மகிந்த ராஜபக்ஷ அவர் களின் ஆட்சிக்காலத்திலேயே முன்னர் 13வது திருத்தச்சட்டம் 13- ஆனவிதம், அதுவும் சட்டரீதியாக ஆக்கப்பட்ட விதம் அனைவருக்கும் தெரியும். அதுவும் இந்திய அரசுக்கும் தெளிவாகத் தெரிந்திருக்கும். அப்படி இருந்தும் கோத்தா - மோடி சந்தித்த போது மீண்டும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த மோடி கோரினார் எனச் செய்திகள் வந்த போது தமிழ் மக்களுக்கு விரக்தியாகச் சிரிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

"தமிழரின் விடயத்தில் மோடியின் கோரிக்கையை முழுமையாக ஏற்றுக் கொள் கிறோம்," என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறிய செய்தி வெளிவந்த ஊடகங் களின் அதே பக்கத்திலேயே அதனை நிராகரித்துக் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்ட செய்தியும் தலைப்பு செய்தியாக வெளிவந்துள்ளமையை முரண்பாட்டின் உச்சக்கட்டம எனலாம். எதுவானாலும் மோடியுடனான கோத்தபாய அவர்களின் சந்திப்புக்கு முன் னரே தமிழர் பிரச்சினையில் இந்தியா அணுகுமுறை குறித்த கடும் நம்பிக்கையுடன் கரு த்துக் களைக் கூறிவந்த கூட்டமைப்பினரும், விக்கினேஸ்வரன் ஐயா போன்றவர்களும் இத்தகைய தொரு செய்தியை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

இலங்கை மீதான இந்தியாவின் ராஜதந்திர அணுகுமுறைகள் இந்து சமுத்திர பிரா ந்தியம் மீதான இந்தியாவின் அரசியல் அபிலாசைக்கு முதலிடம் கொடுக்கும் தன்மை வாய்ந்தது என்பதும், அந்த இலக்கை முழுமையாக எட்டுவதற்குத் தமிழர் பிரச்சினை யை ஒரு துருப்புச் சீட்டாகவே அது இன்றுவரை பயன்படுத்தி வந்துள்ளது. இனிமேலும் அப்படித்தான் பயன்படுத்தும் என்று மூத்த தமிழர் தலைமைகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் அரசியல் விவேகிகள் புரியாமல் தான் பேசுகிறார்கள், தொடர்ந்து அறிக் கைகள் விடுகிறார்கள் என எவரும் நம்பினால் அவர்களின் அசட்டுத்தனத்திற்கு அனுதா பம் தெரிவிப்பதைவிட வேறு எதுவும் தெரியவில்லை.

கோத்தபாயவின் நிராகரிப்பு அறிக்கையை அடுத்து விரைவில் டில்லி நோக்கிய பயண த்தை மேற்கொள்ளப் போகிறார்களாம் கூட்டமைப்பு தலைவர்கள். இதெல்லாம் எந்தவித த்திலும் அர்த்தமற்றதான, வெறும் சம்பிரதாயபூர்வமான, அவ்வப்போது நிகழ்கின்ற விஜயமாகத்தான் இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. யார் என்ன சொன்னா லும் கோத்தபாயவின் அரசியல் நகர்வென்பது உள்ளூரிலும் சரி, வெளிநாட்டிலும் சரி, சமரசங்களுக்கு அப்பாற்பட்டது. அவரது ஆட்சிக்கால அரசியல் இருப்பை எந்த விதத்தி லும் பாதிக்காததும், பேரினவாத வாக்கு வங்கியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள் வதற்காக, இராஜ தந்திரத்தை இறுக்கமாகக் கைக்கொள்வதற்கானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தத் தந்திரோபாய உத்திகளே அடுத்து எதிர்கொள்ளவுள்ள தேர்தல் களில் அவரது கட்சியின் பாரிய வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்த அவசியமானது என்பதைத் தேர்தல் நன்கு அறிவித்துள்ளது. அவரது அசுர பலம் என்பது முழக்க முழக்கப் பெரும்பான்மை இனத்தவரின் ஆதரவை முழுமையாகத் தன் வசமாக்குவதிலேயே தங்கியள்ளது. அதற் காக சிறுபான்மைச் சமூகத்தினரின் பிரச்சினையை இப்போது கையிலேடுத்துக் காயாட அவர் தயாராக இல்லை. ●





நெஞ்சு பொறுக்குதில்லையே -இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சி சாவார்-இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சிப் பேய்களேன்பார்-இந்த
மரத்திலென்பார் அந்த குளத்திலென்பார்
துஞ்சுது முகட்டி லென்பார்-மிக
துயர்படு வார்எண்ணி பயப்படுவார் (நெஞ்சு)

மந்திர வாதி யென்பார்-சொல்ல
மாத்திரத்தி லே மனக் கிலிபிடிப்பார்
யந்திர சூனியங்கள் -இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டோ- ஜனம்
தாங்குவ ருலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை -இவர்
அஞ்சுதரு பேயென்றேண்ணி நெஞ்சமயர்வார் (நெஞ்சு)

சிப்பாயைக் கண்டஞ்சுவார்-ஊர்ச்-
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்
துப்பாக்கி கொண்டோருவன் -வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பாலெ வனோசெல்வான்-அவன்
ஆடையைக் கண்டு பயந் தெழுந்துநிர்பபார்
எப்போதும் கைத்தட்டுவார்-இவர்
யாறிடத்தும் பூனைகள்போலேங்கிநடப்பார் (நெஞ்சு)

## சுந்தரச் சிரிப்பு







நன்றி : சிரித்திரன் சித்திரக்கொத்து

லக்ஷனா பாலகுமாரன்



# நேட்டோவின் எதிர்காலம் அச்சுறுத்தலுக்குள்ளாகிறதா?

நவீன வரலாற்றில் மிகவும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் ஒரு இராணுவ கூட்டணியான வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் அமைப்பு (North Atlantic Treaty Organisation – NATO) இவ்வருடம் 70 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. நேட்டோ 31வது உச்சி மாநாடு இம்மாதம் 3ம் திகதி மற்றும் 4ம் திகதிகளில் லண்டனில் நடைபெற்றது. லண்டனின் Wartford நகரில் நடக்கும் இம் மாநாட்டில் இந்தியா உள்ளிட்ட 29 நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டு இருந்தது. 1949 ஆம் ஆண்டில் சோவியத் யூனியனுக்கும் அதன் சார்பு நாடுகளுக்கும் எதிரான ஒரு கூட்டு அமைப்பாக நேட்டோ உருவாக்கப்பட்டது. பனிப்போரின் முடிவினைத் தொடர்ந்து நேட்டோ அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு இரு மருங்கிலும் உள்ள நாடுகளுக்கிடையிலான ஒரு பாதுகாப்புச் கூட்டமைப்பாக செயற்படுகிறது. ஆனால் இவ் இராணுவக் கூட்டணி அதன் வரலாற்றில் மிகவும் அச்சுறுத்துகின்ற சிக்கலான பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

முதலாவது நேட்டோ அமைப்பு எதிர் நோக்கும் சவால் நிதித்துறை சம்பந்தப்பட்டதாகும். அதாவது நேட்டோ கூட்டணியில் உள்ள நாடுகள் பாதுகாப்பிற்காகச் செலவழிக்கும் பணத்தின் அளவு தொடர்பில் இப்போது சர்ச்சை எழுந்துள்ளது. குறிப்பாக இச்சர்ச்சை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பினால் ஏற்படுத்தப்பட்டது. நேட்டோவிற்கு அமெரிக்கா அதிகப்படியான பணத்தை வழங்குகின்றது என்றும், ஐரோப்பா முழுவதும் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்புக்களைப் பராமரிப்பதற்கும், கண்டத்திற்குள் 65000 துருப்புக்களை அமர்த்துவதற்கும் பெருமளவில் செலவழிக்கிறது என்றும் ட்ரம்ப் பல முறை கூறியுள்ளார். இம் மாநாட்டிலும் ட்ரம்ப் அதை வலியுறுத்தியுள்ளார்.

2014 ஆம் ஆண்டில், அனைத்து நேட்டோ உறுப்பினர்களும் தங்கள் பாதுகாப்பு செலவீனங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு வீதமாக 2024க்குள் அதிகரிக்க ஒப்புக் கொண்டனர். ஜீன் 2019 இல் நேட்டோ அமைப்பின் தரவு அடிப்படையில் அதன் 29 உறுப்பினர்களில் 7 பேர் அமெரிக்கா உட்பட்ட அவர்களின் வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு வீதம் பாதுகாப்புச் செலவிற்காக வழங்கியுள்ளனர் என்பது மதிப்பிடப்பட்டது. இது குறித்து உச்சி மாநாட்டில் ட்ரம்ப் கருத்து தெரிவிக்கும் போது "நான் உள்ளே வந்த போது, நான் நேட்டோ மீது கோபமடைந்தேன். இப்போது நான் 130 மில்லியன் டாலர் திரட்டியுள்ளேன். ஆனால் இன்னும் நீங்கள் பல குற்றவாளிகளைக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும், அவர்கள் முழுமையாகப் பணம் செலுத்தாதபோது நான் அவர்களைக் குற்றவாளி என்று அழைக்கிறேன்." எனக் கூறினார். மேலும் ஜெர்மனி பாதுகாப்பாக 1% முதல் 1.3% வரை மட்டுமே குறைந்த அளவில் பங்காற்றுவதாக ட்ரம்ப் குற்றம் சாட்டினார். இவ்வாறு நிதித் தொடர்பில் அமெரிக்கா ஜனாதிபதியின் தன்னிச்சையான நடவடிக்கைகள் ஏனைய நேட்டோ அமைப்பு நாடுகளை நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

இரண்டாவது சவால் நேட்டோவின் விதிமுறைகள் மீறப்படுகின்றன. நேட்டோ ஒப்பந்தத்தின்படி உறுப்பின்ரான ஒரு நாடு எந்த நாட்டின் மீது போர் தொடுத்தாலும் மற்ற அனைவரும் அவருக்கு உறுதுணையாகப் போர் உதவி செய்ய வேண்டும். இந்த முக்கிய விதியே நேட்டோ நாடுகளின் பெரும் தலைவலிக்கு வழிவகுத்துள்ளது. இங்கு பிரதானமாகக் குறிப்பிடுவது வடக்கு சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகளின் பின்வாங்கலும், துருக்கியின் குர்தீஸ் படைகள் மீதான தாக்குதலும் ஆகும். குறிப்பாக வடக்கு சிரியாவில் துருக்கிய நாட்டின் நடவடிக்கை நட்பு நாடுகளுக்கிடையில் மன அழுத்தத்தை அதிகரித்துள்ளது.

## உலக அரசியல்

சிரியாவில் அமெரிக்கப் படைகள் பின்வாங்குவதற்கு முன் அது தொடர்பாக நேட்டோவை அணுகாமல் அமெரிக்கா தன்னிச்சையாக செயற்பட்டமையால் நேட்டோ அமைப்பு மூளைச்சாவு அடைந்து விட்டது எனப் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரன் குற்றம் சாட்டினார். நேட்டோ உறுப்புரிமையுள்ள துருக்கி, ஒக்டோபரில் ட்ரம்பைத் தவிர வேறு எந்த நேட்டோ கூட்டாளியுடனும் ஒருங்கிணைப்பு இல்லாமல் வடக்கு சிரியாவிற்குள் நுழைந்தது என்ற விரக்தியைப் பிரதிபலிக்கும் விதமாக ஒரு பொருளாதார நிபுணர் நேர்காணலில் நேட்டோவைப் பற்றி மக்ரோன் விமர்சித்தார். படையெடுப்பு ஐ.எஸ் அமைப்பிற்கு எதிரான போராட்டத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது என்று மக்ரோன் நம்புகிறார். இந் நடவடிக்கையால் ஐ.எஸ் அமைப்பு மீண்டும் எழுச்சி பெறும். அதனால் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஐரோப்பா நாடுகளுக்குமான எண்ணெய் பரிமாற்றம் கடுமையாகப் பாதிக்கப்படும். இதனால் எண்ணெயை அடிப்படையாக கொண்ட ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும். எனவே ஏற்கனவே உலக பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள அந்நாடுகள் மேலும் பிரச்சனைகள் வருவதை விரும்பவில்லை.

மேலும் அமெரிக்காவின் படைகளின் வெளியேற்றத்தால் அங்கு ரஷ்சியப் படைகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. ஏற்கனவே சிரியா போரின் முடிவுகள் மற்றும் ஈரான் கூட்டு என்பவற்றால் மத்திய கிழக்கில் ரக்ஷ்சியாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதோடு அதனை இன்னும் வலிமைப்படுத்தும் வகையில் அமெரிக்காவின் படைகள் வெளியேற்றம் அமைந்துள்ளமை ஐரோப்பிய நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றன. மீண்டும் ஐரோப்பாவிற்குள் ரக்ஷ்சியாவின் ஆதிக்கம் ஏற்பட்டுவிடுமோ என பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி நாடுகள் அச்சம் கொண்டுள்ளன. இவ் அச்சத்தினை தீர்க்கும் வகையில் நேட்டோ அமைப்பின் நடவடிக்கைகள் அமையா வண்ணம் அமெரிக்கா - துருக்கி நாடுகள் செயற்படுவதனால் பிரான்ஸ் நேட்டோ அமைப்பு மூளைச் சாவு அடைந்துவிட்டதாக விமர்சித்தார். ஆனால் இவ்வார்த்தையால் இம்முறை மாநாட்டில் பிரான்ஸ் - துருக்கி - அமெரிக்கா நாடுகளுக்கிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டமையினை அவதானிக்க முடிகின்றது. இரண்டு நாள் நேட்டோ சந்திப்பின் முதல் நாள் காலையில் அமெரிக்கா ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை கண்டித்துள்ளார். நேட்டோவை மூளைச் சாவு அடைந்த அமைப்பு என்று பிரெஞ்சு ஜனாதிபதி விவரித்திருப்பது அவமானகரமானது என்றும், மிகவும் மோசமான அறிக்கை என்றும் கூறியுள்ளார். மேலும் வெறுமனே உங்களால் அப்படிச் சொல்லிவிட முடியாது. எங்கள் எல்லோரையும் விட பிரான்ஸிற்குத்தான் நேட்டோ அவசியம் தேவைப்படுகிறது. உண்மையில் அமெரிக்கா தான் நேட்டோவால் குறைந்த இலாபம் அடையும் நாடு என்றும் கூறினார். அடுத்து சில முக்கிய ஐரோப்பிய நாடுகள் அவற்றின் உள்நாட்டுப் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொந்தரவான சூழ்நிலையில் இருந்தே நேட்டோவிற்கான மூன்றாவது சவால் தோன்றுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வு ஒன்றை கண்டுபிடிப்பதில் பிரித்தானியா கடும் முயற்சி செய்து கொண்டு இருக்கும் வேளையில், பிரான்ஸில் மஞ்சள் அங்கி இயக்கத்தின் வடிவில் வளர்ந்து வரும் ஜனரஞ்சக அரசியலை முறியடிக்கப் போராடிக் கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சனைகள் எல்லாம் உகந்த முறையில் நேட்டோ கையாள முடியும் என்பதற்கான அறிகுறியை இதுவரை காணக்கூடியதாக இல்லை. .

மேற்கத்தைய நாடுகளின் அரசியல், பொருளாதார அமைப்புக்களின் மாநாடுகள் இடம் பெற்றால், அங்கு ட்ரம்ப் வரிவிதிப்பு தொடர்பாக உரையாற்றாமல் இருக்கமாட்டார். மாநாடுகளின் போது ஏதாவ்துவொரு நாட்டின் மீது விரிவிதிப்பு அல்லது பொருளாதாரத் தடை ட்ரம்பின் வழக்கமான செயற்பாடுகளில் ஒன்றாகிவிட்டது. ஆனால் இராணுவ கூட்டணியான நேட்டோ அமைப்பின் இம் மாநாட்டிலும் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் ஒருங்கிணைந்த பாதுகாப்பிற்கு அப்பால் பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரான்ஸின் புதிய டிஜிட்டல் சேவை வரி அமெரிக்காவின் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியதாக இருந்தது. இந்நிலையில் டிஜிட்டல் சேவை வரி விவகாரத்தில் பிரா்ன்ஸிற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது. பிரான்சில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 2.4 பில்லியன் டொலர், அதாவது 100 சதவீதம் வரை வரிவிதிக்ககூடும் என்று அறிவித்தது. பிரான்ஸின் சீஸ், கைப்பை, பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள் மற்றும் வைன் போன்ற பொருட்களுக்கு 100 வீத வரி 2020 முதல் அமுல்படுத்தப்படும் என அமெரிக்கா குறிப்பிட்டது. இது தொடர்பாக "அமெரிக்கா நிறுவனங்கள் மீது யாரும் தங்களுடைய ஆதிக்கத்தை செலுத்த முடியாது. பிரான்ஸ் பொருள்கள் மீதான வரியும் உயர்த்தப்பட்டுள்ளது. அமெரிக்கா மீது அமெரிக்கர்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவோம் என மாநாட்டில் வைத்து ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

எனவே இம் முறை நேட்டோ மாநாடு பொது எதிரிக்கான பாதுகாப்பு அம்சங்கள் சார்ந்த நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக, நிதி மற்றும் நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் பற்றியதாக அமைந்திருந்தது. மத்திய கிழக்கில் ரக்ஷ்சியாவின் ஆதிக்கத்தினை தடுப்பதில் பங்காற்றாத நேட்டோ அமைப்பில் அங்கத்துவம் வகிப்பது அல்லது நிதி பங்களிப்பு செய்தல் தொடர்பில் அங்கத்துவ நாடுகள் மத்தியில் ஒரு குழப்ப நிலை தோன்றியுள்ளமையினை இம் முறை மாநாடு வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்காவினால் தோற்றுவிக்கப்பட்ட அரபு வசந்தத்தில் சிரியா அரபு வசந்தம், அமெரிக்கா எதிர்பாராத பல திருப்பு முனைகளுடன் நகர்ந்து இன்று அதன் மேற்கு நட்பு நாடுகளுடன் முரண்பட வைத்துள்ளது. உலக அரசியலின் சமநிலையில் பல முக்கிய திருப்பு முனைகளை ஏற்படுத்தியதிலும் எதிர் காலத்தில் இடம்பெறவிருக்கும் விடயங்களிலும் சிரியாப் போரின் விளைவுகள் செல்வாக்கு செலுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

சிலம்பு



# தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகாண இந்தியாவை நம்பும் தமிழ்த் தலைமைகள்




மோடி இரண்டாவது தடவையாகப் பிரதமர் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும் மாலை தீவுக்குப் பயணம் மேற்கொண்டார். அப்படிச் செல்லும் வழியில் இலங்கைக்கும் வந்தார். அதனால் அவர் பதவியேற்றபின் பயணித்த முதல் நாடு இலங்கை என்று கூறப்பட்டது. அவ்வாறு வந்த மோடி சனாதிபதியையும், பிரதமரையும் கொழும்பில் சந்தித்தவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை (தமிழரசுக்கட்சியினரை) வானூர்தி நிலையத்திற்கு அழைத்து ஐந்து நிமிடம் மட்டுமே சந்தித்தார். இலங்கைக்கு வந்த பிரதமர் மோடி தங்களைச் சந்திக்கிறார் தமிழர் பிரச்சினை பற்றி தாம் அவருடன் விவாதிக்கப்போகிறோம் என்று கூறிப் பெருமிதம் அடைந்த கூட்டமைப்பினரை. வானூர்தி நிலையத்தில் ஐந்தே நிமிடம் சந்தித்த பிரதமர் மோடி புதுடெல்லிக்கு வாருங்கோ பேசுவோம் என்று கூறி விட்டுச் சென்றுவிட்டார். அதன் பின்னர் இந்தியாவுக்குப் போகப்போகிறோம் பிரதமரை நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டுள்ளோம் என்று அறிக்கைகள் வந்தனவே தவிர இன்று வரை இந்தியாவிற்குச் சென்று பிரதமரைச் சந்தித்ததாகத் தகவல் எதுவும் எவருக்கும் தெரியவில்லை.

தற்பொழுது சனாதிபதித் தேர்தல் முடிந்து இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவசரமாகக் தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் சனாதிபதியைச் சந்திக்கக் கொழும்பிற்கு வந்திருந்தார். அப்படி வந்தவர் சனாதிபதியைச் சந்தித்து விட்டு டெல்கிக்கு வருமாறு அழைப்புக் கொடுத்து விட்டுச் சென் றுள்ளார். அப்பொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டதாகவும் கூட்ட மைப்பினர் தெரிவித்திருந்தனர். தற்போது கோத்தபாய ராஜபக்ச முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு பிரதமர் மோடியைச் சந்திக்கச் சென்றுள்ளார்.

இந்நிலையில் ஈழப்பிரச்சினை பற்றியும் மோடி பேசுவார், வலியுறுத்துவார் என்று செய்திகளைக் கசிய விட்டுள்ளனர் கூட்டமைப்பினர். அதே நேரம் இன்னொரு செய்தியும் வந்துள்ளது. தமிழ் மக்கள் பிரச்சினை பற்றி இந்திய தரப்புப் பேசுமாம் ஆனால் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிப் பேசமாட்டாதாம் என்பது தான் அது. இது ஒரு வேடிக்கையான செய்தியாகும். பதின்மூன்றுதான் தமிழர்களுக்கான தீர்வு என்று உறுதியாக நிற்கும் இந்தியா அதைப்பற்றிப் பேசாது என்றால் இப்பொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி இந்தியா பேசப்போவதில்லை என்பது தானே அதன் பொருளாகும். (சனாதிபதி இந்தியா பயணமான போது எழுதிய கட்டுரை இது.)

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதற்கு எப்பொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உண்மையான அக்கறை இருந்தது? ஒரு பொழுதும் அதற்கு அக்கறை இருந்ததில்லை என்பது தான் வரலாற்று உண்மையாகும். வெள்ளையர் தேயிலைத் தோட்டங்களையும் இறப்பர் தோட்டங்களையும் இங்கு நிறுவித் தமது பொருளியல் இலாபத்தை அடைவதற்காக இந்தியாவில் இருந்து இலட்சக்கணக்கான தமிழ் மக்களை அடிமைகளாக இலங்கையின் மலைநாட்டிற்கு அழைத்து வந்தனர். இலங்கையில் வந்து இறங்கி மலைநாட்டை அடையுமுன்னரே பல்லாயிரக்கணக்கான மக்கள் பசியாலும் நோயாலும் இறந்துவிடுகின்றனர். மிகுதி மக்களை மலையகத்திற்கு அழைத்துச் சென்று தோட்டங்களைப் பண்படுத்தி, தேயிலையையும், இறப்பரையும் வளர்த்தனர். இதில் கூட ஏராளமான மக்கள் மலேரியா போன்ற நோய்களால் இறந்தனர். வசதிகளற்ற காம்பராக்கள் அல்லது லயன்கள் எனப்படும் குடியிருப்புகளிலேயே அவர்கள் தங்க வைக்கப்பட்டனர். அவர்களின் குருதியும் வியர்வையும் தான் இலங்கை நாட்டின் வருவாயாக இருந்தது.

இவ்வாறு உழைத்த இந்தியாவில் இருந்து வந்த மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் இலங்கை சுதந்திரம் அடைந்த் 1948 இலேயே பறித்தது சிங்கள அரசு. அப்பொழுது ஆட்சியில் இருந்தது ஐக்கிய தேசியக்கட்சி. பிரதமராக இருந்தவர் டொன் ஸ்டீபன் சேனநாயகா ஆவார். இந்தியாவைத் தங்களின் பூர்வீகத் தாயகமாகக் கொண்ட மக்களை வெள்ளையர் அழைத்து வந்திருந்தாலும், நாட்டின் வருமானத்தில் எழுபது விழுக்காடு பெற்றுக்கொடுத்த மக்களின் குடியுரிமையைப் பறித்தபோழ்து கண்ணை மூடிக்கொண்டுதான் இந்திய அரசு இருந்தது.

## தமிழ்மக்களின் பலத்தைக் குறைக்க எடுத்த முதல் அடி

1947ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மலையகத்தில் இருந்து எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்க ப்பட்டிருந்தனர். அப்பொழுது நாடாளுமன்றத்தில் மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொண்ணூற்றைந்து ஆகவும், நியமனம் செய்யப்படுவோர் ஆறாகவும், மொத்தம் நூற்றியொருவர் நாடாளுமன்ற உறுப்பினர்களாவர். தமிழர்களின் வரலாற்றுத் தாயகத்தையும் மலையகத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால் தமிழ் மக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் என்பதால் மலையகத்தில் வாழ்ந்த மக்களின் குடியுரிமையை நீக்கினார்கள். குடியுரிமை இல்லாதவர்கள் வாக்கு ரிமையையும் இழந்தார்கள்.

## நாடாளுமன்ற சிங்கள உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு

இவ்வாறு குடியுரிமை பறிக்கப்பட்டதால் தமிழ் மக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தது என்றால், இதே மக்களின் குடிசன எண்ணிக்கையையும் வைத்தே தொகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தன. வாக்குரிமை இல்லாத மக்களும், தேர்தல் தொகுதியின் எண்ணிக்கையில் அடங்குவர். இதன் படி தொகுதிகள் பிரிக்கப்பட்டதன் மூலம் சிங்கள உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் கூடுதலாக அதிகரித்தது. தமிழ் மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். அப்போதும் இந்தியா கண்டுகொள்ளவே இல்லை.

## நாடற்றவர்களாக்கப்பட்ட மலையக மக்கள்

இவ்வாறு குடியுரிமை பறிக்கப்பட்ட மக்களைப் பற்றி 1953ல் இந்தியப் பிரதமர் நேருவும், இலங்கைப்பிரதமர் டட்லி சேனநாயக்காவும் பேசத் தொடங்கினர்.ஆனால் டட்லி பதவி விலகியதால் அடுத்து வந்த கொத்தலாவலையுடன் நேரு இப்பிரச்சினை பற்றிப் பேசினார். இதன் விளைவாக 1954 சனவரி 18 இல் நேரு – கொத்தலாவல ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அதன்படி சில ஆவணங்களை வைத்திருந்தால் அவர்களை இலங்கைக் குடிமக்களாகப் பதிவதாகவும் எஞ்சிய ஒரு பகுதியினருக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதாகவும் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் இதில் ஒரு சிறு அளவுதானும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் அம்மக்கள் முற்றாக நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். உலகத்திலேயே நாடற்றவர்கள் என்று ஒரு மக்கள் கூட்டம் இருந்தார்கள் என்றால் அது மலையகத் தமிழ் மக்களே ஆகும்.

இதன் பின்னர் 1964 அக்டோபர் 30ல் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும், லால் பகதூர் சாத்திரிக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று உருவானது. அதன்படி மொத்தமுள்ள 975000 மலையக மக்களைப் பொருள்களைப் பங்குபோடுவது போல் பங்குபோட்டனர். அதன்படி 300000 மக்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதென்றும் 525000 மக்களுக்கு இந்தியக் குடியுரிமை கொடுப்பதென்றும், மிகுதி 150000 பேரைப் பற்றி பின்னர் முடிவு செய்வதென்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது. இது பின்னர் டட்லியின் காலத்தில் இது நடைமுறைக்கு வந்தது. பல சிக்கல்களைக் கொண்ட ஒப்பந்தம் பின்னர் நீண்ட இழுபறியின் பின்னர் தீர்க்கப்பட்டது. பின்னர் மலையகத் தலைவர்களுடன் ஏற்பட்ட உடன்படிக்கைகளின் பின்னர் சில ஆண்டுகளின் பின் மலையக மக்களின் குடியுரிமைக்கு முழுமையான தீர்வு கிடைத்தது.

மலையகத்திலிருந்து இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்களின் நிலை தான் என்ன? அவர்களுக்கு ஒரு சீரான வாழ்வு கொடுத்ததா இந்திய அரசு என்றால் அந்த மக்கள் என்ன? என்ன? துன்பங்களுடன் இங்கு வாழ்ந்தார்களோ அதே லயன் வாழ்க்கையும், அதே குளிரில் தேயிலைத்தோட்ட வேலையுமே அவர்களது வாழ்வாக அங்கும் உள்ளது. இலங்கையில் உள்ள மலையக மக்கள் தற்பொழுது கல்வி கற்று மேன் நிலை அடைந்து வருகிறார்கள் ஆனால் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் நிலைமை மிகவும் மோசமாகவே உள்ளது. இதற்கு ஒரே காரணம் அவர்கள் தமிழ்த் தொழிலாளர்கள் என்பதே ஆகும். இந்நிலையில் தான் இந்தியா ஈழத் தமிழருக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று எமது அரசியல்வாதிகள் பல தசாப்த காலமாக கூறி வருகிறார்கள்.

## இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளும் இந்தியாவும்

இலங்கைத் தீவில் 1956,1958,1977,1981 1983 ஆகிய ஆண்டுகளில் திட்டமிட்ட தமிழ் இன அழிப்புத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இதில் 1983 இனஅழிப்பைத் தவிர இதர ஆண்டுகளில் நடத்தப்பெற்ற தாக்குதல்களை இந்திய அரசு பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. ஒரு இனத்தின் மீதான இனவழிப்புத் தாக்குதலை ஏராளமான உயிர்கள் பறிக்கப்பட்டதையும் கோடிக்கணக்கான சொத்துக்க



ளும் அழிக்கப்பட்டதையும் பெரிதாக எடுக்காத இந்திய அரசு எண்பத்து மூன்றில் நடந்த இனவழிப்பைத் தனது தேவைக்காகப் பயன்படுத்திக்கொண்டது. 1970 உயர்கல்விக்கான தரப்படுத்தலும், 1972ல் கொண்டு வரப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பும் தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்திற்குள் தள்ளியது.

இதனைத் தனது அரசியல் நோக்கத்திற்கு சாதகமாக்கிய இந்திய அரசு தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து உதவிகள் செய்து வந்தது. நான்கு ஐந்து பிரிவுகளாக இயங்கிய அணிகளை ஒன்றாக்கி பயிற்சி கொடுக்காமல், பிரிவினைகளை ஏற்படுத்தி இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்ததன் மூலம் அனைவரையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே இந்தியா திட்டமிட்டுச் செயற்பட்டது. அப்பொழுது அமெரிக்கா பக்கம் இலங்கை சென்றால் ஆபத்து என்ற நிலையில் தமிழ் இளைஞர்களை வைத்து ஜே ஆர் அரசை தனது வழிக்குள் வைத்திருந்தார் இந்திராகாந்தி.

ஆனால் அவரின் மறைவுக்குப் பின்னர் வந்த ராஜீவ்காந்தி தனது நிலையை மாற்றிக்கொண்டு விடுதலைக்குப் போராடிய இரு இனத்திற்கு இந்தியாவின் மாநிலங்களுக்கும் குறைவான அதிகாரங்கள் கொண்ட யூனியன் பிரதேசங்களுக்கான வரையறைக்குள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைத் திணித்தார். தனது நாட்டின் நலனுக்காகத் தமிழ் மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பனவற்றைப் புறக்கணித்து, தமிழ் மக்களின் சம்மதம் எதுவுமின்றி ஜே.ஆர் உடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். இது உலகில் வேறெங்குமே நடைபெறாத ஒரு புதுமையான நிகழ்வாகும்.

பிரச்சினையில் தொடர்புடைய ஒரு பகுதியினரின் பங்களிப்பும் சம்மதமும் இல்லாமல் ஒரு நாடு ஒப்பந்தம் எழுதி, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் திணித்தது. இதைத் தான் சந்தர்ப்பவாத தமிழ் அரசியல்வாதிகள் போற்றுகின்றனர். இந்தவகையில் தான் இனிமேலும் இந்திய அரசு பிரச்சினைக்குத் தீர்வு தரும் என்று மக்களுக்குக் கூறி வருகின்றனர். இந்திய அரசுகள் கடந்த காலங்களில் என்ன? என்னஃ செய்தன என்பதை மறந்து விட்டது. தமிழி னம் என்று தான் அரசியல்வாதிகள் நினைக் கிறார்கள். இரண்டாயிரமாம் ஆண் டில் யாழ் ப்பாணம் கைப்பற்ற முடியாமல் போனது வாஜ்பேயின் ஆட்சியால் என்பது தானே உண்மை. அதன் பின்பு சமாதான உடன்ப டிக்கையில் முன்னேற்றம் ஏற்படாமல் தடுத் தது இந்தியாவே. பின்னர் போர் வெடித்த பின் மன்மோகன்சிங் ஆட்சியால் ஏற்பட்ட அழிவு களையும் மறக்க முடியாது. போருக்குப் பின்னரான காலங்களில் ஐநா மனித உரிமை கூட்டங்களில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களின் தன்மையை நீர்த்துப்போகச் செய்ததில் இந்தியாதானே பெரும் பங்காற்றியது. அதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அப்பொழுது செய்தது. இப்பொழுது இந்தியா தமிழ் மக்களுக்கு என்ன செய்யப் போகிறது என்று கூற முடியுமா? இல்லை. ஏனெனில் இந்தியா சீனா பக்கம் இலங்கை போகாமல் பார்க்கவே முயல்கிறது. இப்பொழுது ஒரு வலுவான ஆயுதப் போராளிகள் அமைப்பு இருந்தால் அவர்களைக் காட்டி இந்தியா இலங்கையைப் பயமுறுத்தலாம் அது தான் இல்லையே. கூட்டமைப்பை வைத்து அதைச் செய்யமுடியாது என்பது வெளிப்படையான விடயமே!

இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளின் நிலை என்ன. அவர்கள் படும் துன்பம் எத்தகையது என்று இங்குள்ள அரசியல் தலைவர்களுக்குத் தெரியுமா? திபெத்து மக்கள் அகதிகளாக உள்ளார்கள். வங்காளதேச மக்கள் அகதிகளாக உள்ளார்கள். அவர்கள் பல சலுகைகள் பெற்று உள்ளார்கள். உயர் கல்வி வசதி, சுதந்திர நடமாட்டம் இரட் டைக் குடியுரிமை என்பன எல்லாம் அந்த அகதி மக்களுக்கு உண்டு. ஆனால் நீங்கள் அகதிகள் இல்லை நாங்கள் உங்களின் உடன்பிறப்புகள் இருக்கிறோம் என்று கூறியவர்கள் தமிழ் நாட்டை ஆட்சி செய்த போதிலும் வஞ்சிக்கப்பட்ட இனமாகவே அங்கு வதியும் ஈழ மக்கள் வாழ்கிறார்கள்.

இவ் வாறு தமிழ் மக்களை நடாத்தும் இந்திய அரசு கோத்தபாயாவுடன் தமிழ்மக்களின் பிரச்சினை பற்றிப் பேசப்போகிறது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுவது நகைப்புக்கிடமான, அவர்களுக்கே நம்பிக்கையற்ற விடயமாகும். ராஜபக்சா தரப்பினர் சீனாவின் நண்பர்கள், ரணில் இந்தியாவினதும், அமெரிக்காவினதும் நண்பர். ஆனால் ரணில் போட்டியிடாததும் இந்தியாவிற்கு அப்பொழுது கவலையையே கொடுத்திருந்தது. சஜித்தை அவ்வளவு பிடிக்காவிட்டாலும் வெற்றி பெற்றால் சமாளிக்கலாம் என்று இருந்த நிலையில் கோத்தபாயாவின் வெற்றி ஒரு இக்கட்டான நிலையை இந்தியாவுக்கு ஏற்படுத்தியுள்ளது. எனவே தான் அவசர அவசரமாக ஜெயசங்கர் கொழும்புக்கு வந்தார் பின்னர் சனாதிபதியை இந்தியாவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். எனவே இரு நாட்டுப்பிரச்சினை பற்றிப் பேசுவார்களே தவிர "பதின்மூன்று" பற்றிப் பேசப்போவதில்லை என்றநிலை தான் உள்ளது. ஆனால் கூட்டமைப்பினர் வழமைபோல் இந்தியா தமிழர் பிரச்சினை பற்றிப் பேசப்போகிறது என்று கூறி மக்களை ஏமாற்றுவதோடு அடுத்த பொதுத் தேர்தலுக்கு திட்டமிடுகின்றனர். தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டிய கூட்டமைப்பும் விக்கினேஸ்வரனும் இந்தியா தீர்க்க வேண்டும். தீர்க்கும் என்று கூறுவது உண்மையில் இயலாமையின் வெளிப்பாடே ஆகும். இது முற்றாகத் தமிழ் மக்களை ஏமாற்றும் சுய



- பிறைவாணன் -

# ஒற்றுமைக்கு அறைகூவல் விடும் சுமந்திர தந்திரம்

தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை அவசியம் என்றும் கட்சிகள் அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை உடைத்துவிட்டு இன்று தமிழ்க் கட்சிகளி டையே ஒற்றுமை அவசியம் என்று இவர் கூறுவது வேடிக்கையானது.

தேசியத் தலைவர் பிரபாகரனினால் தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இன்று இந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு துண்டு துண்டாக உடைந்து இருப்பதற்கு சுமந்திரன் காரணம் என்பது அந்தக் கட்சியில் இருந்து வெளியே வந்தவர்கள் வெளிப்படையாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். சுமந்திரன் தேசியப் பட்டியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எப்பொழுது வந்தாரோ அன்றிலிருந்து அரசியல் நகர்வில் பல தோல்விகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டுள்ளது. தமிழரசுக் கட்சியை பலமுள்ள தாக்குகின்றேன் என்று அக் கட்சியின் யாழ். மார்ட்டின் வீதியில் உள்ள செயலகத்தில் வைத்து நம்பிக்கை தெரிவித்துள்ளதால் சுமந்திரன் எப்படி ஆடினாலும் பார்த்துக் கொண்டிருக்கவே தமிழரசுக்கட்சி உறுப்பினர்களால் முடிந்தது. உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக்கட்சியின் பலம் உடைந்தது. ஜனாதிபதி தேர்தலில் அவர்களின் கணக்கு தவறாகிவிட்டது. புதிதாக வந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ கடந்த அரசு எடுத்துக் கொண்ட வேலைத்திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். இதில் அரசியல் தீர்வும் கைவிடப் பட்டுள்ளது என்ற செய்தி யும் உள்ளடங்கக் கூடும்.

ரணில் அரசை நிலை நிறுத்துவதில் பலநகர்வுகளை மேற்கொண்ட சுமந்திரனால் அரசியல் தீர்வுவிடயத்தில் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விட்டமை தனது அரசியல் வாழ்வில் இனி ஒன்றுமே இல்லை என்ற நிலை வந்ததும் தான் ஒற்றுமை பற்றி பேச வந்துள்ளார். இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த கட்ட நகர்வை எப்படி மேற்கொள்வது என்பது தொடர்பில் வழி தெரியாமல் உள்ளது. மக்களுக்கு இனி என்ன சொல்லி நம்ப வைப்பது. அதாவது பொறுப்பு ஒன்றுமே கையில் இல்லாத நிலையில் எப்படி பொறுப்பு கூற முடியும் என்ற நிலையில் இருக்கின்றனர். ரணில் அரசை காப்பாற்றுவதற்கு சுமந்திரனால் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளால், தமிழரசுக்கட்சியால் இனி மேல் ஒன்றுமே செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதனால் இன்று பேரம் பேசும் சக்தியாக தமிழரசுக் கட்சி இல்லாத காரணத்தால் தென்னிலங்கையை தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். எதிர்வரும் மாதங்களில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெ றவுள்ளது. இதில் தேர்தல் களமானது வித்தி யாசமானதாக இருக்கப் போகிறது. இந்தத் தேர்தலை தமக்கு சாதகமாக மாற்றுவதற்கு தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் கட்சிகள் ஒற்றுமை என்ற கருத்தை சுமந்திரன் வாயால் உச்சரிக்கத் தொடங்கியுள்ளார். அவருக்கு கசப்பாக இருந்தாலும் காய்ச்சல் வந்தால் குளிசை குடிப்பது போல் குடித்தே ஆக வேண்டிய சூழலில் சுமந்திரன் உள்ளார். விடுதலைப் புலிகள் என்ன நோக்கத்திற்காக அனைத்து தமிழ் கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டமைப்பை உருவாக்கினார்களோ அந்த நோக்கத்தை ஏற்றுக்கொண்டு தமிழ்த் தேசியக் கொள்கைகளை பற்றுறுதியுடன் பின்பற்றுவதற்கு தயாராக வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒருஅரசியல் கட்சியாக பதிவு செய்து ஒரு பொதுச் சின்னத்திலாவது போட்டியிடத் தயாராக வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015ஆம் ஆண்டிலிருந்து மைத்திரி - ரணில் அரசை பாதுகாத்ததோடு போர்க்குற்றவாளிகளையும் தப்பிப்பிழைக்க வைத்ததிற்கு என்ன காரணம் கூறவுள்ளார்கள். அரசியல் தீர்வுவரவில்லை என்றால் தனது பதவியை இராஜினாமா செய்வேன் என சுமந்திரன் கூறியமை அரசியலுக்காகவே என்பதை எப்படி வெளிப்படுத்தவுள்ளார்.

இனிமேல் ஐக்கியம் ஒற்றுமை வருமா என்பது கேள்விக்குறிதான். ஆயிரக் கணக்கான மாவீரர்களதும், பொதுமக்களின் உயிர்த்தியாகம், நிகழ்ந்த இந்த மண்ணில் ஐக்கியம் என்ற போர்வையில் தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியும் என்று சுமந்திரன் நம்புகின்றாரா. சுமார் பதினெட்டு வருடங்களாக எந்தவொரு விடயத்தினையும் ஆக்கபூர்வமாக முன்னெ டுக்கவில்லை. இராஜதந்திர நகர்வுகளும் தோல்வியடைந்துவிட்டது. இனி தமிழ் மக்களின் நலனுக்காக எதனை செய்யமுடியும் என்ற கேள்வி எழுகி ன்றது.



மாசிலான்

# தமிழ்க்கட்சிகளின் தேர்தலை நோக்கிய அரசியல் யாத்திரை

சனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் தமிழ் மக்களின் நினைவை அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்த நிலைக்கு இட்டுச் செல்வதிலேயே பலரும் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழினத்தின் பிரச்சினைக்கு என்ன வழி காண்பது என்ற சிந்தனை எதுவும் இல்லாமல் அடுத்த நாடாளுமன்றத்தில் எப்படி வெற்றி பெற்று கதிரையை கைப்பற்றுவது என்ற சிந்தனை தான் அனைவரின் மனதிலும் குடிகொண்டிருக்கும் வேட்கையாகும்.

சமூக ஆர்வலர்கள் என்று கூறிக்கொண்டோர் திடுதிப்பென விழித்தெழுந்து சனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேடி விட்டு ஓய்ந்து விட்டனர். அடுத்துப் புறப்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஒரு வழியைக் காட்டும் என்று நம்பினர் மக்கள். அவர்களும் ஆறு தமிழ்க் கட்சிகளை அழைத்துப் பேசினார்கள், ஒற்றுமையை ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையை அவர்கள் மக்களுக்கு ஊட்டினர். பதின்மூன்று கோரிக்கைகளைத் தயாரித்தார்கள் கூட்டாக அங்கு சென்ற கட்சிகள். நல்ல முன்னேற்றம் தமிழினத்தை மாணவர்கள் ஒற்றுமைப்படுத்திவிட்டனர் என்று தான் மக்களும் நம்பினர். ஆனால் அந்த நம்பிக்கையை போட்டுடைத்தன அக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட கட்சிகள்.

முதலில் தங்களின் கோரிக்கைகளை வேட்பாளர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அடுத்து என்ன செய்வது அடுத்த நடவடிக்கை என்னவென்று மாணவர் ஒன்றியம் முடிவு செய்யத் தவறிவிட்டது. அக்கோரிக்கைகளில் கையெழுத்திட்ட கட்சிகளும், அக்கோரிக்கைகளை கைவிட்டு விட்டே தேர்தலில் தமக்குப் பிடித்த வேட்பாளர்களை ஆதரித்தன. மாணவர் ஒன்றியம் ஒரே ஒரு அறிக்கை விட்டதுடன் தனது பணியை நிறுத்திக்கொண்டது. அவ்வறிக்கையில் மாணவர் ஒன்றியம் கூறியது "சனாதிபதித் தேர்தல் முடிவடைந்து மூன்று மாதத்தில் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் அடுத்த பொதுத் தேர்தலில் நல்ல பாடம் படிப்பிப்போம் அவர்களுக்கு" என்று. இது ஒரு முதிர்ச்சியற்ற அணுகுமுறையாகும். தேர்தல் தான் மாணவர் ஒன்றியத் தின் இலட்சியமா? மாணவர் ஒன்றியம் கட்சிகளுடன் இணைந்து தயாரித்த கோரிக்கைக ளைப் பற்றிய நிலை என்னவாயிற்று? கோரிக்கைகளில் கையெழுத்திட்ட எந்தக் கட்சியும் கோரிக்கை களை கைவிட்டுத்தான் சனாதிபதித் தேர்த லில் நடந்து கொண்டன. எனவே மாணவர் ஒன்றியம் பொதுத்தேர்தலில் யாரு க்குப் பாடம் புகட்டப்போகிறது. அனைத்தும் குழப்பமாகவே இருக்கிறது. சஜித் வெற்றிபெற்றால் புதிய யாப்பை நிறைவேற்றுவார். அதில்

மாணவர்களின் கோரிக்கைகள் அடங்கியிருக்கிறது என்று கூறலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர். அது கத்தரித்துப் போய்விட்டது. சஜித் வென்றிருந்தாலும் அவரால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் புதிய யாப்பைக் கொண்டு வர முடியாது. இது தான் யதார்த்தம். ஆனால் சஜித் புதிய யாப்பின் மூலம் தீர்வு தந்திருப்பார் மூன்றில் இரண்டு இல்லாமல் போய்விட்டது எனவே அடுத்த தேர்தலில் அமோகமாகக் கூட்டமைப்பை ஆதரித்து வாக்களித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள் எப்படியும் தீர்வு பெற்றுத் தருவோம் என்று மாணவர்களுக்கு கூறி இருப்பார்கள் கூட்டமைப்பினர். இதனை மாணவர்களும் நம்பி ஏற்று இருப்பார்கள். ஆனால் சஜித்தின் தோல்வி கூட்ட மைப்பின் இந்த எண்ணத்திற்கும் சாவுமணி அடித்து விட்டது.

இங்கே மாணவர் ஒன்றியம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தேர்தல் அரசியல் மூலம் மட்டும் தமிழினத்தின் தீர்வைப் பெற முடியுமா. நாடாளுமன்றத்திற்குச் சென்றால் உரிமைகள் கிடைக்கும் என்பது அறிவுசார்ந்த சிந்தனையாக இருக்க முடியாது. எனவே தேர்தலில் பாடம் புகட்டுவோம் என்ற தேர்தல் சிந்தனையை நீங்கள் ஏன் நாடினீர்கள் என்பது தான் இங்கு எழும் வினாவாக உள்ளது.

## யார் இந்தப் புத்திசீவிகள்.?

சனாதிபதித் தேர்தலுக்குப் பொது வேட்பாளர்களைத் தேடியவர்கள் சமூக நலன்விரும்பிகள் என்று கூறினார்கள். அவர்கள் திடீரென்று வந்தார்கள். இப்பொழுது காணாமல் போய்விட்டார்கள் போல் உள்ளது. இப்பொழுது புதிய கூட்டணி ஒன்று அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தேவை என்று கூறிக்கொண்டு புத்திசீவிகள் என்று சொல்வோர் புறப்பட்டுள்ளனர். புத்திசீவிகள் எனப்படுவோர் உண்மையில் யார்? கூட்டமைப்புக்கு மாற்றாக ஒரு புதிய கூட்டணி புதிய தலைமையில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தான் இந்தப் புத்திசீவிகள் கூறுகிறார்கள். இந்தப் புத்திசீவிகள் அரசியலுக்குள் நேரடியாக வரமாட்டாதவர்களா? புத்திசாலித் தனமாகச் சீவித்துக்கொண்டு அவர்களைத் தெரிவு செய்யுங்கள் இவர்களைத் தெரிவு செய்யுங்கள் என்று கூறும் தகைமை இவர்களுக்கு எப்படி வந்தது. இவர்கள் தான் புத்திசீவிகள் என்றால் அவர்களுக்குரிய தகுதி தான் என்ன.? புத்திசீவிகளுக்கான வரைவிலக்கணம் உண்டா? அரசியலில் இருக்கும் எவரும் புத்திசீவிகள் இல்லையா? எக்கட்சியினருக்குமில்லாத புத்திசாலித்தனம் இவர்களுக்கு இருக்கிறதா? என்று கேட்கவேண்டியுள்ளது.

புத்திசீவிகள் இதுவரை தமிழினத்துக்குக் காட்டிய வழி என்ன? இவர்களிடம் என்ன அடிப்படைக் கொள்கைகள் இனம் சார்ந்து உள்ளது? இவர்கள் கூட்டும் கூட்டணி ஒரு மாற்றுக்கூட்டனி என்றால் அதன் வடிவம் எப்படியிருக்கும் என்ன அடிப்படைக் கொள்கைகள் இலட்சியங்கள் என்று கூற வேண்டியது இப்புத்திசீவிகளின் பொறுப்பல்லவா.! இப்பொழுது தமிழ் மக்களின் முன்னால் இருக்கும் கட்சிகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்த்து அனைத்தும் இந்தியா தீர்வு தரவேண்டும் இந்தியா தீர்வு பெற்றுத் தரும் பதின்மூன்று கூட்டல், கழித்தல் என்று தான் அரசியல் பேசுகின்றன. ஆனால் இரு பிரிவாகத் தேர்தல் அரசியல் செய்கிறார்கள். இதில் எந்த ஒழிவும் இல்லை மறைப்பும் இல்லை. இதில் ஒரு பகுதிதான் புத்திசீவிகளின் தெரிவாக இருக்கப் போகிறதா என்பதை முன்கூட்டியே சொல்ல வேண்டும். இல்லாமல் தாங்களாக சில திட்ட வரைவுகளைத் தயாரித்து அனைவ ரையும் அழைத்துப் பேசி ஒரு கூட்டணியை ஏற்படுத்துவார்களா? அது தேர்தலுக்கு மாத்தி ரமானதாக அமையக் கூடாது.

தேர்தலில் போட்டியிடுவது வேறு. தேர்தலின் பின்னர் அவர்கள் "இந்தியா பெற்றுத் தரும் நாங்கள் நாடாளுமன்றத்தில் பேசினோம்" என்று இருக்கக்கூடாது. ஏனெனில் அதைத் தான் தமிழினம் நாற்பத்தேழு முதல் என்பத்து மூன்று வரை கண்டது. அதன் பின்னர் புத்திசீவிகள் அல்லாத பெரும் படிப்புப் பட்டங்கள் பெறாதவர்களால் தெளிவான வழிகாட்டலில் தமிழினம் வீறுநடை போட் டது. எனவே இப்பொழுது வெறும் தேர்தல் அரசியலையும் தாண்டிய இனத்தின் உரிமைகளுக்கான அரசியற்பாதை தான் வேண்டும். கூட்டமைப்பு நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுக்கு இருபது நாடாளுமன்ற உறுப்பி னர்களைத் தருமாறு மக்களுக்கு வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். தாங்கள் யாரையும் கூட்டமைப்பில் இருந்து விலக்கவில்லை என்றும் சிலர் தாங்களாகவே சிலர் விலகிச் சென்றுள்ளார்கள் என்றும் கூறியுள்ளது. இதே நேரம் சுரேக்ஷ் பிரேமச்சந்திரன் தாங்கள் விக்கினேஸ்வரன் தலைமையில் புதிய கூட்டணியை விரைவில் உருவாக்கப்போவதாகவும் கூறியுள்ளார். கூட்டமைப்பில் சம்பந்தனும் சுமந்திரனுமே முடிவுகளை எடுப்பதாகவும். கூட்டமைப்பில் உள்ள இதர கட்சிகளின் கருத்துகளை அவர்கள் கேட்பதில்லை என்றும் குற்றம் சுமத்தியுள்ளார் அவர். ஆனால் அவரும் மாணவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு கூட்டமைப்புடன் கையெழுத்துப் போட்ட வரே ஆகம்.

## பதின்மூன்றின் ஆயுள் முடிந்துவிட்டது

இக்கட்சிகள் யாவும் இந்தியா தீர்வு பெற்றுத் தரும், என்றே கூறிவருகின்றனர். தாங்கள் நாடாளுமன்றம் செல்லவேண்டும் இந்தியா தீர்வு தரும் என்ற கொள்கை என்பது ஒரு பெரும் ஏமாற்று அரசியலாகும். இந்தியப் பிரதமரும் கோத்தபாயாவும் என்ன பேசினார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆனாலும் பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்திற்கமையத் தீர்வு இருக்க வேண்டும் என்று இந்தியா கூறியதாகவே கூறப்படுகிறது. ஆனால் கோத்தபாய ராஜபக்ச பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு மாறாக எந்தத் தீர்வும் வழங்கப்பட முடியாதென்று கூறியுள்ளதுடன், அரசியல் யாப்பு நடைமுறையில் இருப்பதாகவும், அதன்படி பதின்மூன்றாவது திருத்தமும் நடைமுறையில் இருப்பதாகவும் கூறியுள்ளார். அதனடிப்படையிலேயே தமது அரசு மாகாணசபைத் தேர்தலை வடக்கிலும் கிழக்கிலும் நடத்திச் சனநாயகத்தை நிலைநாட்டியதாகவும் கூறியுள்ளார். ஆனால் காணி அதிகாரம் காவற்றுறை அதிகாரம் போன்ற சில அதிகாரங்கள் வழங்க முடியாத நிலை இருப்பதாகவும் கூறியுள்ளார். அத்துடன் இனப்பிரச்சினை என்பது தமிழர்களுக்குக் கிடையாது எனவும் அபிவிருத்தியும் பொருளியல் வளர்ச்சியுமே தமிழ் மக்களுக்கான இன்றைய தேவை என்றும் அவை தீர்க்கப்பட்டால் இனப்பிரச்சினை முடிவடைந்து விடும் என்று கூறியுள்ளார். அவரது இக்கூற்றுக்கு அடித்தளமிட்டவர்கள் கூட்டமைப்பினரே ஆகம்.

தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி வேண்டும் முதலில் அவற்றை நாம் ஏற்றுக் கொள்வோம் கம்பரெலிய போன்ற அமைப்பின் மூலம் அபிவிருத்தி காணுவோம் என்று கூட்டமைப்புச் சொல்லியதை வைத்தே சனாதிபதியும் இவ்வாறு கூறியுள்ளார். பதின்மூன்று இருக்கும் ஆனால் அதிலுள்ள காணி அதிகாரம் வழங்கப்படாது. காவற்றுறை அதிகாரம் வழங்கப்படாது என்று இந்தியாவில் வைத்தே சனாதிபதி கூறியுள்ளார். இந்நிலையில் அரசியல் பேசிக்கொண்டிருக்கும் கட்சிகள் இந்தியாவினூடாக பதின்மூன்று பெற்றுக் கொள்ள முடியும் என்று மக்களை ஏமாற்றி நாடாளுமன்ற நாற்காலிகளில் கண்வைத்துச் செயல்படுகிறார்கள்.

## வீணாய்ப்போன சம்பந்தனின் வேணவா

**சம்பந்தனுக்கு ஒரு வேணவா இருப்பதாக அறிவித்துள்ளார். அது பதின்மூன்றாவது திருத்தத்தைச் சனாதிபதி நடைமுறைப்படுத்தி இந்தியாவின் வேணவாவை நிறைவேற்ற வேண்டுமாம். ஒரு பெரிய கட்சியின் தலைவர் என்று கூறிக்கொள்பவர் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கேட்கவேண்டியவர் இந்தியாவின் வேணவாவை நிறைவேற்றுமாறு கூறுவது எவ்வளவு கேலிக்குரியதாகும். ஆனால் இந்தச் சம்பந்தனின் வேணவா வீணவாவாகப் போய்விட்டது**

உண்மையில் யதார்த்தம் என்னவென்றால் பதின்மூன்றின் ஆயுள் முடிந்துவிட்டது. இன்று சிறிலங்காவின் ஆட்சியாளர்களே இந்தியாவிற்குத் தேவை. அவர்களைச் சீனாவிலிருந்து கொஞ்சம் எட்ட வைக்க வேண்டும் என்றால் தமிழர் பிரச்சினையை இந்தியா கையில் எடுக்க முடியாது. ஆனால் தமிழரசுக்கட்சியின் தலைவர் சேனாதிராசா இந்தியாவை அணுகுவோம், பதிமூன்றை வலியுறுத்துவோம், அவரை சந்தித்துப் பேச நேரம் ஒதுக்குமாறு கோரவுள்ளோம் என்று இங்கு அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்க வேண்டி யது தான், இந்தியா எந்தவித நெருக்குதல்க ளையும் இலங்கைக்குக் கொடுக்கப்போவதில்லை. நாடாளுமன்ற அரசியல் என்பது வாக்குக்கே ட்பதும் மக்கள் வாக்களிப்பதும் பின்னர் நாடாளுமன்றத்தில் எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் காரசாரமாக உரையாற்றினார் என்று ஏடகளில் படித்து மகிழ்வதும் சிலர் முகநூலில் பிரமாதமாகப் பேசினார் எங்கள் உறுப்பினர் என்று பதிவு செய்து மகிழ்வதுடன் முடிந்து போன அடுத்த சந்ததி ஒட்டு மொத்தமாகவும் உரிமைகளற்ற நாதியற்ற இனமாகவே போய்விடும்.

**இது குறித்து சிந்திக்க வேண்டியவர்கள் இவர்களுக்கு இனிமேலும் வாக்களிக்கப் போகும் மக்கள்.. அதாவது வாக்காளப் பெரும் குடி மக்கள் தான்!**



# அமைச்சர் நியமனங்களில் முஸ்லிம்கள் புறக்கணிப்பு.. கருத்துக்களும் ஆதங்கங்களும்..

இலங்கை ஜனாதிபதியாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவாகிய நிலையில், இடைக்கால அரசாங்கத்தின் புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து, 16 பேர் கொண்ட புதிய அமைச்சரவை ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டது.

இந்த புதிய அமைச்சரவையில் இரண்டு தமிழ் அமைச்சர்கள் இடம்பிடித்திருந்தனர். ஆனால், முஸ்லிம்கள் எவருக்கும் இடமில்லை. அதனைத் தொடர்ந்து, புதிய அரசாங்கத்தின் இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்து கொண்டனர். வழங்கப்பட்ட இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சுப் பொறுப்புக்களில் தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ நியமிக்கப்படவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் அமைக்கப்பட்ட புதிய அமைச்சரவையில் முஸ்லிம்கள் எவரும் இடம்பெறாத நிலையில், நியமிக்கப்பட்ட இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களிலும் முஸ்லிம் ஒருவரேனும் இடம்பெறவில்லை என்பது, முஸ்லிம் மக்கள் மற்றும் அரசியல்வாதிகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

15 பேர் கொண்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட போதிலும், அதில் முஸ்லிம்கள் எவரும் இடம்பெறவில்லை. ஆனால், டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆறுமுகம் தொண்டமான் என, தமிழர் இருவர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த நிலையில் முஸ்லிம் தரப்பினர் என்ன சொல்லுகிறார்கள் பார்ப்பம்?

"முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சுப் பதவியொன்றும் வழங்கப்படவில்லை என்பதை முஸ்லிம் சமூகமும், முஸ்லிம் நாடுகளும் பார்த்துக் கொண்டிருக்கின்றன" என்று கூறியதோடு,அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக அல்லது இன்று வழங்கப்பட்ட இராஜாங்க அல்லது பிரதியமைச்சர் பதவிகளுக்கேனும் முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் அனுபவத்தில் மூத்தவர்கள் என்ற அடிப்படையில்தான் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன். அதனால், ஆளுந் தரப்பில் முஸ்லிம்கள் இடம்பெறாமல் போயிருக்கக்கூடும் என்றும் சிலர் ஊகம் தெரிவிக்கிறார்கள். இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபாவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படாததால், இராஜாங்க மற்றும் பிரதியமைச்சுப் பதவிகளும் தனக்கு வேண்டாம் என்று கூறிவிட்டார். மறுபுறம், நானும் இந்த தடவைதான் நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர் என்பதால், ஆளுந்தரப்பில் என்னை விடவும் பல மூத்தவர்கள் உள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஆட்சியாளர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆயினும் காலப்போக்கில் இந்தக் குறையை ஆட்சியாளர்கள் நிவர்த்தி செய்வார்கள் என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார். ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான காதர் மஸ்தானுக்கு ஆகக்குறைந்தது பிரதியமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்கிற பேச்சுகளும் எதிர்பார்ப்பும் அரசியல் வட்டாரங்களில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் பதவிக்கு முஸ்லிம் ஒருவரையேனும் இந்த ஆட்சியாளர்கள் நியமிக்காமல் விட்டதன் மூலம், முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் மைத்திரி அரசாங்கத்தில் பிரதியமைச்சர் பதவியை வகித்தவருமான பைசல் காசிம் தெரிவித்துள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பைஸர் முஸ்தபா ஏற்கனவே அமைச்சராக இருந்தவர். எனவே, அவரை அமைச்சராக இந்த அரசாங்கம் நியமித்திருக்கலாம். ஆனால், இதனையெல்லாம் செய்யாமல் முஸ்லிம்களை இந்த ஆட்சியாளர்கள் பழிவாங்கியுள்ளனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம்கள் இரண்டு தரப்பாகப் பிரிந்து வேட்பாளர்களுக்கு வாக்களித்திருந்தனர். ஆனால், அந்த இரண்டு தரப்புக்களும் பௌத்த சமயத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுக்குத்தான் வாக்களித்திருந்தனர். சஜித் பிரேமதாஸவுக்கு நாங்கள் ஏன் வாக்களித்தோம்? என்பதும், மற்றைய முஸ்லிம் தரப்பு கோட்டாவுக்கு ஏன் வாக்களித்தனர்? என்பதும் அவரவரின் விருப்பமாகும். அதற்காக முஸ்லிம் சமூகத்தை ஆட்சியாளர்கள் பழிவாங்கக் கூடாது. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நடந்த சம்பவங்கள் முஸ்லிம்களுக்கு கசப்பை ஏற்படுத்தியிருந்தது. அதனால் தான் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் கோட்டா வுக்கு எதிராக வாக்களித்திருந்தனர். ஆனாலும் முஸ்லிம்களின் மனதில் உள்ள கசப்பை நீக்குவதற்கான சந்தர்ப்பம் இப்போது ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனை அவர்கள் செய்து, முஸ்லிம்களின் ஆதரவை வென்றெடுக்க வேண்டும். ஆனால், இவ்வாறு முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காமல் புறக்கணித்தால், அந்த சமூகத்தின் மனதில் ஏற்பட்டுள்ள கசப்பு மேலும் அதிகரிக்கவே செய்யும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சியாளர்கள் சிறுபான்மை மக்களை அனுசரித்து, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக் கூடியவர்கள் இல்லை என்பதை நிரூபித்திருக்கிறார்கள் என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்பு செயலாளருமான கே.எம். ஜவாத் தெரிவித்துள்ளார். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியவர்கள் இனவாதத்தைத்தான் தமது மூலதனமாக்கியிருந்தனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இனவாதப் பல்லவியைத் தான் ஆட்சியாளர்கள் பாடப் போகிறார்கள். அதற்காகத்தான், தமது அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காமல் புறக்கணித்துள்ளனர். இதன் மூலம், தமது அரசாங்கத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்று, சிங்களப் பேரினவாதிகளுக்கு காட்டுவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சித்திருக்கிறார்கள். ஆனால், இந்த இனவாதம் அடுத்த தேர்தலில் தோற்கடிக்கப்படும். தமிழர்களும் முஸ்லிம்களும் இன்றி, நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைக் கூட, இந்த ஆட்சியாளர்களால் பெற முடியாத நிலை ஏற்படும். மறுபுறமாக, முஸ்லிம்களை இவ்வாறு புறக்கணித்ததன் மூலம், இலங்கையில் சிறுபான்மையினர் சார்ந்த விடயங்களில் நியாயமாக நடந்து கொள்ளக்கூடிய ஆட்சியாளர்கள் இன்னும் வரவில்லை என்பதை, உலக நாடுகளுக்கு, தற்போதைய ஆட்சியாளர்கள் நிரூபித்திருக்கின்றனர் என்று மேலும் தெரிவித்து ள்ளார்.

**துன்னாலைச் செல்வம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவு் க்கு பஷீர் சேகுதாவூத் தலைமையிலான ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது. இதற்காக முஸ்லிம் சமூகம் சார்பில் 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, கோட்டாபய ராஜபக்ஷவின் பொதுஜன பெரமுன கட்சியுடன் இவர் தலைமையிலான ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு - புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினையும் செய்து கொண்டது. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு, கோரிக்கைகளை முன்வைத்து ஒப்பந்தமொன்றினை செய்து கொண்ட ஒரே முஸ்லிம் கட்சி ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பின்னணியில், பஷீர் சேகுதாவூத் தரப்பினர் ஆதரவளித்த ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தற்போது வெற்றி பெற்றுள்ள நிலையில், அதுகுறித்து பசீர் ஊடகங்களுக்கு தெரிவிக்கும் போது **தனித்துவம் என்கிற அதீதமான பேச்சு, முஸ்லிம் சமூகத்தைத் தனிமைப்படுத்தி விட்டது அடையாளத்தையும் தனித்துவத்தையும் பேணிக் கொண்டு, தனிமைப்படாமல் இருப்பதற்குரிய அரசியலை முஸ்லிம்கள் செய்ய வேண்டும். மூடுண்ட மனநிலையில், அறிவியல் பூர்வமான அரசியல் பார்வையைக் கொடுக்காத தலைவர்கள், தமிழர்களையும் முஸ்லிம்களையும் உணர்ச்சிவசப்பட்டு வாக்களிக்கும் இயந்திரங்களாக மாற்றிவிட்டது.**

அவர் மேலும் கூறுகையில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியானது, இலங்கை அரசியலில் பெரிய மாறுதலையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தும். இதன் மூலம் புதிய யுகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கும் இடையில் புரிந்துணர்வு வரக்கூடிய வகையிலான வேலைத்திட்டங்களை எதிர்காலத்தில் செய்ய வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு எங்களுக்கு இருக்கிறது. யாரும் யாரையும் பழிவாங்

## அமைச்சர் நியமனங்களில்....

காத வகையில், குரோத உணர்வுகள் இல்லாத வகையில் மத, இன, மொழி அடிப்படை யிலான வேறுபாடுகள் இல்லாத வகையில், புதியதொரு இலங்கையைக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற எண்ணம் இந்தப் புதிய அரசாங்கத்துக்கு இருக்கிறது. எதிர்கால த்தில் எல்லா மக்களும் சேர்ந்து, கைகோர்த்து வாழ்கின்ற புதியதொரு நிலைமைக்கு நாட்டைக் செல்ல வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் தங்களுக்குரிய தலைவர் யார் என்பதைத் தனியாகத் தெரிவு செய்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையானது புதிய தலைமுறைக்குள் விரிசலாக வளராமல் எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எல்லா அரசியல்வாதிகளுக்கும், இன - மதத் தலைவர்களுக்கும் உள்ளது. "காலகாலமாக தமிழர்களும் முஸ்லிம்களும் சேர்ந்துதான் சிங்களத் தலைவர் ஒருவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதியாகத் தெரிவு செய்து வருகின்றனர் என்கிற பெருமையடிப்பு தமிழ்பேசும் மக்களிடம் இருக்கிறது".

ஆனால், அந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். பெரும்பான்மையினமாக இருக்கும் மக்கள் நாங்கள், பெரும்பான்மையாக வாக்களித்து, பெரும்பான்மையினத் தலைவர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் என்கிற எண்ணப்போக்கு 2015ஆம் ஆண்டிலிருந்து சிங்கள மக்களுக்குள் பெருவாரியான எடுப்போடு வளரத் தொடங்கி விட்டது. அந்த வளர்ச்சிதான் கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடைத்திருக்கும் இந்த வெற்றியாகும். "மூடுண்ட மனநிலையில், அறிவுபூர்வமான அரசியல் பார்வையைக் கொடுக்காதவ ர்கள் தலைமை தாங்கி, தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களிடையே அரசியல் செய்து வந்தனர். அதனால், உணர்ச்சிவசப்பட்டு வாக்களிக்கும் இயந்திர ங்களாக தமிழர்களையும், முஸ்லிம்களையும் அந்தத் தலைவர்கள் மாற்றியிருக்கின்றனர்".

"தமிழ் மக்களோடு வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் இணை ந்து வாழ்கிறோம் என்கிற அடிப்படையில், அவர்களோடு சினேகபூர்வமான உறவை வளர்த்துக் கொள்ளுதல் வேண் டும் ஏன்கிற புதிய அரசியலைச் மேற்கொள்ள வேண்டும். அடையாள அரசியலில் நீண்ட காலம் நிலைத்திருக்க முடி யாது. அடையாளத்தையும் தனித்துவத்தையும் பேணிக் கொண்டு, தனிமைப்படாமல் இருப்பதற்குரிய அரசியலை முஸ்லிம்கள் செய்ய வேண்டும்". எதிர்காலத்தில் வடக்கு - கிழக்கிலும் அதற்கு வெளியிலும் வாழ்கிற முஸ்லிம்கள் அறிவு பூர்வமாக அரசியல் செய்கின்ற தலைவர்களை தமக்குள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பஷீர் சேகுதாவூத் மேலும் தெரிவித்துள்ளார்.


இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து முஸ்லிம் மக்கள் மீதான சிங்கள மக்களின் உறவில் விரிசல் அடைந்திருப்பது இந்த தேர்தல் மூலம் தெரியவந்துள்ளது. இதன் காரணமாகத்தான் என்னவோ அமைச்சுப் பதவி களை வழங்குவதற்கு புதிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தவிர்த்திருப்பதாகவும் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிட த்தக்கது.




# அறிவை வளர்க்கும் முடி திருத்தகம்







வாசிப்பைத் தூண்டும் விதமாக "புத்தகம் வாசித்தால் முடிதிருத்தும் கட்டணம் குறைக்கப்படும்" என அறிவித்துள்ளார் தூத்துக்குடி லைப்ரரி சலூன் கடை உரிமையாளர் பொன்.மாரியப்பன்.

டீக்கடைகளுக்கு அடுத்த படியாக அரசியல் பேசப்படும் இடம் சலூன்கடை. வழக்கமான சலூன்களில் காணப்படும் சினிமா நட்சத்திரங்களின் படங்கள் இந்தக் கடையில் இல்லை. மாறாக தூத்துக்குடியில் உள்ள ஒரு சலூனின் அலமாரியில் புத்தகங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.
தன் கடைக்கு வருபவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் விதமாக சலூன் கடைக்குள் சிறிய நூலகத்தை அமைத்துள்ளார். பொன்.மாரியப்பன். தூத்துக்குடி மில்லர்புரத்தில் உள்ளது இவரது லைப்ரரி சலூன்.

**பொன்மாரியப்பனின் முடிதிருத்தத்துள் நுழைந்தால்.......**
கடைக்குள் நாளிதழ்கள், வார இதழ்களுடன், கதை, சிறுகதை, கவிதை, வரலாறு, இலக்கியம், ஆன்மிகம், நாவல்... எனச்சுமார் 400-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.
முடிவெட்டுவதற்காகக் காத்திருக்கும் நேரத்தில், புத்தகங்களை ஆர்வத்துடன் எடுத்துப் படிக்கிறார்கள் வாடிக்கையாளர்கள். வெட்டிப் பேச்சு, சினிமா பாடல்கள் என எந்த சத்தமுமின்றி, முடிவெட்டும் கத்தரிக்கோல் சத்தம் மட்டுமே கேட்கிறது.

**பொன்.மாரியப்பனிடம்பேசினோம்.**
"சின்னவயதிலிருந்தே எனக்கு புத்தகங்கள் வாசிக்க ஆர்வம்உண்டு. 8-ம் வகுப்பு வரைக்கும் தான் படிச்சேன். சில ஆண்டுகள் வேறு சிலவேலைகளைச் செய்துட்டிருந்தேன். அதுக்குப் பிறகு, அப்பா செய்து வந்த இந்தத் தொழிலையே தொடரஆரம்பிச்சேன். முடிவெட்ட ஆள்வராத நேரத்துல புத்தகம் வாசிப்பேன். இப்படி, முழுமையா படிச்சு முடிச்ச புத்தகங்களை அலுமாரியில அடுக்கி வைச்சேன். முடிவெட்ட கிடைக்கும் பணத்துல, ஒருபகுதியைப் புத்தகங்கள் வாங்க ஒதுக்கிடுவேன்.

**கட்டணக்குறைப்பு அறிவிப்பு நோட்டீஸ்டன்.**
இந்தக் கடையை வெச்சு ஆறுவருஷம் ஆகுது. கடைக்கு முடிவெட்டவர்றவங்க உள்ளே வந்ததும் "ஏதாவது குத்துப்பாட்டாப்போடுங்க "னு சொல்வாங்க. பாட்டைக்கேட்டுட்டே செல்போனையும் பார்த்துட்டு இருப்பாங்க. இதைவிட கொடுமை என்னன்னா முடிவெட்டும்போதும் செல்போனை பார்த்துட்டு கேம்விளையாடிட்டு இருப்பாங்க.

புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கணும் குறைந்தபட்சம் முடிவெட்ட வந்திருக்கும் நேரத்துலயாவது புத்தகங்களைப் படிக்க வைக்கணும்னு நினைச்சேன். தனியா புத்தக அலுமாரி ஒண்ணுவாங்கி அதுல என் கைவசம் இருந்த புத்தகங்ள் அனைத்தையும் வரிசையா அடுக்கிவெச்சேன். முடிவெட்ட காத்திருப்பவர்களிடம், பிடிச்ச புத்தகத்தை எடுத்து படிக்கச்சொன்னேன். முதலில் தயக்கம் காட்டியவர்கள் பிறகு எடுத்து மேலோட்டமா புரட்ட ஆரம்பிச்சாங்க. தொடர்ந்து படிக்க ஆரம்பிச்சாங்க. செல்போனில் மூழ்கிக்கிடக்கக்கூடாது அடிக்கடி செல்போன் பார்ப்பதால் ஏற்படும் விபரீதம் குறித்து நாளிதழ்களில் வெளியான தகவல்கள் கட்டுரைகளையும் அனைவரின் பார்வையில் படுறமாதிரி ஒட்டிவச்சிருக்கேன். புத்தக வாசிப்பை அனைவரும் வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும்.
புத்தகங்கள் கடந்த காலங்களின் மனசாட்சியாக இருக்கின்றன. அவற்றைத்தொட்டு உணர்ந்து படித்தால் நாம் முன்னேறலாம். எந்தப் புத்தகமும் வாய்திறந்து பேசாது. ஆனால் ஏதோ ஒரு குரல் புத்தகவாசிப்பின் வழியாக ஒலித்துக் கொண்டே இருக்கும். படிப்பவன் சிந்திக்கிறான் சிந்திப்பவன் முன்னேறுகிறான். சிந்தனை படிப்பினால் மட்டுமே வரக்கூடியது. சிந்தனையைத் தூண்டுவது அந்தபடிப்பு மட்டுதான்.

எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் ஐயாவின் பரிந்துரையில் எனக்கு 'புத்தகர் விருது' கிடைச்சுது. அவசியம் படிக்கவேண்டிய புத்தகங்கள்னு "எஸ்.ரா" ஐயா கொடுத்த புத்தகங்களின் பட்டியலில் உள்ளவற்றை ஒவ்வொன்றாக வாங்கிக்கிட்டிருக்கேன். தூத்துக்குடி எம்.பி கனிமொழிமேடமும் என்னோட கடைக்கு வந்து நூலகத்தைப் பார்த்து பாராட்டியதுடன் 50 புத்தகங்களை நூலகத்திற்கு அன்பளிப்பா கொடுத்தாங்க.

கடைக்கு வரும் வாடிக்கையாளர்களும் ஒண்ணு ரெண்டு புத்தகங்களைத் தந்துக்கிட்டு இருக்காங்க. இப்போ கடைக்கு முடிவெட்ட வர்றவங்க யாரும் செல்போன் பார்ப்பதில்லை. முடிவெட்டிய பிறகும் சிலநிமிடங்கள் உட்கார்ந்து புத்தகத்தைப் படித்துவிட்டு பொறுமையாக வீட்டுக்குப் போறவங்களும் உண்டு.

முடிதிருத்தும் கட்டணம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து கொண்டு செல்லும் போதும் இந்த ஆறு வரூஷத்துல ஒரு ரூபாய் கூட கட்டணத்தை உயர்த்தியதில்லை. இந்த ஆண்டு உயர்த்தச் சொல்லி மற்ற கடைக்காரர்கள் நிர்பந்தித்த போதிலும் 50 ரூபாயாக இருந்த கட்டணத்தை 80 ரூபாயாக உயர்த்தி அறிவிச்சாலும் புத்தகம் வாசிச்சா 30 ரூபாய் கட்டணத்தைக் குறைத்துக் கொள்கிறேன்.
"கட்டணத்தைக் கூட்டிச்சொல்லி புத்தகம்வாசிச்சா 30 ரூபாய் குறைப்புன்னு சொல்றது... எப்படிப் பார்த்தாலும்அதே 50 ரூபாய் கட்டணம்தானே உனக்கு கிடைக்குது"னு மத்தகடைக்காரங்க கேட்கிறாங்க.

அவர்களுக்கு நான் சொன்னபதில் "மற்றகடைக்காரர்களுக்காக கட்டணத்தைக் கூட்டினேன். இதில் எனக்கு உடன்பாடில்லை. அதனால் புத்தகத்தை வாசிக்கச் சொல்லி குறைச்சிட்டேன். இதுல எனக்கு ஒரு மனநிறைவு" – மகிழ்ச்சி பொங்கச் சொன்னார் பொன்.மாரியப்பன்.

தலைக்குமேல் வளர்ந்துள்ள முடிதிருத்தப்படும் போது தலைக்குள்ளேயும் அறிவு வளர உதவி செய்யப்படுகிறது.
அதனை படிக்கும் போது மற்றொரு மிக முக்கிய விடயம் மனதில் நினைவுக்கு வருவதை குறிப்பிட்டே ஆக வேண்டும். நம் மண்ணில் புகழ்மிக்க எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக் ஜீவா அவர்கள் சில தசாப்தங்களுக்கு முன்னர் வசந்தம் சஞ்சிகையில் தான் எழுதிய "என்னால் மறக்க முடியாத எனது பாத்திரம்" என்ற கட்டுரை ஆரம்ப வரிகளை கீழ்க்கண்டவாறு எழுதியிருப்பார்.
"இது சவரக் கடையல்ல எனது சர்வ கலாசாலை" அவரது "அனுபவ முத்திரைகள்" என்ற தொகுப்பில் இக்கட்டுரை உள்ளது படித்துப் பாருங்கள்.....

நன்றி : விகடன்

மகாத்மா காந்தியடிகள் கொலை விசாரணையின் போது அவரை சுட்டுக்கொன்ற நாதுராம் வினாயக கோட்சே நீதிமன்றத்தில் ஆற்றிய உரை!

# காந்திஜி கொலை வழக்கில் கோட்சேயின் வாக்குமூலம்







டில்லி செங்கோட்டையில் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் காந்தி கொலை வழக்கு விசாரணை நடந்தது. 1948 நவம்பர் 8ந்தேதி கோட்சே வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலம் ஆங்கிலத்தில் மொத்தம் 92 பக்கங்களில் எழுதப்பட்டிருந்தது. மொத்தம் ஐந்து மணி நேரம் நின்று கொண்டே வாக்குமூலத்தை கோட்சே படித்தார். வாக்குமூலத்தில் கோட்சே கூறியிருந்ததாவது:-

"காந்தியின் கொள்கையால் நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டும் என்று அவரின் கால்களுக்கு செருப்பாக இருக்க ஆசை பட்டு அவருடன் சேர்ந்தேன்." "தெய்வ பக்தியுள்ள பிராமணக் குடும்பத்தில் நான் பிறந்தேன். இந்துவாகப் பிறந்ததில் பெருமைப்படுகிறேன். நான் வளர வளர என் மதத்தின் மீது எனக்கு மிகுந்த பற்றுதல் ஏற்பட்டது. ஆனால் எனக்கு எவ்வித மூட நம்பிக்கையும் ஏற்படவில்லை. தீண்டாமை ஒழியவும், சாதி ஒழியவும் பாடுபட்டேன். எல்லா இந்துக்களையும் சமமாக நடத்த வேண்டும். அவர்களுக்கு இடையே உயர்வு, தாழ்வு கற்பிக்கக் கூடாது என்று வற்புறுத்தி வந்துள்ளேன். சுவாமி விவேகானந்தர், திலகர், கோகலே, தாதாபாய் நவ்ரோஜி போன்றோர் எழுதிய நூல்களை படித்திருக்கிறேன்."

"1946ல் முகமதியர்களின் கொடுமை சொல்லொணாத துயரத்தைத் தந்தது. அரசாங்கத்தின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. நவகாளியில் நடந்த நிகழ்ச்சிகள் எங்கள் ரத்தத்தைக் கொதிப்படையச் செய்தன. அத்தகைய கொடுமைகள் புரிந்த முஸ்லிம்களை மகாத்மா காந்தி ஆதரித்தார். அதுமட்டுமல்ல டெல்லியில் ஒரு இந்துக் கோவிலில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் 'குர்ஆன்' வாசகங்களைப் படிக்கச் செய்தார்."

"முஸ்லிம்கள் தொழுகை நடத்தும் மசூதியில் பகவத் கீதையை மகாத்மா காந்தியால் படிக்க முடியுமா? 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந்தேதி விளக்குகள் அலங்காரத்துடன் நாடெங்கும் சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட அதே நாளில் பஞ்சாபில் இந்துக்கள் உடைமைகளை முஸ்லிம்கள் தீக்கு இரையாக்கினார்கள். இந்துக்களின் ரத்தம், பஞ்சாப் ஆற்று நீரில் கலந்தோடியது."

"மேற்கு பாகிஸ்தானில் இருந்த சிறுபான்மை இந்துக்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். அதேபோல கிழக்குப் பாகிஸ்தானில் இருந்த முகமதியர்களும் நடந்து கொண்டனர். 11 கோடி மக்கள் வீடு இழந்தனர். இவ்வளவு நடந்தும் மகாத்மா காந்தி, 'முகமதியர்களின் செயலில் ஒரு களங்கமுமில்லை' என்று பரிந்து பேசினார். என் ரத்தம் கொதித்தது. இனிமேல் நான் பொறுமையாக இருக்க முடியாத சூழ்நிலை உருவானது." "காந்தியடிகளை கடுமையான வார்த்தைகளால் நான் தாக்க விரும்பவில்லை. அவருடைய கொள்கையும், மார்க்கத்தையும் முழுவதாக நிராகரிப்பதாகச் சொல்ல விரும்பவில்லை. பிரிட்டிஷ்காரர்கள், நம்மிடையே பிரிவினையை உண்டாக்கி, சுகமாக நம் நாட்டை ஆண்டு வந்தபோது, மகாத்மாகாந்தி அதை எதிர்த்துப் போராடி பெரும் வெற்றியை நமக்குத் தந்தவர் என்பதை நான் மறுக்கவில்லை அதற் காக அவரைப் பாராட்டுகிறேன். ஆனால் இந்தியா பிரிக்கப்படுவதற்குக் காரணமாகவும், துணையாகவும் இருந்தவர் அவர். அதனால் அவர் இன் னும் நாட்டில் இருந்தால், இந்தியாவிற்குத் துன்பமும், இழப்பும் ஏற்படும். முஸ்லிம்களின் ஆதிக்கத்திற்கும்,அட்டூழியத்திற்கும் பக்கபலமாக இருப்பார் என்பதை உணர்ந்து கொண்டேன்."

**சுட்ட பிறகு ஓடுவதற்கு நான் முயற்சி செய்யவில்லை. தப்பி ஓடும் எண்ணமும் எனக்கு இல்லை. என்னை சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளவும் முயலவில்லை. கொலை பற்றி நீதிமன்றத்தில் என் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்க்கவே விரும்பினேன். மரியாதைக்குரிய நீதிமன்றம் எனக்கு எந்த தண்டனையையும் விதிக்குமாறு கட்டளையிடலாம். என் மீது கருணை காட்டவேண்டும் என்றும் நான் கேட்கவில்லை.**

"நல்லதோ, கெட்டதோ அவர் எடுக்கும் முடிவினையே இந்தியா ஏற்றுக்கொள்ள வேண் டும் என்ற பிடிவாதம் அவரிடம் காணப்பட்டது. இந்தியா அவருடைய தலைமையை நாடினால் அது நம் நாட்டை எங்கேயோ கொண்டு போய்ச் சேர்த்துவிடும். அவரே இங்கு உள்ள எல் லாவற்றையும் இயக்குபவர். ஒரு நீதிபதி என்றும் கூறலாம். 'சத்தியாக்கிரகம்' என்றும் அழியாது என்பது அவர் அறிந்த சூத்திரம். காந்திஜியே தன் செயல்களுக்குத் தாமே வழக்க றிஞரும், நீதிபதியும் எனலாம். அவரது அரசியல், பகுத்தறிவு இல்லாதது எனப் பெரும்பாலானோர் நினைத்தனர்."

"ஜின்னாவின் இரும்புப்பிடி, எக்கு உள்ளத்தின் முன் காந்திஜியின் ஆத்ம சக்தி, அகிம்சைக் கொள்கை அனைத்தும் தவிடு பொடியாகிவிட்டன. ஜின்னாவிடம் தம் கொள்கை ஒருக்காலும் வெற்றி பெறாது என்று தெரிந்திருந்தும் அவர் கொள்கையை மாற்றிக் கொள்ளாமலேயே இருந்தார்"

"தம் தோல்வியையும் அவர் ஒப்புக்கொள்ளவே இல்லை. மற்ற மேதைகள் ஜின்னாவுடன் பேசி அவரை முறியடிக்கவும் வழிவிடவில்லை. இமயமலைப் போன்ற பெரிய தவறுகளைச் செய்த வண்ணம் இருந்தார். நாட்டைப் பிளந்து துண்டு துண்டாக்கியவரைத் 'தெய்வம்' என மற்றவர் மதித்தாலும் என் உள்ளம் ஏனோ அவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அவர் மீது கோபம்தான் வருகிறது."

"காந்தியைக் கொன்றால் என் உயிரும் போய்விடும் என்பதை அறிவேன். சிறிதும் சந்தேகம் இல்லாமல் என் எதிர்காலம் பாழாய்ப்போவது உறுதி. பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பிலிருந்தும் அட்டூழியத்திலிருந்தும் இந்தியா விடுதலையடையும் என்பது என்னவோ உறுதியாகும். மக்கள் என்னை 'முட்டாள்' என்று அழைக்கலாம். அறிவில்லாமல் அண்ணல் காந்தியடிகளைக் கொன்றதாகக் கூறலாம். நம் இந்தியா ஒரு பலமுள்ள நாடாகவும், சுதந்திர நாடாகவும் இருக்கவேண்டும் என்பதே என் விருப்பம்."

"நம் நாடு வல்லரசாகத் திகழவேண்டுமானால், காந்தியடிகளின் கொள்கையை நாம் கைவிடவேண்டும். அவர் உயிரோடிருந்தால் நாம் அவர் கொள்கைகளிலிருந்து மாறுபட்டுச் செயல்பட முடியாது. நான் இந்த விஷயத்தை நன்கு அலசி ஆராய்ந்த பிறகே அவரைக் கொல்ல வேண்டும் என்று முடிவு எடுத்தேன். ஆனால் நான் அதுபற்றி யாரிடமும் பேசவில்லை. எந்த வகையான யோசனையையும் எவரும் சொல்லவில்லை."

"பிர்லா மாளிகையில் பிரார்த்தனை மைதானத்தில் 30.1.1948ல் மகாத்மா காந்தியைச் சுட என் இரு கைகளுக்கும் வலிமையை நான் வரவழைத்துக்கொண்டேன். இனி நான் எதையும் சொல்வதற்கில்லை. நாட்டின் நலனிற்காகத் தியாகம் செய்வது பாவம் எனக் கருதினால் நான் பாவம் செய்தவனாவேன். அது கவுரவம் என்றால் அந்த கவுரவம் எனக்கு வரட்டும்."

"நேதாஜி விடுதலைப்போரில், வன்முறையை ஆதரிப்பவர்களை மட்டும் காந்திஜி எதிர்த்தார் என்பதில்லை. அவருடைய அரசியல் கருத்துக்கு எதிரான கருத்துக்கள் உடையவர்களையும் வெறுத்தார். அவருடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது அவருக்கு இருந்த வெறுப்புக்கு சுபாஷ் சந்திரபோஸ் ஓர் எடுத்துக்காட்டு. காங்கிரசில் இருந்து சுபாஷ் சந்திரபோஸ் தூக்கி எறியப்படும் வரை, காந்திஜியின் வன்மம் முற்றிலும் அகலவில்லை."

"சுபாஷ் சந்திரபோஸ் 6 ஆண்டுகள் நாடு கடத்தப்படவேண்டும் என்று பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டதை எதிர்த்து எனக்குத் தெரிந்தவரை காந்திஜி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. மற்ற எந்த தலைவர்களையும் விட நேதாஜியை மக்கள் விரும்பினர். 1945ல் ஜப்பானியர் தோல்விக்குப்பிறகு சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவுக்குள் நுழைந்திருந்தால், இந்திய மக்கள் ஒட்டுமொத்தமாக அவரை வரவேற்று இருப்பார்கள். ஆனால் காந்தியின் அதிர்ஷ்டம் சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவுக்கு வெளியில் இறந்துவிட்டார்.

"முஸ்லிம்கள் மீது காந்திஜி அதிகமான மோகத்தை வளர்த்துக்கொண்டார். பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக ஓடிவந்த இந்துக்கள் மீது இரக்கப்பட்டு ஆறுதலாக ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மனிதாபிமானம் பற்றி அவருக்கு ஒரு கண்தான் இருந்தது. அது முஸ்லிம் மனிதாபிமானம். காந்திஜிக்கும், எனக்கும் இடையே தனிப்பட்ட முறையில் எவ்வித பகையும் இருந்தது இல்லை. காந்திஜி மீது நான் இந்த தீவிர நடவடிக்கையை மேற்கொள்ளக் காரணம், நம் நாட்டின் மீது நான் கொண்டிருந்த பக்திதானே தவிர வேறு ஒன்றும் இல்லை. பாகிஸ்தான் நிறுவப்பட்ட பிறகாவது, பாகிஸ்தானில் வாழும் இந்துக்களின் நலனைக்காக்க இந்த காந்தீய அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால், என் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க முடியும். ஆனால், விடியும் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் படுகொலை செய்யப்பட்ட செய்தியைக் கொண்டு வந்தது."

"15 ஆயிரம் சீக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டனர். அந்த இந்துப்பெண்கள் சந்தை

►

## காந்திஜி கொலைக்கு...

களில் ஆடு மாடுகள் விற்கப்படுவது போல விற்கப்பட்டனர். இதனால் இந்துக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள இந்தியாவை நோக்கி ஓடிவந்தனர். இந்தியாவை நோக்கி வந்த இந்திய அகதிகள் கூட்டம், நாற்பது மைல் நீளத்துக்கு இருந்தது.

இந்தக் கொடிய நிகழ்ச்சிக்கு எதிராக இந்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? அவர்களுக்கு விமானத்தில் இருந்து ரொட்டித் துண்டுகள் போடப்பட்டன. அவ்வளவு தான். 'தேசத் தந்தை' என்று காந்தி அழைக்கப்படுகிறார். அது உண்மை யானால் அவர் ஒரு தந்தைக்குரிய கடமையிலிரு ந்து தவறிவிட்டார். பிரிவினைக்கு (பாகிஸ்தான் அமைப்பு க்கு) சம்மதம் தெரிவித்ததன் மூலம் இந்த தேசத்துக்கு நம்பிக் கைத் துரோகம் செய்துவிட்டார்."

பிரிவினைக்கு காந்திஜி சம்மதித்ததால் அவர் இந்தியாவின் தேசத் தந்தை அல்ல பாகிஸ்தானின் தேசத் தந்தை என்று நிரூபித்து விட்டார். பாகிஸ்தான் பிரிவினைக்கு நாம் இணங் கியிருக்காவிட்டால், நமக்கு சுதந்திரம் கிடைத்திருக்காது என்று சிலர் கூறுவது தவறான கருத்து. தலைவர்கள் எடுத்த தவறான முடிவுக்கு அது வெறும் சாக்குப்போக்காகவே எனக் குத் தோன்றுகிறது.

1947 ஆகஸ்டு 15ந்தேதி பாகிஸ்தான் சுதந்திர நாடானது எப்படி? பஞ்சாப், வங்காளம், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து முதலிய பகுதி மக்களின் உணர்வுகளுக்கும், கருத்துக்களுக்கும் எந்த மதிப்பும் தராமல் பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரிக்கக்கூடாத பாரதம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதன் ஒரு பகுதியில் மதவாத அரசு நிறுவப்பட்டது. முஸ்லிம்கள் தங்கள் தேச விரோத செயல்களுக்கு வெற்றிக்கனியை பாகிஸ்தான் வடிவில் பெற்ற னர். பட்டப்பகலில் சுமார் 400 பேர் கூடியிருந்த கூட்டத்தில் காந்திஜியை நான் சுட்டேன். அது உண்மை.

"சுட்ட பிறகு ஓடுவதற்கு நான் முயற்சி செய்யவில்லை. தப்பி ஓடும் எண்ணமும் எனக்கு இல்லை. என்னை சுட்டுக்கொ ண்டு தற்கொலை செய்து கொள்ளவும் முயலவில்லை. கொலை பற்றி நீதிமன்றத்தில் என் உணர்ச்சிகளைக் கொட்டித் தீர்க்கவே விரும்பினேன். மரியாதைக்குரிய நீதிமன்றம் எனக்கு எந்த தண்டனையையும் விதிக்குமாறு கட்டளையிடலாம். என் மீது கருணை காட்டவேண்டும் என் றும் நான் கேட்கவில்லை."

"பிறர் என் சார்பாக கருணை வேண்டுவதையும் நான் விரும்பவில்லை. 'கொலைக்கு நானே பொறுப்பு' என்னோடு பலர் குற்றம் சாட்டப்பட்டு இருக்கிறார்கள். கொலைக்கு சதி செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நான் முன்பே கூறியபடி என் செயலுக்கு கூட்டாளிகள் யாரும் கிடை யாது. (என் செயலுக்கு நானே முழுப்பொறுப்பு. அவர்களை என்னோடு குற்றம் சாட்டி இருக்காவிட்டால் எனக்காக எந்த எதிர்வாதமும் செய்திருக்கமாட்டேன். வீரசவர்க்காரின் தூண்டுதலில் நான் செயல்பட்டேன் என்று கூறுவதை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். அது என் அறிவுத்திறனுக்கு ஏற்படுத்தும் அவமதிப்பாகக் கருதுகிறேன்.")

1948 ஜனவரி 17ந்தேதி சவர்க்காரை பார்த்தோம் என்றும் அவர் 'வெற்றியோடு திரும்புங்கள்' என்றும் வாழ்த்தி வழியனுப்பினார் என்று கூறுவதையும் மறுக்கிறேன். இந்து மதத்தை அழிக்க முயலும் சக்தியை ஒழித்துவிட்டேன் என்ற மன நிறைவு எனக்கு ஏற்பட்டுள்ளது.

மானிட வர்க்கத்தின் நலனுக்காகவே இந்தச் செயலை செய்தேன். இந்தச் செயல் முற்றிலும் இந்து தர்மத்தையும், பகவத் கீதையையும் அடிப்படையாகக் கொண்டதுதான்.

நம் நாடு 'இந்துஸ்தான்' என்ற பெயரில் இனி அழைக் கப்படட்டும். இந்தியா மீண்டும் ஒரே நாடாக வேண்டும். இந்திய வரலாற்றை எவ்வித பாரபட்சமும் இன்றி நேர்மை யாக எழுதக்கூடிய வரலாற்று ஆசிரியர்கள் எதிர்காலத்தில் உருவானால், அவர்கள் என் செயலை மிகச்சரியாக ஆராய் ந்து, அதிலுள்ள உண்மையை உணர்ந்து, உலகறியச் செய் வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.' இவ்வாறு கோட்சே கூறினார்.

நன்றி: ஞானா இராசையா, முகநூல்

## ஊடுருவி உலகநாதன்



இப்பத்த காலத்தில விவசாயிகள் படும்பாட்டை வார்த் தைகளால் சொல்ல முடியாதுள்ளது. விவசாயம் செய்வ தென்றால் பெரும் கஷ்ரப்பட வேண்டியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். அரசு விவசாய த்தை கட்டியெழுப்புவதற்காகப் பெரும் தொகை நிதி வழ ங்கி மானிய அடிப்படையில் உற்பத்திப் பொருள்களை வழங்கி வந்தாலும் விவசாயத்துறை வீழ்ச்சி நிலைக்கு செல்லுகின்றது.

இப்பொழுது விவசாய திணைக்களத்தால் மானிய அடிப் படையில் விதை உருளைக்கிழங்கு வழங்கப்படுகிறது. விதை உருளைக்கிழங்கு சரியான முறையில் வழ்ங்கப் படுவதில்லை என்று விவசாயிகள் விவசாய திணைக் களத்தின் மீது குற்றம் சுமத்துகின்றனர்.

வருடா வருடம் மானிய அடிப்படையில் விதை உருளை க்கிழங்கைப் பெற்று உற்பத்தி செய்து வந்த விவசாயிகள் இந்த உற்பத்தியை இன்னும் எத்தனை காலத்துக்கு தொடரவுள்ளனர் என்பது கேள்விக்குறியே! விவசாயத் துறையை மேம்படுத்துவதற்குப் பெரும் தொகை நிதி யை வரவுசெலவு திட்டத்தில் அரசு ஒதுக்கினாலும், சம்பந்தப்பட்டதுறையைச் சேர்ந்த அரச அதிகாரிகள் தொடக்கம் அலுவலர்கள் வரை வேலை செய்யப் பின்னடிக்கின்றார்கள். அரசு வழங்கும் சம்பளத்தையும் வாங்கிக் கொண்டு ஊழல் செய்யும் சிலரால் தான் இன்று விவசாயத்துறை பின்னோக்கிச் சென்றுள்ளது என்று கூடச் சொல்லப்படுகிறது.

விவசாயிகள் நட்டத்தை எதிர்கொள்வதால் தான் விவசாயத் தொழிலை கைவிட்டு வருமானம் ஈட்டும் வேறுதொழிலைத் தேடுகின்றனர். விவசாயத் தொழி லை மேற்கொள்வதற்கு அரசுமானிய அடிப்படையில் வழங்கும் உற்பத்திப் பொருள்களைப் பெறமுடியாமல் இருப்பதாலும், காலநிலை மாற்றத்தால் உற்பத்தியில் அழிவுகளைச் சந்திப்பதாலும், உற்பத்தி செய்த பொருட்க ளைச் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாலும் விவசாயத் தொழிலைக் கைவிட்டு வருகின்றனர்.

இது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட விவசாயத் திணைக்க ளங்கள் கருத்தில் எடுப்பதில்லை. எங்கு தடக்கி விழுந்தாலும் விவசாயம் சம்பந்தப்பட்ட அலுவலகங்கள் தான் முன்னுக்கு வருகின்றன. ஆனால் விவசாய வளர்ச்சியோ பின்னடைவைச் சந்தித்து நிற்கின்றன.

விதை உருளைக்கிழங்கு மானிய அடிப்படையில் வழங்கலில் முறைகேடு இடம்பெறுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயிகளுக்கு இந்த வருடம் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைக்கு மானிய விலையில் விதை உருளை க்கிழங்கு வழங்குவதற்கு 45 மில்லியன் ரூபா செலவில் 230 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு இறக்கு மதி செய்யப்பட்டுள்ளது.

விதை உருளைக்கிழங்கு கோரி விண்ணப்பித்த விவசா யிகளின் பதிவுகள் மற்றும் பயிர்ச் செய்கையின் உண்மைத்தன்மை உறுதி செய்யப்பட்ட பின்னர் தலா ஒரு விவசாயிக்கு மூன்று பெட்டிகள் விதை உருளைக் கிழங்கு வீதம் விநியோகிக்கப்படுகின்றன என யாழ்ப் பாண மாவட்ட விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் குறைவாக விதை உருளைக்கிழங்குப் பெட்டிகள் வழங்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரான்ஸ் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சசி ரக விதை உருளைக்கிழங்கு வழங்கப்படுகின்றது. சசி ரக விதை உருளைக்கிழங்கு யாழ் மாவட்டத்தில் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகாமல் நல்ல விளை ச்சலைத் தருகின்றன. விவசாயிகள் தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு அமைய சசி ரக விதை உருளைக் கிழங்கு விநியோகிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

இந்த வருடம் 50 கிலோ விதை உருளைக்கிழங்கின் விலை 17 ஆயிரம் ரூபாவாக இருந்தமையால் அதில் 50 வீதத்தை 8 ஆயிரத்து 500 ரூபாவை விவசாயிகள் செலுத்தும் அதேவேளையில் 50 வீதம் மானிய உதவியாக அரசு வழங்குகின்றது என்று விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அளவில் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட வில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின் றனர். யாழ் மாவட்ட விவசாயிகளுக்கான மானிய விலை விதை உருளைக்கிழங்கு விநியோகத்துக்கான செலவில் 23 மில்லியன் ரூபாவை மத்திய விவசாய அமைச்சும் வழங்கியுள்ளது.

விதை உருளைக்கிழங்கைக் குறைத்து வழங்கியுள் ளனர் என்றால் வருடாவருடம் உருளைக்கிழங்கு உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகள் பாதிக்கப் படப் போகிறார்கள் என்பதுடன் உருளைக்கிழங்கு உற்பத்தியை கைவிடப் போகிறார்கள் என்பது விவசாய வீழ்ச்சிக்கும் காரணமாக அமையப்போகிறது.

உருளைக்கிழங்கு விளைச்சல் 6 இற்கு 4 கிடைப்பதாக விவசாயிகளும், காலநிலை மாற்றம் சரியான முறையில் விளைச்சலை மேற்கொள்ளவில்லை என்று சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் கூறும் கருத்தை அதிகாரிகள் கவனத்தில் எடுப்பதில்லை. விவசாயிகள் மீதுபழியைப் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்கின்றனர். இதனால் தான் இன்று உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கையும் குறைந்து வருகிறது. "உருளைக்கிழங்கு விளையாததற்கு என்ன காரணம்" என்று ஆராயச் சம்பந்தப்பட்ட திணைக்களம் களத்தில் இறங்காமல் இருப்பதால் எதிர்காலத்தில் உருளைக் கிழங்கு விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயக் கண்காட்சியை பெரிய அளவில் நடத்துப வர்கள் விவசாய இடங்களுக்குச் சென்று பாருங்கள். அப்பொழுதுதான் விவசாய உற்பத்தி தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கமுடியும். அரசு விவசாயிகளுக்கு வழ்ங்கும் உதவிகள் விவசாயிகளு க்கே போய்ச் சேரும்படி செய்யுங்கள்.

இயற்கைவளங்கள் மனிதவளங்கள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதனூடாக வடமாகாணத்தின் பொருளா தாரத்தை வலுவானதொரு நிலைக்கு கொண்டு செல்வத ற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி சுற்றாடலைப் பாதுகாக்கக் கூடிய பேண்தகு விவசாயத் துறையை விருத்தி செய்தல் என்று சொல்லுபவர்களால் சாதிக்க முடிந்ததா? என்றால் இல்லை! என்றுதான் சொல்ல வேண்டும்.




அண்ணாசாலையில் அப்படியொரு புத்தகக் கடை இருக்கிறது என்பதே ஆச்சார்யா சொல்லி தான் ரகுவிற்குத் தெரியும். பலமுறை அந்த இடத்தைக் கடந்து போயிருக்கிறான். சிவப்பு நிற கட்டிடத்தைப் பார்த்தவுடன் ஏதோ அரசாங்க அலுவலகம் என்று நினைத்துக் கொண்டிருந்தான். எத்தனை புதிய கட்டிடமாக இருந்தாலும் அரசு அலுவலகங்கள் ஒன்று போலவே இருக்கின்றன. ஒன்று போலவே.செயல்படுகின்றன.
அந்தப் புத்தகக்கடையின் பெயர் "நைட்ஸ்." இரவு ஒன்பதரை மணிக்குத் தான் திறப்பார்கள். விடியும் வரை கடை உண்டு. சில நாட்கள் காலை ஏழு மணி வரை கூடத் திறந்திருக்கும். ஆனால் பகலில் பூட்டிவிடுவார்கள் " என்றான் ஆச்சார்யா. கேட்கவே வியப்பாக இருந்தது. எதற்காக ஒரு புத்தகக் கடையை இரவில் மட்டுமே திறந்து வைத்திருக்கிறார்கள். பகலிலே புத்தகக் கடைகளுக்கு ஆள் வருவது குறைந்துவிட்டிருக்கிறது. இரவில் யார் வரப் போகிறார்கள்? ஆனால் மாநகரில் விசித்திரமான விஷயங் களுக்குக் குறைவான என்ன.

ஒரு முறை ஆச்சார்யா ரகுவை நள்ளிரவில் நீலாங்கரை பீச்சிற்கு அழைத்துப் போயிருந்தான். மணி பனிரெண்டைக் கடந்திருக்கும். அப்போதும் கடற்கரையில் பைக்கும், கார்களும் நிறைந்திருந்தன. எதற்கோ காத்து கிடப்பவர்கள் போல ஆட்கள் தொலை வெறித்தபடியே இருந்தார்கள். அடுத்த அரைமணி நேரத்தில் மணிச்சப்தம் கேட்கத்துவங்கியது. காத்திருந்தவர்கள் முகத்தில் சந்தோஷம் வெளிப்பட்டது.
ஒரு கிழவர் தள்ளுவண்டி ஒன்றை தள்ளிக் கொண்டு வந்து கொண்டிருந்தார். அருகில் வந்த போது தான் அது குல்பி ஐஸ் விற்கும் வண்டி என்பது தெரிந்தது.

ஆச்சார்யா சொன்னான் "இந்தக் குல்பி ஐஸ் பகலில் கிடைக்கவே கிடைக்காது. நைட் பதினோரு மணிக்குத் தான் இவரோட வியாபாரம் ஆரம்பம். ஒவ்வொரு இடமா வித்துட்டு இங்கே வர பனிரெண்டரை ஆகிரும். இவருக்குனு கஸ்டமர் நிறைய இருக்காங்க. வெயிட் பண்ணி சாப்பிட்டு போவாங்க. அதுவும் சண்டேன்னா ஸ்பெஷல் குல்பி. அதுக்கு நிகரே கிடையாது"
ஆச்சார்யா சொன்னது உண்மை. அது போன்ற குல்பி ஐஸை ரகு தன்னுடைய வாழ்நாளில் சாப்பிட்டதில்லை. "இவ்வளவு ருசி மிக்க ஐஸை பகலில் விற்றால் என்ன ?" எனக்கேட்டான் ரகு.
ஆச்சார்யா சொன்னான் "சில விஷயங்களுக்கு ருசியே நைட்ல கிடைக்கிறது தான். பகல்ல இப்படிப் பீச்சில உட்கார்ந்து கடலை ரசிச்சிகிட்டு குல்பி சாப்பிட முடியுமா. இது ஒரு சுகம்"

ஆச்சார்யா சொன்னது உண்மை. நகரம் தனக்கான புதுப்புது சுவைகளைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கிறது. பகலில் காணும் நகரம் வேறு. இரவில் காணும் நகரம் வேறு. இரவில் இந்த மாநகருக்கு நூறு புதிய தலைகள் முளைத்துவிடுகின்றன. உண்மையில் நகரம் பகலில் உறங்கிக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இரவில் நகரம் விழித்துக் கொள்கிறது. மனிதர்கள் உறங்கப் போய்விடுகிறார்கள். கிராமத்தை போல மாநகரம் முற்றாக உறக்கத்தினுள் ஆழ்ந்து போவதில்லை. இரவிலும் ஆட்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். வாகனப் போக்குவரத்து இருக்கிறது. மெட்ரோ ரயில்பாதை அமைப்பவர்கள் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். முழுமையாகத் துயில் கொள்ளும் ஒரு வீதி கூட மாநகரில் கிடையாது தானோ? நைட்ஸ் புத்தகக்கடையைப் பற்றி ஆச்சார்யா சொன்னதில் இருந்து அங்கே போய் வர வேண்டும் என்ற ஆசை ரகுவிற்கு உருவானது. ஆச்சார்யா புத்தகம் படிப்பவன் இல்லை. ஆனால் இது போன்ற விசித்திரமான விஷ்யங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அவன் சொல்லி தான் நிறைய உணகவங்களை, துணிக் கடைகளை ரகு அறிந்து கொண்டிருந்தான்.
வார இறுதியில் நைட்ஸ் கடைக்குப் போய்வரலாம் என்று தான் ரகு முதலில் திட்டமிட்டிருந்தான். ஆனால் ஞாயிறு செங்கல்பட்டு போகவேண்டிய வேலை உருவானது. ஆகவே சனிக்கிழமை இரவு "நைட்ஸ்" போகலாம் என்று முடிவு செய்து கொண்டான்.

ஆச்சார்யாவிடம் சொன்ன போது அவன் "ஒ.எம்.ஆரில் உள்ள ஒரு கிளப்பில் இரவு கற்கால மனிதர்கள் போல இலைகளை உடையாக அணிந்து கொண்டு ஆடிப்பாடும் பார்ட்டி இருக்கிறது. அங்கே போகிறேன். சுவாரஸ்யமாக இருக்கும்" என்றான். கற்காலத்திற்குத் திரும்பி போக மரவுரி ஒன்று தான் வழி போலும். மனதில் இன்னமும் குகைகாலத்தின் நினைவுகள் இருந்து கொண்டு தானே இருக்கின்றன.
ரகு பைக்கில் போய் "நைட்ஸ்" கடையிருந்த சிவப்பு கட்டிடத்தின் முன்னால் நின்ற போது அந்தக் கட்டிடத்தில் இருபதுக்கும் மேற்பட்ட கலைப்பொருள் விற்பனை செய்யும் அங்காடிகள் இருப்பதைக் கண்டான். அதில் ஒன்று ஈரானைச் சேர்ந்த கலைப் பொருட்கள் விற்கும் கடை. இன்னொன்று பழைய துப்பாக்கிகள் சர்வீஸ் செய்து தரும் கடை. கட்டிடத்தினை ஒட்டிய சிறிய சந்துக்குள் பைக் நிறுத்துமிடம் இருந்தது. தனது பைக்கை அங்கே நிறுத்திவிட்டு "நைட்ஸ்" எங்கேயிருக்கிறது என்று காவலாளியிடம் விசாரித்தான். அவன் கீழே என்று விரலைக்காட்டினான்.
ர்குவிற்கு அவன் தெரியாமல் சொல்கிறானோ? என்று குழப்பமாக இருந்தது. ஆனாலும் அவன் விரல்காட்டிய திசையை நோக்கியே நடந்தான். அவனுக்கு முன்னால் கைத்தடியை ஊன்றியபடி ஒரு வயதானவர் மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தார். "நைட்ஸ்" புத்தகக் கடை என அம்புக்குறி காட்டிய திசையை நோக்கி ரகு நடந்தான் தரைமட்டத்தில் இருந்து கீழாகச் செல்லும் படிக்கட்டுகள் வழியாகச் சென்றபோது பாதி இருளாகயிருந்தது. தடுமாறி விழுந்துவிடுவோமோ என்று ரகுவிற்குத் தோன்றியது தட்டுத்டுமாறி கிழே இறங்கினான். அரண்மனை கதவுகள் போல அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட இரட்டைக்கதவுகள். சித்திர எழுத்துகளால் நைட்ஸ் என எழுதப்பட்டிருந்தது. கதவைத்தள்ளி உள்ளே சென்ற போது அரைவட்ட மேஜையொன்றில் ஒரு பெண் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தார்.
மேஜை விளக்கொளி போலச் சிறிய வெளிச்சம். அவரது மேஜையில் ஓவியப்பின்புலம் கொண்ட கம்ப்யூட்டரின் திரை ஒளிர்ந்து கொண்டிருந்தது. சிறியதொரு பிரிண்டர். மற்றும் பெரிய பூமி உருண்டை காணப்பட்டது. அந்தப் பெண்ணின் பின்னால் சுவரில் வான்கோவின் நைட் கபே என்ற ஓவியம் காணப்பட்டது. அந்தப் பெண்ணிற்கு அறுபது வயதிற்கும் மேலாக இருக்கும். ஆங்கிலோ இந்தியப் பெண்மணி போன்ற தோற்றம். பெரிய பிரேம் போட்ட கண்ணாடி. வெண்ணிறத் தலைமயிர்.

ரகு உள்ளே வந்ததை அவள் கவனிக்கவேயில்லை. ஆழ்ந்து புத்தகத்தில் மூழ்கியிருந்தாள். ரகு கடையின் உள்ளே நடந்தான். மிகப்பெரிய ஹால். ஒட்டுமொத்த கட்டிடத்தின் அடித்தளமது. ஒருபக்கம் முழுவதும் புத்தக அடுக்குகள் வரிசை வரிசையாக இருந்தன. இன்னொரு பக்கம் வட்டவடிவ மேஜைகள். தனித்த ஒற்றை மேஜைகள். மரநாற்காலிகள், சிறியமேடை போன்ற அமைப்பு. எப்படியும் அதற்குள் ஐநூறு பேருக்கும் மேலாகவே அமரலாம். இவ்வளவு பெரிய புத்தகக்கடை ஏன் இரவில் மட்டுமே இயங்குகிறது என்று அவனுக்குப் புரியவேயில்லை.

புத்தக அடுக்குகளை நோக்கி ரகு நடந்தான். இலக்கியம், வரலாறு, சமூகம், நுண்கலை, தத்துவம் எனத் தனித்தனிப் பிரிவுகள். ரகு நிறைய வாசிக்கக் கூடியவன். குறிப்பாக ஐரோப்பிய இலக்கியங்களை விரும்பி வாசித்தான். அறிவுலகத்தின் வளர்ச்சி ஐரோப்பாவில் தான் துவங்கியது என்று ரகு நினைத்துக் கொண்டிருந்தான்.
கட்டிடக்கலையில், சிற்பக்கலையில் இந்தியா அடைந்த உச்சத்தை இலக்கியத்தில் அடையவில்லை என்பதே ரகுவின் எண்ணம்.
ரகு அமெரிக்க மென்பொருள் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தான். அவனது வேலைக்கும் இலக்கியத்திற்கும் ஒரு தொடர்புமில்லை. ஆனால் இலக்கியம் அவனது அலுவலக நெருக்கடிகளில் இருந்து ஆற்றுப்படுத்தியது. ஒருவகையில் வாசிப்பதை தப்பித்தலாக நினைத்துக் கொண்டிருந்தான். ஆகவே மாதம் ஒருமுறையோ, இருமுறையோ புத்தகக் கடைகளுக்குப்




போய் இரண்டு மூன்றுமணி நேரம் செலவிட்டுப் புத்தகங்கள் வாங்கிக் கொண்டு வருவான்.
காரில் அலுவலகத்திற்குச் செல்லும் நேரம் புத்தகம் படிப்பதற்கானது. அவனது வீட்டில் இருந்து அலுவலகம் போக எப்படியும் ஐம்பது நிமிசமாகிவிடும். டிராபிக் இருந்தால் ஒன்றரை மணி நேரம் ஆகும். காரில் ஏறியவுடன் ரகு புத்தகத்தைத் திறந்துவிடுவான். அதன் பிறகு நகரமோ, வாகன நெருக்கடியோ எதுவும் தெரியாது. கற்பனையின் நிலவெளியில் சஞ்சரித்துக் கொண்டிருப்பான்.
நைட்ஸ் கடையில் அவன் கேள்விபட்டிராத பல்வேறு எழுத்தாளர்களின் புத்தகங்கள் இருந்தன. அரிய வகைப் புத்தகங்களைத் தேடுபவர்களுக்கு இக்கடை ஒரு பொக்கிஷம் என நினைத்துக் கொண்டான். புத்தகங்களை விலைக்கு வாங்க வேண்டும் என்று அவசியமில்லை. விருப்பமான புத்தகங்களை எடுத்துக் கொண்டு அங்கேயே படிக்கலாம் என்ற ஒரு அறிவிப்புப் பலகை காணப்பட்டது. இப்படி ஒரு வசதி எத்தனை புத்தகக்கடைகளில் இருக்கிறது என நினைத்தபடியே ஒரு கவிதை தொகுப்பை கையில் எடுத்துக் கொண்டு மேஜையை நோக்கிச் சென்றான். அப்போது தான் கவனித்தான். அங்கே இருந்த பொருட்கள் யாவும் மரத்தால் மட்டுமே செய்யப்பட்டிருந்தன. ஒரு இரும்புப் பொருளில்லை. புத்தகம் படிப்பதற்கு ஏற்ப விளக்குகளை மாற்றி அமைத்துக் கொள்ளும்படியாக மேஜை விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. எங்கோ தண்ணீர் சரசரத்து ஒடுவது போன்ற ஒரு சப்தம் மெலிதாக கேட்டபடியே இருந்தது. ஆற்றின் சப்தம் போன்றிருந்தது. அந்த சப்தம் நினைவை கொப்பளிக்க செய்வதாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் வரத்துவங்கினார்கள். யாரும் யாருடனும் ஒரு வார்த்தை பேசிக் கொள்ளவில்லை. விருப்பமான புத்தகங்க ளுடன் தேர்வு செய்த இடங்களில் போய் அமர்ந்து கொண்டார்கள்.


எஸ்.ராமகிருஷ்ணன்

அப்போது தான் ரகு கவனித்தான். ஒரு மூலையில் காபி தயாரிக்கும் இயந்திரம் இருந்தது. தேவைப்படுகிறவர்கள் இலவசமாகக் காபியும் பெற்றுக் கொள்ளலாம் என்பது தெரிந்தது. சென்னை போன்ற மாநகரில் இப்படிக் கடை இருப்பது அதிசயம் என்று நினைத்துக் கொண்டான். நடந்து சென்று ரகு ஒரு கப் நிறையக் காபி தயாரித்துக் கொண்டு வந்தான். காபியோடு திரும்பி வருகையில் பல்வேறு மேஜைகளில் படித்துக் கொண்டிருப்பவர்களைக் கண்டான். இளம்பெண் ஒருத்தி. இரண்டு வயதான கிழவர்கள். நாலைந்து நடுத்தரவயது ஆண்கள். சில வட இந்திய முகங்கள். ஒரு வெள்ளைக்காரன். ரகு சீனக் கவிதைப் புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தான். கவிதையில் மனம் கூடவில்லை. மாறாக இந்த இடம் ஏன் இப்படியிருக்கிறது. எதற்காக இப்படியொரு புத்தகக் கடை நடத்தப்படுகிறது என்று யோசித்துக் கொண்டேயிருந்தான். நள்ளிரவிற்குள் அந்தக்கடையில் இருநூறு பேர்களுக்கும் அதிகமிருந்தார்கள். அவர்களில் சிலர் நின்றபடியே புத்தகம் வாசித்தார்கள். யாரும் யாருடனும் ஒரு வார்த்தை பேசிக் கொள்ளவில்லை என்பது தான் புதிராக இருந்தது. கடையின் உரிமையாளராக இருந்த பெண் அங்கிருந்தவர்களைத் தனது புன்னகையின் வழியே வரவேற்றபடியே நடந்தாள். சிலர் அவளுடன் கைகுலுக்கிக் கொண்டார்கள். சிலர் அவளைக் கண்டு கொள்ளவேயில்லை. சிலர் ஏதோ பரிட்சைக்குப் படிப்பது போலக் குறிப்பு நோட்டுகளுடன் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் புத்தகக்கடை முழுவதும் எங்கிருந்தோ அபூர்வ நறுமணம் கசிந்து கொண்டிருந்தது. அப்படியொரு வாசனையை ரகு அதன் முன்பு அறிந்ததேயில்லை புத்தகக் கடையினுள் இருப்பது நிஜமாகவே கற்கால குகையொன்றினுள் இருப்பது போன்ற உணர்வைத் தந்தது. நிசப்தமாக எறும்புகள் சுவரில் செல்வது போல இரவு கடந்து



சென்று கொண்டிருந்தது. திடீரெனக் கையில் வைத்திருந்த புத்தகம் எடை கூடிவிட்டதைப் போல உணர்ந்தான். தண்ணீருக்குள் மூழ்கியபடியே படிக்க முடிந்தால் என்னவொரு உணர்வு ஏற்படுமோ அது போன்ற அனுபவம் ஏற்பட்டது. அந்த அறையில் அமர்ந்திருப்பவர்களைக் காணும் போது இரவின் வேறுவேறு படிக்கட்டுகளில் அமர்ந்தபடியே அவர்கள் தியானித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. வெளியே முடிவற்ற நதியை போல இரவு ஒடிக் கொண்டிருந்தது. பின்னிரவிலும் ஆட்கள் அக்கடைக்கு வந்தபடியே இருந்தார்கள். ஒன்றிரண்டு ஆட்களைத் தவிர வேறு எவரும் கடையை விட்டு வெளியே போனதாகத் தெரியவில்லை. புத்தகம் வாசிக்க வந்தவர்களைப் போலின்றித் தியான மண்டபத்தில் இருப்பவர்களைப் போலப் பலரும் கண்களை மூடிக்கொண்டு மௌனமாக இருந்தார்கள். புத்தபிக்குகள் கையில் மந்திரநூலை வைத்திருப்பது போலவே அவர்கள் தோற்றமிருந்தது.

திடீரெனக் கடையின் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டன. இருட்டு. முழுமையான இருட்டு. ஒருவரும் தனது இடத்தை விட்டு எழுந்து கொள்ளவேயில்லை. ரகுவிற்குத் தான் யாரோ தன்னைப் பிடித்துத் தள்ளுவது போலிருந்தது. இருட்டிற்குள்ளிருந்து மெல்லிய சங்கீதம் கசிந்து வரத்துவங்கியது. யாரோ பாடுகிறார். முகம் தெரியவில்லை. புத்தகக்கடையில் ஏன் பாடுகிறார். அந்தக்குரலின் சோகம் அவனை அழுத்தியது. மெல்ல நீலவிளக்கு ஒன்று எரியத் துவங்கியது. பின்பு ஒன்றிரண்டு விளக்குள் ஒளிர ஆரம்பித்தன. பாடியவர் யாரென கண்டறிய முடியவில்லை. ஒவ்வொருவராக வெளியேற துவங்கியிருந்தார்கள். ரகு அப்போது தான் மணியைப் பார்த்தான். காலை நாலரையாகியிருந்தது. புத்தக் கடையினுள் வந்த பிறகு நேரம் போனதே தெரியவில்லை. வெளியேறும் வாசலை நோக்கி நடந்த போது ஊன்றுகோலை ஊன்றியபடியே வந்த ஒரு கிழவர் அவனிடம் மெல்லிய குரலில் "முதன்முறையாக வருகிறாயா" என்று கேட்டார். ஒருவழியாக ஒரு ஆள் பேசுவதைக் கேட்டுவிட்டோம் என்பது போல ரகு திரும்பி பார்த்துத் தலையாட்டி னான்

"எத்தனை ஆண்டுகளாக இந்தப் பிரச்சனையிருக்கிறது" என்று கிழவர் கேட்டார்

"என்ன பிரச்சனை" என்று கேட்டான் ரகு

"உறக்கமின்மை" என்றார் கிழவர்

"எனக்கு அப்படி எந்தப் பிரச்சனையும் இல்லை. படுத்தால் உடனே உறங்கிவிடுவேன்" என்றான் ரகு

"பின் ஏன் இந்தக்கடைக்கு வந்தாய்" என்று கேட்டார் கிழவர்

"ஏன் வரக்கூடாது" என்று பதிலுக்குக் கேட்டான் ரகு

"இந்தப் புத்தகக் கடை உறக்கம் வராதவர்களுக்காக நடத்தப்படு வது. இந்நகரில் பலநூறு மனிதர்கள் உறக்கமில்லாமல் தவிக்கிறா ர்கள். வீட்டின் படுக்கையில் எவ்வளவு நேரம் தான் புரண்டு கொண்டு கிடப்பது. கடைகள், உணவகங்கள் என எங்கேயும் இரவில் போக முடியாது. இதற்காகத் தான் இந்தப் புத்த கடை நடத்தப்படுகிறது. இங்கே வருகிறவர்கள் எல்லோரும் உறக்கமின் மையால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு இக் கடை ஒரு புகலிடம். கடையை நடத்தும் பெண்ணிற்கு இப்பிரச்சனை பல ஆண்டுகளாக உள்ளது. அவள் உறக்கத்தைக் கடந்து போகவே படிக்கிறாள். அவள் முகத்தை நீ பார்த்தாயா" என்று கேட்டார் கிழவர்.

"இல்லையே" என்றான் ரகு.

"பல ஆண்டுகளாக அவள் இரவில் உறங்கியதேயில்லை. பகலில் கோழித்தூக்கம் மட்டுமே சாத்தியம். உலர்ந்த திராட்சைப் பழத்தை போல அவள் முகம் சுருக்கிப் போய்விட்டது. உறக்கம் ஒரு அபூர்வமான பரிசு. அது எங்களைப் போன்றவர்களுக்குக் கிடைப்பதில்லை"

"இளவயதில் நீங்கள் உறங்கியிருப்பீர்கள் தானே" என ரகு கேட்டான்.

நேற்றைய உறக்கத்தைப் பற்றி இன்று நினைத்து மகிழ முடியாது. ஒவ்வொரு நாளும் உறக்கம் நம்மை அணைத்துக் கொள்ள வேண்டும். அதன் அரவணைப்பை போல இதமானது வேறில்லை"

"நீங்கள் தூக்கமாத்திரைகள் எடுத்துக் கொள்ள வேண்டியது தானே "எனக்கேட்டான் ரகு அதை எல்லாம் கடந்துவிட்டேன். எதிர்பாராத மழையைப் போலத் தூக்கம் பற்றிக் கொண்டால் தான் உண்டு"

"இப்படியொரு புத்தக்கடை வேறு எங்காவது இருக்கிறதா" எனக்கேட்டான் ரகு

"இல்லை.. உண்மையில் இந்தப் புத்தக்கடை ஒரு மருத்துவமனை. புத்தக வாசிப்பின் மூலம் உடலை புத்துணர்வு கொள்ள முயற்சிக்கிறார்கள். இங்கே வந்து போகத்துவங்கினால் தூக்கத்தின் தேவையில்லாமல் வாழ முடியும். ஆம். மௌனமாக வாசிப்பதன் வழியே கனவுகளை அடைய முடியும். நான் விழித்தபடியே நிறையக் கனவு கண்டிருக்கிறேன். உலகம் எங்கள் பிரச்சனையைக் கண்டுகொள்வதில்லை. வீட்டில் உள்ளவர்களால் எங்களைப் புரிந்து கொள்ள முடியாது ஆனால் இந்தப் புத்தக்கடை எங்களைப் புரிந்து கொண்டிருக்கிறது. ஆற்றுப்படுத்துகிறது. நாங்கள் ஒரு சமூகம். பகலில் வாழுபவர்களால் எங்களைப் புரிந்து கொள்ளமுடியாது."

அந்தக் கிழவரின் குரலையும் அதிலிருந்த ஆதங்கத்தையும் கேட்டபோது ரகுவிற்கு வருத்தமாக இருந்தது.

"தூக்கம் எளிதான விஷயமில்லை தானோ"

அந்தக்கிழவர் தனது காரை எடுப்பதற்காக அவனுடன் நடந்து வந்தார். தனது வெள்ளை நிற இனோவா காரின் முன்னால் வந்து நின்றபடியே சொன்னார்

"இரவில் உறங்கி முப்பத்திரெண்டு வருஷங்களாகிவிட்டது. பகலில் தான் உறங்குகிறேன். அதுவும் குட்டிக்குட்டித் தூக்கம். கடலை கடந்து செல்ல முற்படும் வண்ணத்துப்பூச்சி போல இரவை கடந்து போய்விடத் தவிக்கிறேன். இரவு நீண்டது. ஆழமானது. விசித்திர மானது. பகலில் வசிப்பவர்களால் ஒரு போதும் புரிந்து கொள்ள முடியாது.

"கிழவரின் கார் கிளம்பி போகும்வரை பார்த்துக் கொண்டிருந்தான். பின்பு தனது பைக்கை தேடி நடந்தான். ரகு பைக்கை எடுத்துக் கொண்டு சாலைக்கு வந்தபோது தூக்கம் கண்களை அழுத்தத் துவங்கியது. வீடு போய்ச் சேரும் வரை தாங்கக்கூடாது என முடிவு செய்து கொண்டான். விடிகாலையின் குளிர்காற்று இதமாக இருந்தது. பைக்கை ஓட்ட முடியவில்லை. தூக்கத்தில் கண்கள் சொருகின. டீக்கடையில் நிறுத்தி டீ குடித்தால் தான் தூக்கம் போகும் என நினைத்துக் கொண்டான். சட்டெனக் கிழவரின் உறக்கமற்ற முகம் அவனது நினைவில் வந்து போனது

நன்றி : நடுவெப்.கொம்



# முழுமை..

சகோதரனே!
மனிதன் எப்போதும், எந்நிலையில் முழுமை அடைகிறான், என்று நீ கேட்கிறாய். சொல்கிறேன் கேள்!
மனிதன் எப்பொழுது தன்னை,
எல்லையற்ற வானப் பெருவெளியாகவும்
எப்பொழுது தன்னை
கரைகளற்ற பெருங்கடலாகவும் உணர்கிறானோ
அப்பொழுதுதான் அவன்
முழுமையை நோக்கி அடியெடுத்து வைக்கிறான்.

அவன் எப்பொழுது தன்னை
என்றும் எரிந்து கொண்டிருக்கும் தீயாகவும்
என்றும் அணையாத விளக்காகவும்
உலவும் இளந் தென்றலாகவும்
சீறியடிக்கும் சூறாவளியாகவும்
இடிகள் முழங்கும் வானமாகவும்
மழை பொழியும் விண்ணாகவும்
உணர்கின்றானோ,
என்று அவன். தன்னை,
பண்பாடிச் செல்லும் நீரோடையாகவும்
இளவேனிலில் தழைத்துப் பூத்திருக்கும் மரமாகவும்
இலையுதிர் காலத்தில்
பொலிவிழந்து நிற்கும் மரக் கன்றாகவும்
உணர்கின்றானோ,
அப்பொழுது அவன்
பூரணத்தின் பாதி வழியைக் கடந்தவனாகிறான்!

அவன், மேலும், முழுமை என்னும் முடிவீடத்தை அடைய
தாயின் ஆதரவை எதிர்நோக்கும் சேயாகவும்
குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்தும் தந்தையாகவும்
காதலில் தன்னை யிழக்கும் இளைஞனாகவும்
கடந்து போன வாழ்வை எண்ணிக்
கலங்கிக் கொண்டிருக்கும் கிழவனாகவும்
கோயிலில் வழிபாடு செய்பவனாகவும்
சிறையில் கிடக்கும் கைதியாகவும்
சான்றோர் நடுவிருக்கும் அறிஞனாகவும்
அல்லும் பகலும் அறியாமை இருளில்
வீழ்ந்து தடுமாறித் திகைக்கும் உயிராகவும்
நம்பிக்கை என்னும் மலர்களுக்கும்
தனிமை என்னும் முட்களுக்கும் இடையே
நைந்து நலியும் பெண் துறவியாகவும்
நோயின் கோரப் பற்களுக்கும்
வறுமையின் கொடுங் கரங்களுக்கும் இடையே
சிக்கித் தவிக்கும் விலைமகளாகவும்
துயரத்திற்கும் வறுமைக்கும் இடையில்
துன்புறும் திக்கற்ற ஏழையாகவும்
தன் பேராசைக்கும் பகுத்தறிவுக்குமிடையே
போராடிக் கொண்டிருக்கும் செல்வனாகவும்
தன் அந்திப் பொழுதின் இருளுக்கும்
இளங்காலைப் பொழுதின் கதிரொளிக்கும் இடையே
விளங்கும் கவிஞனாகவும்
தன்னை அவன் உணர வேண்டும்.

எவன் இவற்றை யெல்லாம்
கண்டு, அறிந்து, உணர்கிறானோ,
அவனே முழுமையை அடைவான்.

அவனே, இறைவனுடைய
நிழலின் நிழலாகத் திகழ்வான்!

-கலீல் ஜிப்ரான்-
தமிழில் கவிஞர் புவியரசு




கோகுலன்

# வவுனியா நகரத்தின் கறுப்புப் பக்கம்

மூவினமக்களும் இணைந்து வாழும் வவுனியா மாவட்டத்தில் 25 எய்ட்ஸ் நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை வேதனைக்குரிய விடயமாகும். 1980ம் ஆண்டு இந்நோய் பரவத் தொடங்கியதில் இருந்து பல்வேறு நாடுகள் எய்ட்ஸ் நோயினை தடுப்பதற்கான பல ம்ுயற்சிகளை எடுத்து வருகின்றன. அந்த வகையில் இலங்கையில் இதனை தடுப்பதற்காகப் பல்வேறு விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

> 18 வயது தொடக்கம் 25 வயது வரையான யுவதிகள் வீதிக்கரைகளில் நிற்பார்கள். இவர்களின் தோற்றம் புதியவர்களிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தாது. தூர இடங்களிற்கு செல்லும் பயணிகளை போல பயணப்பொதிகளை வைத்துக் கொண்டோ, வவுனியா உயர்கல்வி நிறுவனங்களில் கற்பவர்களை போன்றேதான் பெரும்பாலும் தோற்றம் அளிப்பார்கள். தற்போது மிகக் குறைந்தளவிலான தமிழ் யுவதிகளும் இப் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

குறிப்பாக இதனை தடுப்பதற்காகத் துண்டுப் பிரசுரங்கள். விழிப்புணர்வு பேரணி என பொலிஸார், இளைஞர்கள் என, பலரும் இணைந்து இந்நாளில் முன்னெடுக்கப்படுகின்றது. வவுனியா மாவட்டத்தை பொறுத்த வரை வடக்கின் நுழை வாசலாகவும், தெற்கின் பின் கதவாகவும் உள்ளது. அதாவது சட்டவிரோத காரியங்கள்ள பின்கதவால் செய்வதாக கூறுவார்கள். வவுனியாவிலும் அதுதான் நடக்கிறது. வவுனியாவின் எல்லையோர கிராமங்கள், மதவாச்சிப் பகுதிகளிலிருந்து வவுனியா நகரத்திற்கு பல்வேறு தேவைகளிற்காக வருவதை போல நாகரிகமாக உடுத்திக்கொண்டு வரும் சிங்கள இளம் பெண்கள் பலர், வவுனியா நகரத்தில் எடுக்கும் மறு உருவமே பாலியல் தொழிலாளிகள். இதனால் இன்று கலாசாரத்திற்கு பெயர்போன வவுனியா நகரமே கலாசாரத்தின் கறுப்பு பக்கங்களில் குறிப்பிடப்படும் இடமாகி வருகிறது.

குறிப்பாக பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்களை மத்திய பேரூந்து நிலையம், உள்வட்ட வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, இலுப்பையடி என மக்கள் அதிகமாக நடமாடும் பிரதேசங்களில் அதிகமாகக் காண லாம். 18 வயது தொடக்கம் 25 வயது வரையான யுவதிகள் வீதிக்கரைகளில் நிற்பார்கள். இவர்களின் தோற்றம் புதியவர்களிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தாது. தூர இடங்களிற்கு செல்லும் பயணிகளை போல பயண பொதிகளை வைத்துக்கொண்டோ, வவுனியா உயர்கல்வி நிறுவனங்களில் கற்பவர்களை போன்றோதான் பெரும்பாலும் தோற்றம் அளிப்பார்கள். பாலியல் தொழிலாளிளாக வவுனியாவிற்கு வரும் யுவதிகள் பெரும்பாலானவர்களிற்கு தமிழில் கொச்சையாகவாவது பேச தெரிகிறது. இவர்களை விடத் தற்போது மிகக் குறைந்தளவிலான தமிழ் யுவதிகளும் இப் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்களில் சிலர் வவுனியாவை சேர்ந்தவர்கள். இன்னும் சிலர் முல்லைத்தீவு, கிளிநொச்சியை சேர்ந்தவர்கள். கண் ஜாடையாலோ, கையைப்பிடித்தோ ஓரம் கட்டும் ஆண்களிடம் தயக்கமில்லாமல் நேரடி யாகவே டீலைப் பேசுகிறார்கள். 'ஒரு மணித்தி யாலத்திற்கு எவ்வளவு?' எனப் பேரத்தை ஆரம்பிக்கிறார்கள்.

பெரும்பாலானவர்கள் 5000 ரூபாவிலிருந்தே ஆரம்பிக்கிறார்கள். ஆகக்குறைந்த தொகை 2000ரூபா. வயது, அழகு, தோற்றம் என்பன பணத்தை தீர்மானிக்கிறது. இதைவிட இன்னொருவிதமாகவும் பாலியல் தொழில் நடக்கிறது. இது பெருமெடுப்பிலான ஏற்பாடு. வவுனியாநகரம், ஏ9 வீதியில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் அலுவலகத்திற்கு எதிர்பக்கமாக அமைந்துள்ள தேக்கவத்தை பிரதேசத்தில் உள்ள சிலவிடுதிகளில் சிங்கள பகுதிகளிலிருந்து அழகிய இளம் யுவதிகளை அழைத்து வந்து தங்க வைக்கிறார்கள். பின்னர், நகரத்தில் சில தரகர்களின் மூலம் வாடிக்கையாளர்களை ஈர்க்கிறார்கள். ஒரு வாடிக்கையாளரை அழைத்து சென்றால் 1,000 - 3,000ரூபாய் வரை ஒரு தரகர் பெறுகிறார். நகரத்தில் தரகர்களாக அலைபவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள்தான். நகரத்திற்கு வருபவர்களை எப்படியோ பேசி, விடுதிக்கு அழைத்து சென்றுவிடுவார்கள். இவர்களின் வலைகளில் இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் வீழ்கின்றனர் எனச் சமூக ஆர்வலகர்கள் தெரிவிப்பதோடு, பொலிஸார் இச்செயற்பாடுகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் தெரிவித்தனர்.

மேலும் முதலாம் குறுக்குத்தெரு, தேக்கவத்தை பகுதிகளில் உள்ள சில விடுதிகள் மற்றும் வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள விடுதிகளில இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கின்றனர். இது எவ்வாறு இருக்க வவுனியா நகரத்தில் அதிகமாக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கான முக்கிய காரணம் என்ன என்று ஆராய்ந்தோம். இதன் போது பாலியல் தொழிலாளி ஒருவர் இது தொடர்பாக எமக்கு கருத்து தெரிவிக்கையில் மற்றைய மாவட்டத்தை விட வவுனியாவிலே அதிகவாடிக்கையாளர்கள் உள்ளனர் என்று தெரிவித்தார். இதனால் தமக்கான வருமானத்திற்கு பஞ்சமில்லை என்றும் கூறினார்.

இதேவேளை வவுனியா நகரத்தில் இத்தொழில் இவ்வளவு பகிரங்கமாக நடந்தும், காவல்த்துறை ஏன் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறது? பாலியல் தொழிலை வவுனியாவில் அங்கீகரித்து விட்டார்களா? என்றகேள்வி எழுகிறது. பேரூந்து தரிப்பிடம் மற்றும் நகரப்பகுதிகளில் பொலிசாரின் நடமாட்டம் அதிகளவில் இருந்தும், எப்படி இவ்களை தொழிலாளிகள் சுதந்திரமாக நடமாடி,வாடிக்கையாளர்களை பிடிக்கிறார்கள்? ஆபத்தான புற்றுநோயாக வவுனியா நகரத்தில் வளர்ந்துவரும் பாலியல்தொழிலை கட்டுக்குள் கொண்டுவருவதே, ஆரோக்கியமானதும், கண்ணியமானதுமான சமூகத்தை உருவாக்க செய்ய வேண்டிய முதல் பணி.

பொலிசார் தொடக்கம் பொதுமக்கள் வரை அனைவரும் இதில் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும். இல்லாவிடின் எய்ட்ஸ் நோயின் தாக்கத்தினால் 25 நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் வவுனியாவில் அதிகரிக்கும் இக் கலாசாரச் சீரழிவுக்கு முற்றுப் புள்ளி வைக்காவிடின் எய்ட்ஸ் நோயின் தாக்கத்திற்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை வருங்காலங்களில் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

**வவுனியா மாவட்ட பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி கு.சந்திரகுமார் இதுபற்றிக் கூறுகையில்....**

வவுனியாவில் கடந்த 16 வருட காலப்பகுதியில் 25 பேர் எயிட்ஸ் நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர். இலங்கையில் இது வரை 3507 எயிட்ஸ் நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 2391 ஆண்களும், 1116 பெண்களும் காணப்படுகின்றனர். வவுனியா மாவட்டத்தில் கடந்த 2003 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை 25 எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதியில் ஒரு நோயாளி இனம் காணப்பட்டுள்ளார். அவர்களில் 12பேர் மாத்திரமே உயிருடன் இருக்கின்றனர். அவர்களிற்கான சிகிச்சைகள் எம்மால் வழங்கபட்டு வருகிறது. இதேவேளை கடந்த மாதமளவில் வவுனியாவில் எயிட்ஸ் நோயாளி ஒருவர் சாவடைந்துள்ளார். அவருக்கு நோய் தொற்று ஏற்பட்டு நீண்ட காலத்திற்கு பின்னர் கண்டறியப்பட்டதால் அவர் நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டு சாவடைந்துள்ளார். வவுனியாவை பொறுத்தவரை இங்கு நோய் தொற்று ஏற்படுவதற்கு பிரதான காரணமாக இத்தகைய பாலியல் நடவடிக்கைகளே காணப்படுகின்றது.

வேறு மாவட்டங்களில் இருந்தும் பாலியல் தொழிலாளர்கள் இங்கு வருகை தருகின்றனர். எனவே எயிட்ஸ் நோய் தொடர்பாக இளைஞர்கள், இராணுவத்தினர், பொலிசார், மாணவர்கள் ஆகியோருக்கு பல்வேறு தெளிவுபடுத்தல்களை நாம் மேற்கொண்டு வருகிறோம். சாதாரணமாக நோயை குருதியில் இனம் காண்பதற்கு மூன்று மாதங்கள் தேவையாகவிருந்தது. தற்போது புதியமுறைகள் வந்துள்ளமையால் பத்து நாட்களிலிருந்து, ஒரு மாதகாலத்திற்குள் இனம் காண முடியும். அந்த காலப்பகுதி என்பது எமக்கு மிகவும் கடினமானதாகவும், சவால் நிறைந்ததாகவும் இருக்கிறது. ஏனெனில் அந்த காலத்திற்குள் மீண்டும் பாதுகாப்பற்ற பாலியல் உறவில் ஈடுபடுவதால் பலருக்கு நோய் தொற்றும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கிறது. எச்.ஐ.வி வைரஸ் ஒருவருக்கு தொற்றினால் அது எயிட்ஸ் நோயாக மாறுவதற்கு 8 தொடக்கம் 10 வருடங்கள் எடுக்கிறது.

நோய்தொற்று ஏற்பட்டவர் சாதாரண ஒரு மனிதரை போலவே இருப்பர். அவரது முக



த்தை வைத்து நோயை கண்டுபிடிக்க இயலாது. குருதியினை பரிசோதனை செய்வதன் மூலம் மாத்திரமே அதனை கண்டுபிடிக்க முடியும். ஒரு தரமாவது பரிசோதனையை மேற்கொண்டால் குறித்த நோய் மற்றவர்களிற்கு தொற்றாமல் தடுக்கலாம். வவுனியா வைத்திய சாலையில் நோயாளர்களாக அனுமதிக்கபடும் சிலருக்கு எச்.ஐ.வி பரிசோதனை மேற்கொள்ளபடுகிறது. தாமாகவும் சிலர் வருகை தந்து பரிசோதனையை மேற்கொள்கின்றனர். எனினும் அது குறைவாக காணப்படுகின்றது.

எனவே வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவில் பொதுமக்கள் தாமாக வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். இங்கு பரிசோதனைகள் மேற்கொள்பவர்களது விபரங்கள் இரகசியங்கள் பாதுகாக்கப்படும் என மேலும் தெரிவித் தார்.



# அதிசயங்கள் நடத்தும் ஜிமாவின் கைபேசி

"ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன்" என்று சொல்வதுண்டு ஆனால் இற்றைக் காலத்தில் "செல்பேசி இல்லாதவன் குறைமனிதன்" என்று கூறுமளவுக்குச் செல்போனின் பயன்பாடு அதிகரித்து விட்டது. தொடக்க காலத்தில் இந்தச் செல்போன்கள் வருகை என்பது பெரும் செல்வந்தர்கள் மட்டுமே பயன்படுத்தக் கூடிய வகையிலேயே இருந்து வந்ததது போன் பேசுகிறவ ர்களும் பணம்செலுத்த வேண்டும் எதிர்முனையில் காது கொடுத்துக் கேட்பவரும் பணம் செலுத்த வேண்டும். செல்போனின் விலையும் பல ஆயிரம் ரூபாயாக இருந்தது. நாளடைவில் நிலைமை கள் மாறி குறைந்த விலை செல்போன்கள் சந்தையில் புழங்கத் தொடங்கின. பேசுவதற்கான தொகையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுச் சாதாரண மக்களும் செல்போன் பயன்படுத்தத் தொடங்கினர்.

இன்றைக்கு மனித உடலுறுப்புகளில் ஒன்றுபோலவே கூடவே ஒட்டிக் கொண்டுவிட்டது. செல்கின்ற இடங்களி லிருந்து ஒருவருக்கொருவர் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு மிகச் சிறந்த வசதியாக இருந்த செல் போன் இப்போது நவீன அவதாரமெடுத்துப் பேசுவது தவிரவும், பல்வேறு அலங்காரமானா புதிய வசதிக ளைத் தருவித்துக் கொண்டே இருக்கிறது. இது போ ன்று பெருகிக் கொண்டே செல்லும் செல்போன் வசதி களால் அதனைப் பயன்படுத்திப் பழகியவர் எவரும் "செல் போன் இல்லாமல் வாழவே முடியாது" என்ற நிலை ஏற்பட்டு ள்ளதை எவரும் மறக்கவியலாது.

செல்போன் பயன்பாட்டின் எதிர்காலம் குறித்த ஒரு கற்பனையான, ஆனால் நிஜத்தில் ஒரு காலத்தில் நடக்கும் சாத்தியமுள்ள அம்சங்களைக் கற்பனை யான புனைவாகச் சொல்கிறது "ஜிமாவின் கைபேசி" என்ற சிறிய புத்தகம். கொ.மா.கோ. இளங்கோ எழுதிய இந்நூலை புக்ஸ்ஃபார்சில் ரன் வெளியிட்டுள்ளது. இன்று பலவீடுகளில் சிறுவர், சிறுமிகளின் விளையா ட்டுப் பொருளாகச் செல்போன் படாதபாடு பட்டுக் கொண்டிருப் பதைப் பார்க்கலாம்.

ஜி.மானஸா எனும் ஒரு சிறுமிக்கு ஒரு லோரேடியேன் எனும் கைபேசிகிடைக்கிறது. அந்தக் கைபேசிக்குச் சிம்கார்டு கிடை யாது. ஆனால் பேட்டரி உண்டு ஜிமா என்னும் அந்தச் சிறுமியுடன் அக்கைபேசியில் உள்ள "டிப்பி" எனும் பெண்ணுருவம் தமிழில் பேசுகிறது. செல் போனில் தெரியும் அப்பெண் ஜிமாவுக்கு காலைவணக்கம் சொல்கிறாள். ஜிமா வீட்டுப் பாடம் எழுதுவதற்கு உதவி செய்கிறாள். கேள்விகள் கேட்டு மதிப் பெண்ணும் போடுகிறாள். பல்வலிவராமல் இருப்பதற்கு இரண்டுமுறை பல் துலக்கவேண்டும் என்று அறிவு ரை சொல்கிறாள். தாங்க முடியாத கொசுக் கடியிலிருந்து தப்பிக்கும் ஒரு மென்பொருளை பதிவிறக்கித் தருகிறாள் (Anti – mosquito repellent




software) அந்த மென் பொருள் உதவியால் கொசுக்கடி இல்லாமல் நிம்மதியாக உறங்கலாம் அந்தக் கைபே சியில் வரும் "டிப்பி" பெண் செயற்கை கோளிலிருந்து தகவல்களைக் கண்டறிந்து மழை எப்போது எந்த நேரத்தில் வரும் என்பதை முன் கூட்டியே ஜிமாவுக்குச் சொல்லிவிடுவாள். சுனாமி வருவதற்கான அறிகுறிகள் தென்பட் டால் கூடச் செல்போன் வழியாக எச்சரிக்கை ஒலி எழுப்பி அழிவி லிருந்து காப்பாற்றி விடுவாள்.

கற்பனையாக உருவாக்கப்பட்ட ஜிமாவின் கைபேசி யிலுள்ள டிப்பி என்ற பெண்ணுருவம் செய்வதாகச் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு சாகசங்களும் விஞ் ஞான ரீதியில் பிற்காலத்தில் சாத்தியமாவதற்கு நிறைய வாய்பப்புகள் உள்ளனவாகும் கணிப்பொறியினால் இன்று எவ்வளவு விரைவாக வேலைகளைச் செய்து கொள்ள முடியும். ஜிமாவின் கைபேசி அசாத் தியமான சாதனைகளைச் செய்வதைப் படிக்கப் படிக்க, ஆர்வ மும், சந்தோஷக் குதிப்பும், ஆச்சரியங்களும் பெருகிய படி உள்ளன.

ஜிமாவின் கைபேசியின் எதிரில் ஒருவர் நின்றால் போதும் அவருக்கான அனைத்து மருத்துவப் பரிசோ தனைகளும் செய்யப்பட்டு மருத்துவ சோதனைகளின் அறிக்கையைப் பெறலாம் கூடுதலாகத் தேவைப்ப ட்டால் தகுந்த மருத்துவரைப் பற்றிய ஆலோசனை களும், அதற்கான உதவிகளும் கேட்டவுடனே கிடைக் கும். கைபேசி வழியாக மேல் சிகிச்சை மற்றும் மருந்து மாத்திரைகள் போன்ற உதவிகளும் கூட ஏற்பாடு செய்யப்படும்.

ஒருவரது உடலில் எங்கேனும் அடிபட் டுவிட்டால் இந்தக் கைபேசியைக் கொண்டு அடிபட்ட இடத்தை அப்படியே எக்ஸ்ரே எடுக்கலாம். உடனே அதற்கான மருத்துவ அறிக்கையைப் பெற்று அதற்கான மருத்துவ சிகிச்சை ஆலோசனையையும் கேட்டுக் கொள்ளலாம். அறிவியல் கண்காட்சிக்காக ஜி மாதன் கைபேசியின் வழியாக எத்தனை விதமான கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறாள் தெரியுமா? வீட்டில் கேஸ் சிலிண்டரை மூடாமல் மறந்து விட்டு வந்திருந்தால் கைபேசியில் உள்ள மென் பொருள் உதவியால் ஒரு வர் தாங்கள் இருந்த இடத்திலிருந்தே கேஸ் சிலிண்டரின் ரெகுலேட்டரை மூடிவை க்கும் வசதி, பாதுகாப்பின் வலிமை யைக் கூட்டச் சாவிகளை கொண்டு அல்லாமல் பூட்டுகளை கை பேசி உதவியுடன் மட்டுமே திறக்கும் படி அமைத்துக் கொள்ளலாம்.

ஒருவர் உட்கார்ந்த இடத்திலிருந்தே ஓட்டுநரே இல்லாமல் கைபேசி ரிமோட் மூலம் இயங்கியே கார் ஓட்டிச் செல்லலாம். வீட்டில் உபயோகிக்கும் குடிநீரை இந்தக் கைபேசி மூலமாகவே அதன் தூய்மைத் திறனை அறிந்து கொள்ள லாம். எந்திரக் குரவிகளை உருவாக்கி பறக்க விடுவதன் மூலம் கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களை அயல் நாட்டுத் தாக்குதலிருந்து காப்பாற்றலாம். இப்படி எண்ணற்ற அறிவியல் சாதனைகளை ஜிமாவின் கைபேசி நிகழ்த்துகி றது. மேலும் யாரும் நினைத்துப் பார்க்கவியலாத அபூர்வமான அருஞ் செயல்களையும் கூட இந்த கைபேசியால் செய்ய முடியும் என்ற எண்ணத் தையும் அழுத்தமாகச் சொல்கிறது. வெற்றுக் காகிதத்தையே கைபேசியாக உருவாக்கும் காலம் வந்துவிட்டது என்பதை டிப்பி இப்போதைக்கு யாருடனும் பகிரவில்லை ஏன்று ஒரு பீடிகையும் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

பெண்கள் வளையல்கள் போன்றவகைகளில் போட்டுக் கொண்டு தங்கள் கைபேசியியைப் பயன்படு த்தலாம் என்று இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளதை நினைத்துப் பார்க்க திகைப்பாகவும், மலைப்பாகவும் இருக்கிறது. அசாத்தியமான கற்பனை வளம் வாய்ந்த இந் நூலா சிரியருக்கு வாழ்துக்கள்.

குழந்தைகளுக்காக தொடர்ந்து ஏராளமாக எழுதி வரும் கொ.மா.கொ.இளங்கோவின் கற்பனையில் வடிவமைந்த ஜிமாவின் கைபேசியைப் போல நிஜமா கவே நாளைய உலகில் இப்படியான செல்போன்கள் உலவப் போவதை உறுதிசெய்யும் வகையில் 20.01.2016 தேதியிட்ட தமிழ் இந்து நாளிதழ் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது

சமீபத்திய கண்டுபிடிப்பான ஸ்மார்ட் ஸ்டெதஸ்கோப் பற்றிய செய்தி அது. ஸ்மார்ட் போனைப் போலிருக்கும் இந்த ஸ்டெதஸ் கோப்பால் நாடித்துடிப்பைப் பதிவு செய்யமுடியும் என்று அந்த தகவல் சொல்கிறது. ஆகச் கூடிய விரைவில் மேற்கண்ட அனைத்து விக்ஷயங்க ளையும் நாமும் செல்போன் உதவியால் செய்யமுடியும் என்பதை இப்போதே நினைத்து சந்தோக்ஷப்பட்டுக் கொள்ளலாம். குழந்தைகளுக்கான மொழியில் இந் நூல் எழுதப்பட்டிருந்ததும் அனைவரும் படித்து வியக் கும் வண்ணம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பின்னாளில் வரப்போகும் அறிவியல் கண்டுபிடிப்பு களை தனது விஞ்ஞான பூர்வமான கற்பனையால் எழுதிய கொ.மா.கோ.இளங்கோவும் அதனை வெளி யிட்ட புக்ஸ்ஃபார் சில்ரன் பதிப்பகமும் பாராட்டுக்கு ரியவர்கள்.




உங்கள் வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்று பலவகையாகக் கனவு கண்டிருப்பீர்கள். ஆனால் அதை நனவாக்கத் தெளிவான செயல்திட்டமோ, முயற்சியோ இன்றி காலம் கடத்தியமையால் கனவாகவே நின்று போய் விட்டது.

உலகில் சாதனை படைத்தவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால், சாதிப்பதற்கு முன்பு அனைவரும் கனவு கண்டவர்களே என்பதை அறிவீர்கள். அரும்பெரும் காரியங்களைச் சாதித்தவர்கள் தாங்கள், சாதிக்க வேண்டியது என்ன? என்று திட்டமாக முடிவு செய்தார்கள். அது நிறைவேறுவதற்கு என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என்று தொடர்ந்து ஆழ்ந்து சிந்தித்தபோது அவர்களுடைய ஆழ்மனமே அதை நிறைவேற்றுவதற்குரிய ஆலோசனைகளையும், திட்டங்களையும் அளித்தது.

ஆழ்மனம் வழங்கிய யோசனைகளையே மேலும் மேலும் சிந்தித்து பரிசீலித்தபொழுது அவற்றுள் சிறந்த செயல்திட்டத்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஏதோ நேரம் கிடைக்கும்போது மட்டும் அதைப்பற்றி நினைக்காமல் இரவு, பகல் பல மணி நேரம் அதைப்பற்றியே சிந்தித்தார்கள். உறங்கப் போகும்போது இறுதியாகத் தங்கள் குறிக்கோளையே சிந்தித்தார்கள்.

உறங்கி எழுந்தபோதும் தங்கள் குறிக்கோளைப் பற்றியே நினைத்தார்கள். இப்படி சிந்தித்ததன் மூலம் தங்கள் குறிக்கோள் படிப்படியாக நிறை வேறுவது போன்று இரவும், பகலும் கனவு கண்டார்கள். அதைப்போன்று நீங்களும் சாதிக்க விரும்பும் குறிக்கோளைக் கனவாக அமைத்து கற்பனையில் மாளிகை கட்ட வேண்டும்.

பெரியதொரு தொழிற்சாலை நிறுவி, எந்திரங்களை அமைத்து, பொருள்களை உற்பத்திசெய்து, மக்கள் அதை வாங்கிப் பயன்படுத்துவது போன்றும், மேலும் மேலும் இலாபம் குவிவது போன்றும், நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் மகிழ்ச்சியோடு வாழ்வது போலவும், இல்லாதவர்களுக்கு ஏழை எளியவர்க்கும் உதவி செய்து சமுதாயத்தில் மதிப்போடும் மரியாதையோடும் வாழ்வது போன்றும் கற்பனை மாளிகை கட்டுங்கள். அல்லது மற்றவர் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்கி விநியோகித்து வணிக நிறுவனங்களை நடத்துவது போன்று கற்பனை செய்யுங்கள். நியாயமான முறையில், அளவான இலாபம் வைத்து விற்பனை செய்வது போன்றும், உங்கள் வங்கியிருப்பு மேலும் மேலும் உயர்வது போன்றும் கற்பனை மாளிகை கட்டுங்கள்.

அல்லது சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி மனித குலத்தின் துன்ப, துயரங்களைப் போக்குவதற்கு, ஆக்கபூர்வமாக உழைத்து, பல்லாயிரக்கணக்கான மக்களின் வறுமை, நோய், துன்பங்களை நீக்குவதற்கு தொண்டர் படைகளை அமைத்து மக்களின் நன்றியையும், வாழ்த்துக்களையும் பெறுவது போன்று தெளிவாகக் கனவு காணுங்கள். "நான் மிகச் சாமானியன். எனக்கு எந்தத் திறமையும் இல்லை. பணவசதியும் போதுமானதாக இல்லை. படிப்பும் குறைவு. என்னால் என்ன செய்ய முடியும்!" என்று உங்களை நீங்களே குறைத்து மதிப்பிட வேண்டாம். உங்களைப் படைத்த இறைவன் அளவற்ற ஆற்றலை உங்களுக்குள்ளே வைத்துத்தான் இவ்வுலகிற்கு அனுப்பியிருக்கிறான். அந்த ஆற்றலை உங்களாலும் அளந்தறிய முடியாது. உங்களைச் சுற்றி வாழ்பவராலும் அறிய முடியாது. ஏனெனில் அவ்வாற்றல் ஐம்புலன்களால் அறியப்படக்கூடியதன்று. ஆனால் அவ்வாறல் செயலாக வெளிப்படும்போது உலகம் வியக்கும் சாதனைகளை உங்களால் செய்யமுடியும். உங்கள் ஊரில் ஆலமரம் ஏதேனும் உண்டா? ஒருமுறை அம்மரத்தின் கீழ் நில்லுங்கள். ஆலம்பழம் ஒன்றைத் தேடிப் பிடியுங்கள். அப்பழத்தை உடைத்து ஒரே ஒரு விதையை உங்கள் உள்ளங்கையில் வையுங்கள்.

மிகச்சிறிய அற்பமான, காற்றில் பறக்கக்கூடிய, கனமற்ற விதையை உற்று நோக்குங்கள். இப்போது உங்கள் தலைக்குமேலே பார்வையை உயர்த்துங்கள். உயர்ந்து வளர்ந்து பரந்து விரிந்த கிளைகளைப் பரப்பி விழுதுகளையும் வேர்களையும் ஆழமாக நிலத்தில் ஊன்றி, ஆயிரக்கணக்கான பறவைகளுக்கும், நூற்றுக்கணக்கான கால்நடைகளுக்கும் உணவும், நிழலும் தந்து கம்பீரமாக நிற்கிறதே! அந்த ஆலமரம் பல ஆண்டுகளுக்கு முன்னர் உங்கள் கையில் உள்ள ஆலம் விதை போன்ற வேறொரு விதைக்குள்தான் உறங்கிக் கொண் டிருந்தது.

இப்போது உங்கள் கையில் உள்ள விதைக்குள்ளும் இதைவிடப் பெரிய ஆலமரம் ஒன்று உறங்கிக் கொண்டுள்ளது. ஆனால் நம் ஐம்புலன்களால் அதை அறிய முடியவில்லை. அறிய முடியவில்லை என்பதனால் விதைக்குள் ஆலமரம் இல்லை என்று எவராலும் மறுக்க முடியாது. அதுபோன்றே மிகப் பெரும் சாதனைகளைச் செய்வதற்குத் தேவையான அளவற்ற ஆற்றல் உங்களுக்குள் அடங்கி உள்ளது. இப்போது நீங்கள் வறுமையில் வாடுபவராக இருக்கலாம். பற்றாக்குறை உங்களைப் பரிதவிக்கச் செய்யலாம். தோல்வியில் துவண்டு போயிருக்கலாம். பாதகமில்லை. உங்களின் தற்போதைய தாழ்ந்த நிலை, நீங்கள் எதிர்காலக் கனவு மாளிகை கட்டுவதற்குத் தடையாக இருக்க வேண்டியதில்லை.

அற்பமான ஆலம்விதை விலங்கோ, மனிதனோ மதித்தமையால் மண்ணில் புதைந்தது. மண்மீது மழைநீர் பட்டு ஈரமானபோது, விதைக்குள்ளிருந்த சக்தி உயிர்பெற்று விதையைக் கிழித்துக் கொண்டு வெளியில் வந்தது. மண்ணும், நீரும், காற்றும் இணைந்தபொழுது இயற்கையாகவே ஒரு இரசாயன மாற்றம் நிகழ்ந்தது. அந்த இரசாயன மாற்றம், விதைக்குள்ளிருந்த முளைப்பை வளரச்செய்து, தண்டாக வளர்ந்து, இலைகளாகப் பரிணமித்து, பூக்கும், மரமாகி, ஆணிவேரை ஆழப்பதித்து, பக்க வேர்களைப் பரப்பி மிகப் பெரிய ஆலமரமாகிவிட்டது.

பெரும் மரமாவதற்கு விதை பெருமுயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. இயற்கை அதனுடன் ஒத்துழைத்து அதன் பூரண வளர்ச்சியைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதுபோன்றே உங்கள் ஆழ்மனம் இயற்கைச் சக்தியை உள்ளடக்கிய நிலம் போன்றது. நீங்கள் சாதிக்க விரும்பும் குறிக்கோள் பற்றிய எண்ணமாகிய விதையை அந்நிலத்தில் ஊன்றுகிறீர்கள். விதை முளைத்துச் செடியாகப் போகிறது என்னும் நம்பிக்கையுடன் நீரூற்றுவீர்கள் அல்லவா? அதுபோன்று நம்பிக்கையைத் தொடர்ந்து ஆழ்மனம் என்னும் நிலத்தில் ஊற்றுகிறீர்கள். இப்போது சூழ்நிலை என்னும் காற்று அவற்றோடு சேரும் போது இயற்கையாகவே ஒரு இரசாயன மாற்றம் ஏற்படுகிறது.

சுருங்கச் சொன்னால் ஆழ்மனம் நிலம் எண்ணம் விதை நம்பிக்கை நீர் சூழ்நிலை காற்று எனலாம். உங்களுக்குள் இந்த இரசாயன மாற்றம் உண்டாவதை ஐம்புலன்களால் அறிய முடிவதில்லை. ஆனால் செடி வேரூன்றி வளர்ந்து, கிளைகளைப் பரப்பி, பூப்பூத்து, பிஞ்சு பிடித்துக் காய்காகி, கனிகளைத் தருவது போன்றே உங்கள் கனவும் படிப்படியாக வளர்ந்து நனவாகி விடுகிறது.

உங்கள் குறிக்கோளின் தன்மையைப் பொருத்து, அது கனவாகி, நனவாவதற்கு 10, 20, 30 ஆண்டுகள் ஆக வேண்டும் என்பது இயற்கை நியதியே என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். நம்பிக்கையுடன் காணும் கனவுகள் நனவாகியே தீரும். நம்புங்கள்.!




மிக இளம் வயதில், விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்விக்கப்பட்டது அவளுக்கு. ஆகவே அந்த உறவு நீடிக்காது மண முறிவு ஏற்பட்டது.

காதலிக்கிற பருவம் வரும்போது கல்லூரியில் தத்துவம் பயின்று கொண்டிருந்தாள். தன்னுடன் படித்த பலரை அவள் காதலித்தாள். தத்துவம் பிடிக்காது ஜென் மாணவியாகத் தீர்மானித்து அவள் போனபோது சக மாணவர்கள் அவளைக் காதலித்தனர்.

காதல் என்பது திகட்டி, மரத்துப் போனபோது உண்மையில் ஜென் கற்க முடிவு செய்தாள். ஒரு நல்ல கூட்டாளி கிடைத்தான். இருவரும் சேர்ந்து கற்றனர். மடத்தின் தலைமைத் துறவியின் மனைவிக்கு இந்தப் பெண்ணின் அழகிலும் அவளுக்குக் கிடைத்த மதிப்பிலும் பொறாமை உண்டாயிற்று. அவளைப் பற்றியும் அவள் கூட்டாளியான பையனைப்பற்றியும் வதந்திகளைப் பரப்பி இருவரும் வெளியேற்றப்படும்படி செய்தாள்.

தனக்கும் தன் தோழனுக்கும் இழைக்கப்பட்ட அநீதியில் ஆத்திரமடைந்த அந்தப்பெண், துறவியின் மனைவி கோயிலில் இருக்கக் கூடாது என்று முடிவு செய்தாள். கோயிலைக் கொளுத்தினாள்.

காவலர்கள் அவளைத் தண்டிக்க அழைத்துப்போனார்கள். அவளைக் காப்பாற்ற முன்வந்த வழக்கறிஞர்களைத் தடுத்து, "என்னைக் காப்பாற்ற முயற்சிக்காதீர்கள். மறுபடி ஏதாவது செய்து விட்டு இங்கேதான் வருவேன்" என்றாள்.

ஏழாண்டுகள் தண்டனை தரப்பட்டது. விடுதலையானபோது அவளை யாரும் மதிக்கவில்லை. சிறைப்பறவையாக முத்திரை குத்தி அநாகரிகமாக நடத்தினார்கள். அவமானத்திலும் வருத்தத்திலும் முப்பதாவது வயதிலேயே அவள் செத்துப் போனாள்.

தன் கதையை ஒரு தோழி மூலம் எழுதி வைத்திருந்தாள். அவள் மரணத்துக்குப் பின் அது வெளியாயிற்று.

அவளை அவமானத்துக்கும், துன்பத்துக்கும் உள்ளாக்கியவர்கள் அதை மிகுந்த வேதனையோடும், கண்ணீரோடும் படித்தார்கள்.

நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் மகான்களை ஆராதிப்போம். அருகிலிருக்கிறவர்களை நேசிக்க மாட்டோம். ஆயிரம் Prejudice கள் இருக்கும். 'Love thy neighbor' என்று ஏசுநாதர் சொன்னால் "அவள் புருஷன் கோபப்பட்டால் என்ன பண்ணுவது?" என்று கேட்போம்.

மனிதர்களின் உன்னதங்களும், நியாயங்களும் அவர்கள் வாழ்கிற காலத்தில் நமக்கும் புரிவதில்லை!.

## நம்பிக்கை ஊற்று: தேவைப்படும் பெண்கள்

# லக்ஷ்மியின் ஏன் இந்த வேகம்.

# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் – 22



லக்ஷ்மி

கேசவன் தோற்றத்தில் மட்டும் வசீகரமானவை அல்ல. மனதைக் கவரும் வகையில் பேசும் அளவுக்கு கெட்டிக்காரன்கூட என்பதை சில தினங்களிலேயே புரிந்து கொண்டு விட்டிருந்தாள். அந்தத் தனியார் பள்ளியில் வேலை செய்ததாலோ என்னவோ அவளுள் ஒரு பலவீனம் உருவாகி விட்டிருந்தது.

ஆங்கில மொழி மீது அபார மோகம்! யாராவது அதை அழகாகப் பேசுவதை கேட்டால் போதும் அவர்கள் வாயையே பார்த்துக் கொண்டிருப்பாள் தாரணி

“இதய நோயாளி. விரைவில் சாகப் போகிறவள். மனதுக்கு பிடித்தவனைக் காதலித்தால் என்ன மோசம் வந்துவிடப் போகிறது? என்று தனக்குள்ளேயே சமாதானம்.

வேறுபட்ட இருவரது வசீகரமும் மோதிக்கொண்டதின் விளைவு? அவள் உயிர் வாழ வேண்டியவள் தானா? ’என்ற கேள்வியை எழுப்புவதாக முன் நிற்கிறது. அவன் மீது கொண்ட நட்பும் வசீகரமும் உண்மையானது என நம்பி அவள் எழுதிய நாட்குறிப்புகளைப் பறித்துக் கொண்டு அவன் பேசிய பேரம் அருவெறுப்பானது.

இரகசியமான சந்திப்புகள். பேச்சுக்கள்.. மனதைக் கவர அவன் புனைந்த கவிதைகள். இவைகள் அவள் மறக்க விரும்பவில்லை.

கேசவன் ஒரு கவிஞன் அல்ல. பெண்களை ஏமாற்றும் கயவன் என்பது பின்னர்தான் முழுவதும் புரிந்தது

“என்னை தனியே சந்தித்தால் தான் திருப்பித் தருவேன். இல்லாவிடில் உன் அப்பாவிடம் கொடுத்து விடுவேன்” என்று அவன் பயமுறுத்தியதும்.. உண்மையில் தாரணி பயந்துவிட்டாள்.

பயம் உண்டாக்கிய தடுமாற்றம் அவளை அவனிடம் ஒப்படைத்துவிட்டது. அவன் அவளைப் பயன்படுத்திக் கொண்டான். பயன்படுத்திக் கொண்டதோடு முடியாமல் அவனது மனைவி மூலம் பெரிய அவதூறும் பரவி விடுகிறது. தற்செயலாகச் சென்னைக்குச் சென்ற பயணத்தைக் கருவைக் கலைப்பதற்கான பயணமாக மாற்றி விடுகிறது. அந்த அவதூறே அவளைத் தற்கொலைக்கு அருகில் நிறுத்துகிறது.

தற்கொலைக்கு அருகில் இருந்தவளுக்கு வந்த ஆறுதலே பள்ளியின் முடிவு. ஊனமுற்றோர் ஆண்டிற்காக ஒருவருக்கு உதவு என்ற முடிவின் படி அவளைத் தேர்ந்தெடுத்து அவள் நோய்க்கு - இதயநோய்க்கு வைத்தியம் செய்வதாகச் சொல்கிறார். அந்த முயற்சி, தனது மனதில் இருக்கும் தவறான எண்ண ஓட்டங்களுக்கும் மருந்துவம் பார்த்துப் புதுவாழ்வை வழங்கும் என்ற நம்பிக்கையில் பள்ளியின் முதல்வரிடம் அனைத்தையும் கூறி மன்னிப்பு கிடைக்குமா? என்று கேட்டு ஏங்குகிறாள். அந்தச் சந்திப்பை - ஆறுதலும் நம்பிக்கையும் தரும் அந்தச் சந்திப்பை இப்படி எழுதுகிறார் :

**அ. இராமசாமி**

தாரணி மட்டுமே தனியே வீட்டிலிருந்தாள். கதவு லேசாக தட்டப்பட்டது. திறந்த போது அந்த தனியார் பள்ளியின் தலைவி வந்து கொண்டிருந்தாள்.

“அம்மா! தாயினும் மேலான அன்பைக் காட்டும் தங்களிடம் சொல்லுகிறேன் நான் கருச்சிதைவு செய்து கொள்ளவில்லை. ஆனால் கேசவனிடம் பெண்மை அழிந்து போனவள். தலைவி செல்லம்மாள் அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு ஆறுதல் கூறிவிட்டு அகன்றார்.

பள்ளித் தலைவியின் ஆறுதலும் நம்பிக்கை ஊட்டும் செயல்களும் மறு உயிர்ப்பைத் தருகின்றன. திரும்பவும் வாழ்வேன் என்று முடிவு செய்துவிட்டாள் என்பதைக் கதாபாத்திரக் கூற்றாகச் சொல்லாமல் ஆசிரியர் கூற்றா கச் சொல்கிறார் முடிவில்:

அவள் அறுவை சிகிச்சை செய்துகொண்டு நீண்ட காலம் ஒரு நல்லவனின் மனைவியாக வாழப் போகிறாள்

தாரணி !நீ நம்பிக்கையை இழக்காதே!

இந்திய சமூகத்தில் ஆண்கள் செய்யும் தவறுகளும் குற்றங்களும் கண்டுகொள்ளாமல் தவிர்க்கப்படுகின்றன. அவர்களே கூட எளிதில் மறந்து விட்டு இன்னொன்றில் நுழைந்து விடுகின்றனர். ஆனால் பெண்கள் தாங்கள் அறியாமல் செய்த சிறு தவறுக்கும் அறிந்த நிலையில் சூழலால் நேரும் விபத்துகளுக்கும் தண்டனையாகத் தற்கொலை முடிவுகளை எடுக்கின்றனர்.

தற்கொலைகளும் மரணங்களும் பிறப்புக்கு எதிரானது. பிறந்து வளர்ந்தவர்கள் வாழ்ந்துதான் ஆக வேண்டும் எனச் சொல்லவேண்டியதும் நம்பிக்கையை ஊட்ட வேண்டியதும் இலக்கியத்தின் வேலை. அதில் பெண்களுக்கு தேவையான நேரத்தில் நம்பிக்கை ஊட்டுதல் முக்கியமானது. அந்த வேலையைச் செய்த எழுத்தாக லக்ஷ்மியின் எழுத்துகளை வகைப்படுத்துவதின் மூலமாகவே தமிழ்ப் புனைகதைப் பரப்பில் அவரது இடத்தை உறுதி செய்ய முடியும்.



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

இது பௌத்த நாடு: ஆட்சியும் அதினடிப்படையிலேதான்! பல்கலைக் கழகத் துணைவேந்தர்களுடனான கூட்டத்தைத் தனிச் சிங்களத்தில் நடத்தினார் உயர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன என்ற செய்தியைப் பார்த்ததும் வயிரமுத்துவாகிய நான் வாயடைத்துப் போனேன்.

தேர்தல் முடிந்தவுடன் பௌத்த பிட்சுவான ஞானசார தேரர் சொன்ன வார்த்தைதான் எமது ஞாபகத்துக்கு வருகிறது. இது ஒரு பௌத்த தேசம் என்றதை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். தற்போது எது தாய் வீட்டிற்கு வந்திருப்பதாக உணர்கிறேன். அதனால் நான் எனது அமைப்பைக் கலைப்பதற்கு ஆயத்தமாகிறேன் எனச் சூளுரைத்திருந்தார்.

ஆனால் அப்போது தமிழ் மக்களாகிய நாம் அதனைப் பெரிதாக எண்ணவில்லை. ஆனால் தற்போது ஒரு பொறுப்புமிக்க அமைச்சர் அதனைத் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்.

அது மட்டுமல்ல ஜனாதிபதி பதவியேற்பின்போது “எனது வெற்றிக்குச் சிங்களப் பெரும்பான்மை இன மக்களே காரணம். சிறுபான்மை இனத்தவர்கள் என்னோடு இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.” என்று குறிப்பிட்டதையும் ஞாபகப்படுத்திக் கொண்டு....

தற்போதைய ஜனாதிபதி முன்பொருமுறை இலங்கையைச் சிங்கப்பூராக மாற்றிக் காட்டுவேன் என்று சபதம் எடுத்திருந்ததாக ஞாபகம். ஆனால் நான் அறிந்த அளவுக்கு சிங்கப்பூர் தனது நாணயத்திலேயே நாணயமாகச் சிறுபான்மை இனத்தவரை மதித்து தமிழையும் அதில் அச்சிட்டிருக்கிறார்கள். அந்த நாடு முக்கியமாக இந்த அளவுக்கு முன்னேறியது இனப்பாகுபாட்டைக் களைந்து அந்த நாடு எல்லோரையும் சரி அளவில் பார்ப்பதேயாகும்.

நான் முன்பொருமுறை அங்கு போயிருந்தபோது அங்குள்ள சீன மொழி பேசும் ஒருவரைப் பார்த்து நீங்கள் சீனரா? என்ற கேட்டுவிட்டேன். அவர் முகத்தைக் கடுப்பாக வைத்துக் கொண்டு “நான் சிங்கப்பூரியன்” என்ற பதில் தந்தார்.

அங்குள்ள மக்கள் தங்களை அந்த நாட்டு அரசு மிகவும் மரியாதையுடன் நடத்துகிறது என்ற விதத்தில் அந்த நாட்டின் மீது அதிகளவு பற்று வைத்திருக்கிறார்கள் அவர்கள் தமது தேசத்தை அளவு கடந்து நேசிக்கிறார்கள். இது என்னவென்றால்...

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் தற்போது பதவியிலுள்ள தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி அவர்கள் தலைமையில் கலந்து கொண்டனர். போவதற்கு முன்னர் தடல்புடலான ஏற்பாட்டோடு சென்றதாகக் கேள்வி. ஆனால் இவர்கள் தங்கள் பிரச்சினைகளை எந்த மொழியில் கூட்டத்தில் பிரஸ்தாபித்திருந்தனர் என்று அறிய அவர்களைத் தொடர்பு கொண்டோம். முடியவில்லை...

இத்துடன் இன்னும் ஒரு செய்தி... 1948 க்குப் பின்னர் இலங்கை ஆங்கிலேய ஆட்சியாளர்களிடமிருந்து விடுபட்ட நாள் தொட்டு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் இத்தடவை தான் முஸ்லிம்கள் அல்லாது அமைச்சரவை உருவாக்கப்பட்டிருக்கிறது. என்ன வேடிக்கை. அப்ப மா புளிப்பது அப்பம் சுடுபவனுக்குத்தானே லாபகரம்? இல்லையா!




# "லங்கா ராணி"யைப் படைத்த அருளர் நினைவாக...

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும், ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) ஸ்தாபகர்களில் முக்கியஸ்தரும், உண்மையாகவே இடது சாரிச் சிந்தனையில் ஆழமான ஈடுபாடு கொண்டவருமான லங்கா ராணி அருளர் என்று அனைவராலும் அறியப்பட்ட அருள்பிரகாசம் அவர்கள் தனது நினைவுகளை அழுத்தமாகப் பதிவு செய்துவிட்டுப் போய்விட்டரர்.

ஒருவரின் மரணப் பிரிவு என்பது, விட்டுச் செல்லும் இடைவெளி என்பது, அவர் வாழ்ந்த காலத்தில் மானுடம் தழுவிய அவரது செயற்பாடுகளில் எத்தகைய வகிபாகத்தை கொண்டிருந்தார் என்ற செய்திகளின் அடிப்படையிலேயே எத்தகைய வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது என்பதை உணர்த்துவதாக இருக்கும்.

அருளரின் மறைவு என்பது அவர் குறித்த பல்வேறு விமர்சனங்களுக்கும், கருத்துகளுக்கும் அப்பால் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மத்தியில் நிரந்தரமான அதிர்வலையை ஏற்படுத்தவே செய்யும்.

1977 இல் அவர் எழுதிய "லங்கா ராணி" நாவல் ஈழப்போராட்டத்தின் முதலாவதும், முக்கியமானதுமான, உள்ளதை உள்ளபடி பேசிய இலக்கிய ஆவணமாகும்.

அருளர் அவர்களின் "லங்கா ராணி" நாவல் குறித்து பிரபல நாவலாசிரியர் அகிலன் 1981 இல் எழுதிய கருத்துகளைக் கீழே தருகிறோம்.

1977 ஆகஸ்டில் இலங்கையில் இனக்கலவரம் நடந்ததல்லவா? அதில் பாதிக்கப்பட்ட 1200 தமிழ் அகதிகளைச் சுமந்து கொண்டு "லங்கா ராணி" என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, தெற்கு நோக்கி வந்து, இலங்கைத் தீவைச் சுற்றிக் கொண்டு, வடக்கில் யாழ்ப்பாணத்தில் உள்ள பருத்தித்துறைத் துறைமுகத்துக்குச் செல்கிறது. கப்பல் கொழும்பில் புறப்படுவதுடன் தொடங்கும் கதை, இரண்டு நாட்களில் பருத்தித்துறையைச் சென்றடைவதோடு முடிகிறது.

இது கற்பனைக் கதையல்ல. முற்றிலும் உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட உயிர்த் துடிப்புமிக்க கதை. இரண்டே நாட்களில் நடக்கும் கதையைப் போலத் தோன்றினாலும், இதில் அங்கங்கே 2500 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் உள்ள வரலாற்று நிகழ்ச்சிகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இலங்கை எப்படி இருந்தது? விடுதலை பெற்ற பிறகு - ஏன் 1958ல் ஒரு பயங்கரமான இனக்கலவரமும், பிறகு 1977 ஆகஸ்டில் ஓர் இனக்கலவரமும் அங்கே ஏற்பட்டன. கலவரங்களின் விளைவுகளை மறந்து, தமிழர்களும், சிங்களவர்களும் இனி எதிர்காலத்தில் அங்கு இணைந்து வாழ முடியுமா? இவை போன்ற பல அடிப்படைப் பிரச்சனைகள் இந்த நாவலில் அலசி ஆராயப்படுகின்றன.

இந்த நூலின் ஆசிரியர் அருளர், வெறும் உணர்ச்சித் துடிப்புமிக்க இளைஞராகத் தோன்றவில்லை. காரிய காரணங்களை மிகவும் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார். நாட்டு நடப்பைக் கூர்ந்து நோக்கியிருக்கிறார். வகுப்புக் கலவரங்களுக்குள்ள அடிப்படைக் காரணம், இந்த அரசியல் அமைப்பு - இதன் அரசியல் கட்சிகள் - தேர்தலில் இனவெறியைத் தூண்டிவிட்டு, மறு இனத்தைப் பகைக்கச் செய்து ஓட்டு வாங்கும் முறை என அவர் சான்றுகளுடன் கூறும் போது, நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

சரவணன், குமார், தவன் மூவரும் கொழும்பு இந்துக் கல்லூரி அகதிகள் முகாமில் தொண்டர்களாகப் பணியாற்றிய இளைஞர்கள். அவர்களுடன் கப்பலில் ஒரு வெள்ளை வேட்டி இளைஞனும் சேர்ந்து கொள்ளுகிறான். இவர்களோடு பலதரப்பட்ட வாழ்க்கை நிலையில் உள்ள தமிழ் அகதிகளும் கப்பலில் வருகிறார்கள். கலவரங்கள் எங்கெங்கே எவ்வளவு கொடூரமாக நடைபெற்றன எனும் சோகக் காட்சிகள் கண்முன்னே நடைபெறுபவைபோல் வருணிக்கப்படுகின்றன.

இளைஞர்களின் உரையாடல்களின் வாயிலாகவே காரிய காரணங்கள் நமக்கு விளக்கப்படுகின்றன.

1958-ல் நடந்த முதல் கலவரத்தை அடுத்து 1961-ல் நான் இலங்கைக்குச் சென்றிருந்தேன். அதற்கு முன்பாக யாழ்ப்பாணத்துத் தமிழர்கள், தோட்டங்களிலே வேலை செய்த இந்தியத் தமிழர்களிடமிருந்து பிரிந்து, உயர்ந்தும் ஒதுங்கியும் வாழத் தலைப்பட்டது மல்லாமல் தொழிலாளர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பவும் காரணமாக இருந்தார்கள் எனக் கேள்வியுற்றேன்.

இந்தப் போக்கு அவர்களையே மிகச் சிறுபான்மையோராக மாற்றி விட்டது. இப்போது தமிழர்களுக்கிடையே வேற்றுமை குறைந்து வருவ்தா்கத் தெரிகிறது. இலட்சிய ஆவேசங் கொண்ட புதிய தலைமுறை இளைஞர்கள் அங்கே தோன்றியிருக்கிறார்கள்.

அண்மைய வரலாற்று நிகழ்ச்சிகள் நிறைந்த ஓர் அற்புதப் படைப்பு இது. ஈழத்து விடுதலைப் புரட்சியாளர்களின்' சிந்தனையும் செயலும் சரியானவைதாமா? என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் அவர்களை அப்படி உருவாக்கி விட்ட பின்னணி நிகழ்ச்சிகளை நம்மால் மறந்துவிட முடியாது.

படித்து முடித்தபின் நம்மை உணர்ச்சி வயப்படுத்தும் நாவல் இது, சிந்திக்கச் செய்யும் நாவல் இது செயல்படத் தூண்டி ஒரு நல்ல முடிவு காணும் உந்துதலை ஏற்படுத்தத் தூண்டும் நாவல் இது. (நன்றி கனக்ஸ் இன் தமிழ் வலையின் மினி நூலகம்.)

இதனைப் படித்து முடித்த பின்னர், "லங்கா ராணி" நாவலை மீண்டும் தேடி எடுத்துப் படிக்க வேண்டும் என வரும் மன உந்துதலைத் தவிர்க்க முடியாதது. அதுவே என்றும் அருளரையும், ஈழப்போராட்ட வரலாற்று ஆவணப் பதிவுள் ஒரு முக்கிய போராளியாகவும் அடையாளப் படத்துவதாகவும் அமைகிறது. அருளருக்கு எமது வீரவணக்கங்கள்.

# ஆரோக்கியமாக வாழுங்கள்..

வாழ்வில் நாம் ஆரோக்கியமாக இருக்க கடைபிடிக்க வேண்டியவை

- 4 மணி நேரத்திற்கு ஒருமுறை கட்டாயம் சிறுநீர் கழியுங்கள். கோடை காலத்திலும் கட்டாயம் நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை கழித்தாக வேண்டும்.
- காலையிலும், இரவு உணவுக்கு முன்பும் கட்டாயம். மலம் கழிக்க வேண்டும். கண்ட நேரத்தில் கழிப்பது மலச்சிக்கலுக்கு வழிவகுக்கும். காலை, மாலை இருவேளை குளிக்கவும். மழைக்காலங்களில் காலையில் குளித்தால் போதும்.
- உள்ளாடைகள் கிழியாவிட்டாலும் 6 மாதத்திற்கு ஒருமுறை மாற்றுங்கள். ஒருநாள் பயன்படுத்தியபிறகு கட்டாயம் துவைத்துக் காயப்போடுங்கள்.
- சிறுவர்கள் 1 ஸ்பூன், பெரியவர்கள் 2 ஸ்பூன் ஊறவைத்த வெந்தயத்தை, வெறும் வயிற்றில் மென்று விழுங்க வேண்டும்,சர்க்கரையும், இரத்தக் கொதிப்பு வராமல் தடுக்கப்படும். வந்தால் கட்டுக்குள் இருக்கும்.
- காலை உணவுக்கு அரை மணி நேரத்திற்கு முன் தோல் நீக்கிய இஞ்சித் துண்டைச் சாப்பிடுங்கள். கொழுப்பைக் குறைக்கும். தொப்பையைக் கரைக்கும்.
- உணவை நன்றாக மென்று, பொறுமையாக உண்ணுங்கள்.
- சுட்ட எண்ணெயை மீண்டும் பயன்படுத்திச் செய்யப்பட்ட பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. அதனால் கெட்ட கொழுப்பு அதிகரிக்கும் புற்று நோயை உருவாக்கும்.
- மைதா பரோட்டா வேண்டவே வேண்டாம், வாழ் நாளைக் குறைக்கும்.
குளிர்பானம், பாக்கெட் தீனிகள் வேண்டாம்.
- பிராய்லர் கோழிக்கறி வேண்டாம். மீன் அல்லது ஆட்டுக்கறி, நாட்டுக் கோழி மட்டும் சாப்பிடுங்கள். மது, புகை கூடவே கூடாது.
- மதியம் சாப்பாட்டுக்கு ஒரு மணி நேரம் முன்பு சுக்குக் காபி சாப்பிடுவது மிகவும் நல்லது.
உண்ட உணவு முழுமையாகச் செரிக்கும் முன்பு அடுத்த திட உணவு கூடாது.
- பாதாம், முந்திரி, உலர்பழம், பழங்கள், கீரைகள், டார்க் சாக்லட், கிரின் டீ, கடலை மிட்டாய், எள் உருண்டை, பனைவெல்லம், சோற்றுக்கற்றாழை (ஏழு முறை சுத்தம் செய்து தேன் கலந்து) நாள்தோறும் சாப்பிடவும்.
- பயோட்டின் (எச் வைட்டமின்) என்ற வைட்டமின் குறைவால், தலைமுடி உதிர்தல், நகங்கள் உடைதல், தோல் நோய், எடை குறைவு, தசைவலி, கொழுப்பு அடைப்பு, மன அழுத்தம் ஏற்படும். இவற்றைத் தவிர்க்க, வேர்க்கடலை, முந்திரி, மீன், முட்டை, வாழைப்பழம், பப்பாளி, தக்காளி, காலிபிளவர், காளான், மோர் சாப்பிடவேண்டும்.
- காலை அல்லது மாலை 1 மணி நேரம் உடற்பயிற்சி,

**உங்க குழந்தைகள் மீது உங்களுக்கு கொள்ளைப்பிரியமா?**

- தயவு செய்து வேர்க்கடலை, பேரீச்சம்பழம், தினமும் ஸ்நாக்சாக கொடுங்கள்! கீரை வாரம் 3 முறை பருப்புக்கூட்டாகவும், ராகியை சேமியாவாக, கொழுக்கட்டையாக,ரொட்டியாக வாரம் இருமுறை கொடுக்கவும்!
- ஆப்பிள், ஆரஞ்சை விட பப்பாளி, கொய்யாவில் சத்துக்கள் அதிகம்! இவற்றைத் தினமும் சாப்பிடக்கொடுங்கள்!

**உங்கள் மனைவியின் ஆரோக்கியத்தின் மீது அதிக அக்கறை கொண்டவரா நீங்கள்?**

- தயவு செய்து , மண் சட்டியும், இரும்புக் கடாயும், மரச்செக்கு எண்ணெய்யும் வாங்கிக்கொடுக்கவும்!
- தினமும் 5பேரிச்சம்பழம் குறைந்த பட்சம் சாப்பிடக்கட்டாயப் படுத்துங்கள்! கருப்பு அரிசி, கருப்பு எள், கருப்பட்டி, கருப்பு உளுந்து, மண் பானை தண்ணீர் சாப்பிட வலியுறுத்துங்கள்!

**உங்கள் கணவர் மீது அதிக அக்கறை கொண்ட மனைவியா நீங்கள்?**


- தயவு செய்து பிரிட்ஜில் வைத்த குழம்பு வகை,மாவு வகைகளை கொடுக்காதீர். சீரகத்தண்ணீர், சோம்புத் தண்ணீர் குடிக்கக் கொடுக்கவும்!

நம் முன்னோர்கள் பயன்படுத்திய உணவுப் பழக்கங் களை முடிந்த அளவிற்கு பயன்படுத்துவோம். இழந்த ஆரோக்கியத்தை முழுமையாக மீட்டெடுக்க முடியாது என்றாலும் 50% ஆரோக்கியத்தை மீட்டெடுக்க நாம் நம் முன்னோர்களின் பயன்பாட்டில் இருந்த உணவுப் பழக்கத்தை நாம் நம் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துவன் மூலம் சாத்தியமாகும்.

இன்றே! முயற்சிப்போம்! வாருங்கள்!

# “ஜீவநதி” தொடர்ந்து வெளியிடுவது ஜீவனோபாயத்திற்கல்ல.. “பரணீதரன்”



யாழ் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் நான்காவது ஆண்டைத் தொடங்கும் முகமாக முதலாவது கூட்டத்தொடர் “சிற்றிதழ்க ளின் சமகாலத் தேவையும் வாசிப்பின் நிலைமைகளும்” என்ற தலைப்பில் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை(24) முற்பகல் 10 மணி - 12 மணி வரை இடம்பெற்றது. யாழ் பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் கலாநிதி வே.யுகபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இதழ்கள் பற்றிய உரைகளை இதழ்களின் ஆசிரியர்களான சி.ரமேஸ் (மறுபாதி), க.தணிகாசலம் (தாயகம்), செல்மர் எமில் (கலைமுகம்), க.பரணீதரன் (ஜீவநதி), கிரிசாந் (புதிய சொல்) ஆகியோர் நிகழ்த்தினார்கள். குறித்த உரையாடல் தொடர்பில் ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன் கூறிய கருத்துக்கள் சிறு சஞ்சிகை வெளியீட்டாளர்களின் அவலநிலையினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

“இதழ்கள் காலத்தைப் பிரதிபலிக்கின்றன. அதாவது ஒரு அரசியல் மாற்றம் நிகழ்ந்தால் அது குறித்து அல்லது போராட்டத்தைப் பற்றி, சமகாலத்திற்கேற்ற வகையில் குறித்த காலம் பற்றி கவிதை, கட்டுரை எனப் பல்வேறு படைப்புக்களைப் பதிவு செய்ய முடியும். இவ்வாறான விடயங்களை ஒன்றிணைத்து களம் அமைத்து கொடுப்பது சிற்றிதழ்கள் தான். சிற்றிதழ்கள் மிகவும் குறைந்த பிரதிகள் தான் இலங்கையில் அச்சிடப்படுகின்றன. இந்தியாவில் 5000 பிரதிகள் அச்சிடப்படுகின்றன. இலங்கையில் 300 தொடக்கம் 500 பிரதிகளே அச்சடிக்கின்றோம்.

தெரிதல் இதழ் 2000 பிரதிகள் அடிக்கப்பட்டதாக யேசுராஜா குறிப்பிட்டு இருந்தார்: விதிவிலக்காக அதனைப் பார்க்க முடியும் எத்தனை பிரதிகள் விற்பனையாகின்றன? அவை வாசகர்களால் உள்வாங்கப் பட்டு விற்கப்படுகின்றதா? அல்லது சஞ்சிகை விற்பனை ஆகாவிட்டாலும் எழுத்தாளருடன் இருக்கும் உறவு நிலை சார்ந்து முகத்துக்காக காசை கொடுக்க வேண்டும் என்று கொடுக்கப்படுகின்றதா? இப்படி தான் நிலை உள்ளது. நாம் அப்படி முகத்துக்காக செய்துள்ளோம்.” “அடிக்கப்படும் பிரதி யாவும் விற்பனை ஆவது இல்லை. உதாரணம் ஜீவா ஐயாவின் நூல் விற்காமலே அவருக்கான காசைக் கொடுத்து வந்தோம். அத்துடன் வாசிப்பு நிலை மிக குறைந்துவிட்டது. இப் போது எழுத்தாளர்கள் தான் வாசிக்கின்றனர். புதியவர்கள் குறைவு. ஒரு நூல் வெளியீடு அல்லது இலக்கிய விழாவில் யார் வருகின்ற னர். என்று பார்த்தால் பழையவரை விட புதியவர்கள் வருவது மிக அரிது. வாசிப்புக் கள் எழுத்துக்கள் வித்தியாசமாக வரலாம். அது அவர்களின் ரசனை நோக்கம் கொண் டது. எல்லா இதழும் எல்லாராலும் ஏற்க வேண்டும் என்றும் இல்லை. அவரவர் தமக்கு விரும்பியதை வாசிக்கலாம். அது நோக்கம் கருதி வெளிவருகின்றன. ஆயினும் வாசகர்களின் வாசிப்புபழக்கம் குறைந்து கொண்டுதான் போகின் றது.”

“பல புதிய இதழ்கள் வருகின்ற வேகத்தில் நின்றும் விடுகின்றன. புதியவர்களை விட பழையவர்கள் அதிகம் எழுதுகின்றனர். பெரும்பாலும் புதியவர்கள் கவிதைகளை எழுதுகின்றனர். அவர்களின் எழுத்தை பொறுத்து தரம் காணப்படுகின்றது. ஆசிரியர் மாணவர்களிடமும் வாசிப்பு பழக்கம் குறைந்துவிட்டன. ஒரு அதிபர் என்னிடம் கேட்கின்றார், நூல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யும் படி கூறுகின்றீர்கள் இதனால் எனக்கு என்ன பயன் என்று. ஒரு தமிழ் ஆசிரியரின் கேள்வி அதுவாக உள்ளது. ஆனால் இலங்கையில் 100, 150 ரூபாய்க்கு தான் சிற்றிதழ்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் இந்தியாவில் இருந்து வரும் காலச்சுவடு நூல் கடைசி 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அந்த நூலுக்காக நாம் காத்திருக்கின்றோம். என்ற அவலமும் எம்மிடம் உள்ளது.

எமது ஈழத்துப் படைப்புகளை வாங்கி வாசிக்கப் பலர் தயாராகவில்லை. தமது வாசகர் யார் என்று இல்லாமல் பலரை திருப்திப்படுத்தும் நிலையில் எமது இதழ்கள் உள்ளதால் அதன் தனித்த தன்மை இழக்கப்படுகிறது. சிற்றிதழ்களின் சவால்கள் என்பது விற்பனை விலையை விடவும் உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது. தயாரிப்பு செலவு 95 ரூபா விற்பனை விலை 100 ரூபா அதனைவிட தபால் செலவு வேறு. இதில் எந்த இலாபமும் இல்லை.” நூல் அச்சிட அதை “பூபாலசிங்கம்” மற்றும் “புக்லாப்” புத்தக நிலையங்களுக்கு கொடுத்து ஓடி ஓடிச் சென்று பணம் வாங்கி, அச்சகத்துக்கு கொடுத்து வரும் நிலை உண்டு. இது எமது தொழில் அல்ல. நான் ஒரு சாதாரண தினக்கூலி. சஞ்சிகை வெளியிட்டு அதை வருமானம் பார்க்கும் நிலை எனக்கு இல்லை. தொழிலாகப் பார்க்கும் பெரும் முதலாளிகளும் உள்ளனர். ஆனால் அப்படி வரு மானம் இல்லை என்றால் ஏன் வெளியிடுகின்றீர்கள் என்று கேட்கலாம். கஷ்டப்பட்டு ஏன் வெளியிட வேணும் என்று கேட்கலாம், ஆனால் எமக்கு எமது சமூக கடமை இருக்கு, விருப்பம் இருக்கு. செய்ய வேண்டிய தேவை இருக்கு.” பலர் நீச்சல் தடாகத்தில் பாய்ந்து வேறு அலுவல்கள் செய்கின்றனர். வாசகர்கள் பலவிதமானவர்கள் . அதன் தரம் பார்த்து அவர்கள் தெரிவு செய்வார்கள். சஞ்சிகைக்கு விளம்பரங்கள் எடுப்பது கஷ்டம். தற்போது பார்க் ஓனர் தானாக வந்து இலக்கிய வளர்ச்சிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று வந்துள்ளார். அப்படி இருக்கும் போது பலர் விளம்பரம் பிரசுரமான பின்பும் “இந்தா தாறம்...” “அந்தா தாறோம்” என்று சொல்லி பணம் கொடுக்காமல் ஏமாற்றுபவர்களும் உள்ளனர். அவர்களையும் மீறி சில நல்ல உள்ளங்கள் உள்ளமையால் தான் இப்போதும் எமது சஞ்சிகைகள் வெளிவருகின்றன்.

படைப்பாளிகள் தாம் எழுதிய படைப்பை உடன் பார்க்க ஆவலாக உள்ளனர், காலம் தாமதமாக பதிவாக்குவதை அவர்கள் விரும்புவதில்லை. மாற்றங்களை விரும்புவதில்லை. இதனால் தனிப்படட முரண் நிலை உருவாகிறது. முன்பு நல்ல படைப்பாக வெளிவரவேண்டும் என்பதால் இன்னொருவரிடம் கொடுத்து சீர் செய்து அவை பிரசுரத்திற்கு அனுப்பப்படும். சீர் செய்தால் நல்லதுக்கு தான் என்ற நிலையை இப்போ எவரும் ஏற்பதில்லை. ஆரோக்கிய நிலையை விரும்பியதில்லை. நான் எழுதுவதெல்லாம் சரி. விரும்பினால் வாசி என்ற மனநிலை. புனை பெயர்களில் ஒழித்துக் கொண்டு படைப்பாளிகளை சீண்டும் நிலை என்பன தான் காணப்படுகிறது. இலக்கிய திருட்டு மிக இலாவகமாக நிகழ்கிறது பிரதி செய்து வெட்டி ஒட்டும் நிலை வந்துள்ளது. சிறுகதை போட்டிகளில் மூத்த எழுத்தாளர்களின் கதைகளை எடுத்து தலைப்பை மாற்றி வெட்டி ஓட்டும் நிலை மிக மோசமானது. இலக்கியத் திருட்டு வாசிப்பின்மையினையை அடையாளப்படுத்துகின்றது.

விற்பனைக்காக கடைகளில் புத்தகம் கொடுத்து விட்டு 10 பிரதி என்றால் 4 விற்பனை செய்யப்பட்டால் மீதி 6 பிரதிக்கும் கடை வாசலில் கையையும் கட்டிக் கொண்டு நின்று தூங்க வேணும். தூர இருந்து வாறம் எண்டு தெரிஞ்சும் அங்க இங்க என்று தேடித் போட்டு கொண்டு வருவார். தண்ணியில போட்டு பிழிஞ்சு எடுத்த மாதிரி தான் மீதி பிரதிகள் தருவார். அதை நாங்கள் திரும்ப எடுப்பதை விட எடுக்காமலே விடலாம். நாங்கள் முதலாளிக்கு முன்னுக்கு நிக்க வேணும். அவர் கண்டும் காணாதவர் போல.. “ஆ என்ன? பிள்ளை பார்த்திட்டியே எண்டுவார், “தங்கச்சி அங்கினை இங்கினை ஒளிஞ்சு இருக்கும் பார்” எண்டு சொல்லுவார். இந்த நிலையில் ரூ300 காசை தருவார். இந்த 300ரூபாய்க்காக கடை வாசலில் மட்டும் ஒரு மணி நேரம் செலவு- செய்ய வேணும். இப்பிடி நாய்படாப் பாடுபட்டு ஏன் சஞ்சிகை வெளியிட வேண்டும் என்றும் கேட்கலாம். பெயர் வேணுமா? புகழ் வேணுமா? அப்படி இல்லை. எங்கட நோக்கம் ஏதாவது செய்ய வேணும் என்ற நிலையில் தான் செய்கின்றோம்.”

யாழ். தர்மினி பத்மநாதன்

“இதில் நான் எனக்கு மிகைப்படுத்தலோ பரிதாபமோ தேடவில்லை. 2012 இல் எனக்கு திரும ணம் நடந்தது. 2013 இல் திருமண மோதிரம் அடைவு வைத்தேன் இன்றும் அடைவில் தான் உள்ளது. முக்கிய காரணம் ஒருவரை நம்பி புத்தகம் அடித்தது. அவர் ஏமாற்றினார். இன்னும் 850 ரூபா மாதாந்தம் மோதிர த்துக்கு வட்டி கட்டிக் கொண்டு இருக்கிறன். 6மோத காலமாக ஜீவநதியின் காசை சேர்த்து ஒரு ஒண்டரை இலட்சம் ரூபாய் வந்தது. அதைக் கொண்டு போனால் அச்சகக்காரன் சொன்னார் அரை வாசிக்கு காசைக் கட்டி முழுப்புத்தகம் கொண்டு போக ஏலாது எண்டு. அதுக்கு பிறகு பிள்ளையின் அரை நாண் கொடியை அடைவு வைச்சு மீதியை கட்டினது. இப்ப இரண்டு நகைக்கும் சேர்த்து மாதம் வட்டி கட்டுறேன். இந்த நிலையில் தான் ஜீவநதி உள்ளது.”

“பண நெருக்கடியுடன் ஜீவநதி வெளிவந்து கொண்டு இருந்தாலும் வாசக நிலையில் போய்ச் சேரவில்லை. ஒவ்வொரு இடங்களிலும் சென்று கருத்துக் கணிப்பு எடுத்து வெளியிடும் அவகாச நிலை எமக்கு இல்லை. அவசர யுகத்தில் வாழ்கின்றோம். சமகால நிகழ்வுகளை பதிவு செய்யும் வகை மிக குறைவு. இதழ்கள் மற்றும் எழுத்தாளர்கள் அரச மானியம் பெற வாய்ப்பு செய்ய வேண்டும். கலை இலக்கிய செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயற்திட்டங்கள் வர வேண்டும். தேசம் தோறும் வாசகர் வட்டம் உருவாக்க வேண்டும். பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட வேண்டும். ஆனால் பிரதேச செயலகம் காசைக் கண்டால் வற்புறுத்தலுக்கு சிலரை அழைத்து பட்டறை செய்யும். அதில் ஒழுங்குநிலை இல்லை. பாடசாலைகள் சஞ்சிகைகளை வாங்கி ஊக்குவிப்பதுடன் மாணவர்களுக்கு வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும்.
எமது நாட்டில் 100 ரூபாவுக்கு 45 ரூபா அஞ்சல் செலவு. இதில் சந்தாவில் மீதிக்கு காசு எங்க என்றால் தபால் செலவை யார் கொடுப்பது. வாசிப்பை ஊக்கப்படுத்த வாங்கி அன்பளிப்பு செய்ய எத்தனை பேர் உள்ளனர். தரமிக்க படைப்புகள் வெளிவர வேண்டும். வெளியிடுவதில் சரி வாசிப்பை ஊக்குவிப்பதில் சரி இன்றைய காலம் சவால் நிறைந்தே உள்ளது என்றார். இவ் நிகழ்வில் எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள், ஆர்வ ஶ்ரீலர்கள், எனப் பலரும் கலந்து கொண்ட மையே பெரிய விடயமாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.”

# கிரக நிலையும் இராசி பலனும் இந்த வாரம்

## டிசம்பர் 08 முதல் 14 வரை (கார்த்திகை 22 முதல் 28 வரை)



கணித்தவர்
ஜோதிட மாமணி,
முனைவர் முருகு பாலமுருகன்
Dip in astro, B.L, M.A.astro. PhD in Astrology.
No: 19/33 வடபழனி ஆண்டவர் கோயில் தெரு,
தபால் பெட்டி எண் - 2255. வடபழனி,
சென்னை - 600 026 தமிழ்நாடு. இந்தியா.
cell: 0091 7200163001. 9383763001.

**இவ்வார கிரக மாற்றம் இல்லை**

**இவ்வார சந்திரன் சஞ்சரிக்கும் ராசிகள்**

- **மேஷம்** 08-12-2019 அதிகாலை 01.30 மணி முதல் 10-12-2019 பகல் 11.20 மணி வரை.
- **ரிஷபம்** 10-12-2019 பகல் 11.20 மணி முதல் 12-12-2019 மாலை 06.25 மணி வரை.
- **மிதுனம்** 12-12-2019 மாலை 06.25 மணி முதல் 14-12-2019 இரவு 11.15 மணி வரை.

**இவ்வார சுப முகூர்த்த நாட்கள்**

**08.12.2019 கார்த்திகை 22 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை துவாதசி திதி அசுவினி நட்சத்திரம் சித்தயோகம் காலை 09.00 மணி முதல் 10.30 மணிக்குள் மகர இலக்கினம். வளர்பிறை**

**11.12.2019 கார்த்திகை 25 ஆம் தேதி புதன்கிழமை சதுர்தசி திதி ரோகிணி நட்சத்திரம் சித்தயோகம் காலை 09.00 மணி முதல் 10.30 மணிக்குள் மகர இலக்கினம். வளர்பிறை**

| | | | |
|---|---|---|---|
| | சந்திரன் | | ராகு |
| | திருக்கணித கிரக நிலை | | |
| | | | |
| சனி கேது குரு சுக்கி | சூரியன் புதன் | செவ்வாய் | |



**மேஷம்**

**மேஷம், அசுவனி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம்.**

தன்னுடைய வாக்கு வன்மையை பயன்படுத்தித் தான் சொல்லும் சொல்லே சரி என வாதிடும் குணம் கொண்ட மேஷ ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு குரு, சுக்கிரன் பாக்கிய ஸ்தானமான 9ல் சஞ்சரிப்பதால் பண வரவுகள் சிறப்பாக இருந்து உங்களது அனைத்து தேவைகளும் பூர்த்தியாகும். 3ல் ராகு சஞ்சரிப்பதால் உங்களுடைய செயல்களுக்கு பரிபூரண வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றும் என்றாலும் பெரிய கெடுதி இருக்காது. சிலருக்கு வண்டி வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். தடைபட்ட வாய்ப்புகளும் கிடைக்கப் பெற்று லாபம் பெருகும். உத்தியோகஸ்தர்களுக்கு பணியில் நிம்மதியான நிலையிருக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் -8, 9, 13, 14.**



**கடகம்**

**கடகம் புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.**

எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்களாக இருந்தாலும் எதையும் முன்கூட்டியே அறிந்து செயல்படும் ஆற்றல் கொண்ட கடக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5ல் புதன், 6ல் சனி, கேது சஞ்சரிப்பதால் சகல விதத்திலும் ஏற்றமிகுந்த பலன்களை அடைவீர்கள். எடுக்கும் முயற்சியில் வெற்றி, தொழில் ரீதியாக மேன்மை ஏற்படும். நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் திறமைகளால் முன்னேற்றம் அடைவார்கள். சிலருக்கு எதிர்பார்க்கும் உயர்வுகளும், இடமாற்றங்களும் தடையின்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி, தாராள தனவரவுகள் உண்டாகும். உற்றார் உறவினர்கள் ஆதரவாக செயல்படுவார்கள். கார்த்திகை தீபத்தன்று முருக பெருமான் வழிபாட்டை மேற்கொண்டால் வாழ்வில் மேன்மைகள் உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் - 8, 9, 10, 11, 12.**



**துலாம்**

**துலாம் சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதங்கள்.**

தராசு சிறியதாக இருந்தாலும் எவ்வாறு துல்லியமாக எடைபோட உதவுகிறதோ அதை போல மற்றவர்களின் குணங்களை எடைபோட்டு பழகும் ஆற்றல் கொண்ட துலாராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2ல் புதன், 3ல் சனி, கேது சஞ்சரிப்பதால் அனுகூலமான பலன்களை அடைவீர்கள். எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் உண்டாகும். ஜென்ம ராசியில் செவ்வாய், 2ல் சூரியன் சஞ்சரிப்பதால் நெருங்கியவர்களையும், உற்றார் உறவினர்களையும் அனுசரித்து செல்வது நல்லது. பண வரவுகள் சற்று ஏற்ற இறக்கமாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். உயர் அதிகாரிகளிடம் பேசும் போது பேச்சில் சற்று நிதானத்தை கடைபிடித்தால் வீண் பிரச்சினைகளை தவிர்க்கலாம். மாணவர்கள் கல்வியில் சற்று கவனம் செலுத்துவது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் - 8, 9.**



**ரிஷபம்**

**ரிஷபம், கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ஆம் பாதங்கள்.**

பிறருக்கு உதவி செய்வதில் தன்னலம் கருதாது செயலாற்றும் ரிஷப ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6-ல் செவ்வாய், 7-ல் புதன் சஞ்சரிப்பதால் எதிர்பாராத உதவிகள் கிடைத்து உங்களுக்குள்ள நெருக்கடிகளை சமாளிக்க முடியும். தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். பணவரவுகள் தேவைகேற்ப இருக்கும் என்றாலும் குரு, சுக்கிரன் 8-ல் சஞ்சரிப்பதால் பணவிஷயத்தில் சிக்கனமாக இருப்பது, ஆடம்பர செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் தோன்றினாலும் விட்டு கொடுத்து நடந்து கொண்டால் ஒற்றுமை குறையாது. வீடு வாகனம் வாங்கும் விஷயங்களில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் செய்பவர்கள் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் எதிர்பார்த்த லாபத்தை அடையலாம்.

**வெற்றி தரும் நாட்கள் - 10, 11, 12.**



**சிம்மம்**

**சிம்மம் மகம், பூரம். உத்திரம் 1 ஆம் பாதம்.**

பிறர் பழிச் சொற்களுக்கு செவி சாய்க்காமல் தனது விடாமுயற்சியால் பல சாதனைகளைச் செய்யும் ஆற்றல் கொண்ட சிம்ம ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 3-ல் செவ்வாய், 5-ல் குரு, சுக்கிரன் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் சுபிட்சமும், மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். தேவைகள் அனைத்தும் பூர்த்தியாவதுடன் கடன்களும் நிவர்த்தி ஆகும். கணவன்-- மனைவியிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை நிலவும். உற்றார் உறவினர்களை அனுசரித்து செல்வதன் மூலம் ஒரு சில ஆதாயங்களை அடையலாம். தொழில் வியாபாரம் நல்ல முறையில் நடைபெற்று லாபத்தை அள்ளி தரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் எதிர்பார்க்கும் உயர்வுகளை அடைவார்கள். புதிய வேலை தேடுபவர்கள் தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பினைப் பெறுவார்கள். பௌர்ணமி நாளில் கிரிவலம் வருவது மிகவும் நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் - 11, 12, 13, 14.**



**விருச்சிகம்**

**விருச்சிகம் விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.**

என்னதான் தோல்வியை சந்தித்தாலும் தன்னுடைய முயற்சியில் மனம் தளராமல் பாடுபட்டு வெற்றி பெறும் விருச்சிகராசி நேயர்களே, ஜென்ம ராசியில் சூரியன் சஞ்சரிப்பது உங்களுக்கு தேவையற்ற நெருக்கடிகளை ஏற்படுத்தும் அமைப்பு என்றாலும் குரு 2ல் சஞ்சரிப்பதால் தாராள தனவரவுகள் ஏற்படும். உடனிருப்பவர்களின் ஆதரவு சிறப்பாக இருக்கும். உடல் ஆரோக்கியத்திலும், உணவு விஷயத்திலும் கவனம் செலுத்துவது நல்லது. பண வரவுகள் சிறப்பாக இருப்பதால் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். அசையும் அசையா சொத்துகளால் சிறுசிறு அலைச்சல்கள் இருந்தாலும் அனுகூலப்பலன் உண்டாகும். கூட்டாளிகளின் ஆதரவு மகிழ்ச்சியளிக்கும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் திறமையுடன் செயல்பட்டு பரிசுகளையும் பாராட்டுதல்களையும் பெறுவார்கள். மாணவர்கள் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும்.

**வெற்றி தரும் நாட்கள் - 8, 9, 10, 11, 12.**



**மிதுனம்**

**மிதுனம் மிருகசீரிஷம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்.**

சற்று குழப்பவாதியாக இருந்தாலும் எந்தவித கடினமான வேலைகளையும் பொறுப்புடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட மிதுன ராசி நேயர்களே, உங்களுக்கு குரு பார்வை ஜென்ம ராசிக்கு இருப்பதாலும் 6-ல் சூரியன், 7-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதாலும் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்ககூடிய இனிய வாரமாக இவ்வாரம் இருக்கும். சுபகாரியங்கள் எளிதில் கைகூடும். கணவன்- மனைவி பேச்சில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. புத்திர வழியில் மன மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள் நடைபெறும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் எடுத்துக் கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் அனுகூலமானப் பலனைப் பெற முடியும். வெளியூர் வெளிநாட்டு தொடர்புடைய வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களும் கல்வியில் உயர்வடைவார்கள்.

**வெற்றி தரும் நாட்கள் - 8, 9, 13, 14.**



**கன்னி**

**கன்னி உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்.**

அன்புள்ள கன்னி ராசி நேயர்களே, எவ்வளவு அவசரமான காரியமாக இருந்தாலும் மற்றவர்களின் சௌகர்யங்களை ஆராய்ந்து செயல்படும் கன்னி ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 3ல் சூரியன், 4ல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் எடுக்கும் முயற்சியில் அனுகூலமான பலன்களை அடைவீர்கள். செவ்வாய் 2-ல் சஞ்சரிப்பதால் பேச்சில் பொறுமையுடன் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் சோர்வு மந்தநிலை போன்றவை உண்டாகும். திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளை தற்போது மேற்கொண்டால் அனுகூலப் பலனை அடைவீர்கள். கொடுத்த கடன்களை பெறுவதில் சற்று சிந்தித்து செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் திறம்பட செயல்பட்டு பள்ளி கல்லூரிக்கு பெருமை சேர்ப்பார்கள்.

**வெற்றி தரும் நாட்கள் -13, 14**



**தனுசு**

தனுசு மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்.

அன்புள்ள தனுசு ராசி நேயர்களே எப்பொழுதும் நல்ல சுறுசுறுப்புடன் செயல்பட்டு எடுக்கும் காரியங்களை சிறப்புடன் செய்து முடிக்கும் ஆற்றலும், எல்லோருக்கும் மரியாதை கொடுக்கும் பண்பும் கொண்ட தனுசு ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் சனி, கேது, குரு சஞ்சரிப்பதால் நீங்கள் எதிலும் நிதானமாக செயல்படுவது நல்லது. செவ்வாய் 11-ல் சஞ்சரிப்பதால் உறவினர்களின் ஆதரவால் உங்களுக்குள்ள நெருக்கடிகள் சற்று விலகும். எடுக்கும் முயற்சியில் சாதகமான பலன்கள் உண்டாகும். பணவரவுகள் தேவைக்கு ஏற்றபடி இருப்பதால் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். தேவையற்ற பயணங்களால் சிறுசிறு அலைச்சல் டென்ஷன்களை சந்திக்க நேடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கும். பணம் கொடுக்கல்- வாங்கலில் பெரிய தொகைகளை ஈடுபடுத்துவதை தவிர்ப்பது நல்லது.

**வெற்றி தரும் நாட்கள் - 11, 12, 13, 14.**



மகரம்

**மகரம் உத்திராடம் 2,3,4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்.**

மற்றவர்களின் தேவையற்ற பேச்சுக்களால் மனம் புண்பட்டாலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அனைவரிடமும் அன்பாக பழகும் மகர ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6ல் ராகு, 10ல் செவ்வாய், 11ல் சூரியன், புதன் சஞ்சரிப்பதால் நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வரும். தொழில் பொருளாதார நிலை நன்றாக இருக்கும். திருமண சுப காரியங்களுக்கான முயற்சிகளில் சிறு தடை தாமதத்திற்கு பின் அனுகூலப்பலன் உண்டாகும். கணவன்- மனைவியிடையே சிறு சிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும் ஒற்றுமை குறையாது. கொடுத்த கடன்களும் வீடு தேடி வரும். மாணவர்கள் எதிர்பார்த்த உயர்வை அடைவார்கள். சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபட்டால் நன்மைகள் உண்டாகும்.

**வெற்றி தரும் நாட்கள் - 13, 14.**



கும்பம்

**கும்பம் அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்.**

தவறு செய்பவர்களை தயவு தாட்சண்யம் பாராமல் கண்டிக்கும் குணமும், தன்னிடம் பழகுபவர்களை துல்லியமாக எடை போடும் ஆற்றலும் கொண்ட கும்ப ராசி நேயர்களே, உங்கள் ராசியதிபதி சனி, குரு, கேது, சுக்கிரன் சேர்க்கைப் பெற்று லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வலமான பலன்களை அடையும் யோகம் உண்டு. பணவரவுகள் சிறப்பாக இருப்பதால் பொருளாதாரம் மேன்மையடையும். கடன்களும் படிப்படியாக குறையும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் எடுத்துக் கொண்டால் அன்றாட பணிகளில் திறம்பட செயல்பட முடியும். உற்றார் உறவினர்களை அனுசரித்து நடந்து கொண்டால் மகிழ்ச்சி நிலவும். கணவன்- மனைவியிடையே ஒற்றுமை மிகச் சிறப்பாக இருக்கும். பெரிய முதலீடுகளை ஈடுபடுத்தி செய்ய நினைக்கும் காரியங்களில் சாதகமான பலன் உண்டாகும். பயணங்களால் அனுகூலப் பலனை அடைவீர்கள்.

**வெற்றி தரும் நாட்கள் - 8, 9.**



மீனம்

**மீனம் பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி .**

சமயத்திற்கு ஏற்றார்போல மாறிவிடும் சுபாவம் இருக்கும் என்றாலும் துர்போதனைகளுக்கும், கெட்ட சகவாசங்களுக்கும் எளிதில் அடிமையாகாத மீன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 8ல் செவ்வாய், 10ல் சனி, குரு சஞ்சரிப்பதால் தேவையற்ற நெருக்கடிகள் பொருளாதார ரீதியாக தேக்க நிலை நிலவும் காலம் என்பதால் எதிலும் பொறுமையுடன் செயல்பட வேண்டிய வாரமாகும். குடும்பத்தில் ஒற்றுமை ஓரளவு சிறப்பாக இருக்கும். அசையும் அசையா சொத்துக்கள் மூலமும் வீண் செலவுகளை எதிர்கொள்ள நேரிடும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு சற்று மந்த நிலை நிலவினாலும் பொருட் தேக்கம் ஏற்படாது. கூட்டாளிகளால் வீண் பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும். உத்தியோகஸ்தர்கள் பணியில் கவனமுடன் செயல்பட்டால் மட்டுமே உயரதிகாரிகளின் ஆதரவினைப் பெற முடியும்.

**வெற்றி தரும் நாட்கள் -10, 11, 12.**



# அரசியலில் இதெல்லாம் சகஜமுங்க..!



துருவன்




"இப் நம்ம தலைவரை யாரும் தொலைக் காட்சியில் நேர்காணல் செய்வதில்லையே ஏன்?"

"நேர்காணல் நேரலையின் போது கோபப்பட்டு அவரது இயல்பான கெட்ட வார்த்தைகளை பேசி விடுகிறாராம்"




"முன்னர் வகுப்பில் எல்லா பாடங்களிலும் முட்டை வாங்குவானே முகுந்தன் இப்ப என்ன செய்கிறான்?"

"முட்டை மொத்த வியாபாரம் செய்கிறான்"



கோயில் தர்மகர்த்தா சபை கூட்டத்தில் கடும் மோதலாமே..!

யாருக்கு முதலில் சுண்டல் வழங்குவது என்பதில் பிரச்சனையாம்.



தலைவர் தனது பேருரையை சுருக்கமாக முடித்துவிட்டாராம்?

ஆமாம் யாரோ அவரது உரை மக்கள் மனதில் சுருக்கென்று தைக்குமாப் போல் இருக்க வேண்டும் என்கிறார்களாம்.



எம்.பி ஐயா ஏன் இவ்வளவு கடுப்பாக இருக்கிறார்?

பத்திரிகையில் அவரை அரசியல் மேதை என்று எழுதுவதற்கு பதிலாக அரசியல் பேதை என்று எழுதி விட்டீர்கள்.



"நீங்க தானே சொந்தத்தில் தொழில் ஆரம்பிச்சீங்க, ஆனால் உங்கள் நண்பர் நட்டம் என்று அலறுகிறாரே?"

"அவருடைய பணத்தில் தானே நான் சொந்தத் தொழிலை தொடங்கினேன்"



# அங்கதன் பதில்கள்

நீதி, நியாயம், நேர்மை இல்லாத அரசியல் வாதி பற்றி உங்கள் கருத்து என்ன?

பொ.அரசன், தருமபுரம்

இன்றைய ஜனநாயக உல்கம் இம் மூன்று தகமைகளும் உள்ள ஒருவருக்கு அரசியல்வாதியாக வலம் வர அனுமதிக்காது என்றே நினைக்கி றேன்.

கள்வனைக் காட்டிலும் மோசமானவன் என்று களவு செய்யும் அதிகாரியைக் குறிப்பிடுகிறேன். உங்கள் அபிப்பிராயம்...?

அ.சீலன், நயினாதீவு

உண்மையான கள்வன் அதிகாரத்திற்கு ஓரளவு கட்டுப்பட்டவனாக இருக்கக்கூடும். ஆனால் அதிகாரியோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதன் பாதுகாப்புடன் களவு செய்வான்.

நாகரீகம் என்ற போர்வையில் சமூகத் தை அநாகரீகப்படுத்துபவர் எப்படிப்பட்டவராக இருப்பார்?

ஏ.கோமளன், புன்னாலைக்கட்டுவன்

நாகரிக நாக்மாக இருப்பர்

சரித்திரமும், வரலாறும் தெரியாது ஒரு இனத்தைப் பற்றிப் பேசுபவனுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

ம.அறிவழகன்,பருத்தித்துறை

வரலாற்றை மதி.. இல்லையேல் வரலாறு உன்னை மிதித்துக் கொண்டு கடந்துவிடும்.

தமிழ் தேசியக் கூட்டடைப்பினருக்குச் சுடலை ஞானம் வந்துள்ளதாகச் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்களே?

வ.பால்ராஜ், பரந்தன்

சுடலைஞானம் கூட ஒரளவுக்கேனும் உண்மையான மனிதனுக்குத் தான் வரும். கூட்டமைப்பினருக்கு அது ஏற்படும் சாத்தியமே இல்லை.

சமூக வலைத்தளத்தில் வைத்திய ஆலோசனை சொல்லும் வைத்தியர் அல்லாதவர்களை என்ன செய்யலாம்?

து.அகல்யா, முல்லைத்தீவு

அவர்களை எதுவும் செய்ய முடியாது. ஆனால் அத்தகைய வலைத்தளங்களுள் சிக்கிச் சீரழியும் பைத்தியங்களுக்குத் தான் புத்தி சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அனுமதியில்லாது குழாய் கிணறுகள் அதிகம் தோண்டப்படுகின்றன. அதனை நிறுத்தாத அதிகாரிகள், திணைக் களங்கள் எப்பேர்ப்பட்டவர்களாக இருப்பர்?

க.மயூரநாதன்,வட்டுக்கோட்டை

லஞ்சமும் ஊழலும் எல்லா அனுமதிகளையும் பெற்றுக் கொடுத்து விடும் தம்பி.! பஞ்சத்தில் அடிபட்ட மக்களிடமும் லஞ்சம் கேட்கும் அதிகாரிகள் லஞ்சமா பிரபுக்கள்.

சமூக வலைத்தளங்களில் தற்போது அதிகம் சுமந்திரனைப் பற்றிய விமர்சனங்கள் வருவது பற்றித் தங்கள் கருத்து?

சு.இளங்கீரன், மீசாலை

மக்கள் மத்தியில் சர்ச்சைக்குரிய ஒருவராக பிரபலம் பெற்றுக் கொள்ளும் பிரச்சார உத்தியில் சுமந்திரன் மகா தந்திரன் என்கிறார் ஒரு மூத்த எழுத்தாளர்.

புதிய ஜனாதிபதியின் அதிரடி அறிவிப்புகள் என்னத்தைச் சொல்லுகின்றன?

ந.விசாகன், சண்டிலிப்பாய்

வரப்போகின்ற நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கான தந்திரோபாய வியூகங்கள் ஆரம்பமாகி விட்டதைச் சொல்லுகின்றன.

"இரக்கப்போனாலும் சிறக்கப்போ" என்றது எதனால்?

வ.தைரியநாதன், சாவகச்சேரி

பிச்சை எடுக்க நேரிடினும் நீ மனிதன் என்ற அடையாளத்தை விட்டுக் கொடுக்காதே என்பதனால்..! இரத்தலின் போது உனக்கு ஈதல் செய்பவனுக்குள் இரக்கம் ஏற்பட வேண்டும்..!

கடந்த மாவீரர் நிகழ்ச்சியின் மூலம் தமிழ் அரசியல் கட்சிகள்பெற்ற செய்தி என்ன?

ப.ஆனந்தன், காரைநகர்

தமிழின உணர்வெழுச்சி என்பது அரசியல் கட்சிகளால் உருவாக்கப்பட்டதல்ல. மாவீரர் தியாகத்தால் உருவாக்கப்பட்டது என்ற செய்தியை..!

தற்போதைய கல்வி முறையில் மாற்றம் வேண்டும் என்கிறேன்?

தெ.ஈஸ்வரன், இடைக்காடு

கண்டிப்பாக...! ஆனால் அந்த மாற்றம் தொலைநோக்குச் சிந்தனை கொண்டதாக, ஏற்றம் தருவதாக அமைய வேண்டும். ஏமாற்றம் தருவதாக இருக்கக் கூடாது.

போற போக்கில் தமிழ் வாக்காளர் தொகையிலும் விட தமிழ் கட்சிகளின் தொகை அதிகமாகும்போல் தெரிகி றதே..?

பொ.வீரவாகு, துன்னாலை

இதேபோன்றதொரு கேள்வியைச் சுமார் நாற்பது வருடங்களின் முன்னர் சிரித்திரன் சுந்தரரிடம் (மகுடி கேள்வி பதில் பகுதியில்) ஒருவர் கேட்டதிற்கு அவர் அந்தக் காலத்திலேயே அளித்த பதிலை இங்கு பொருத்தம் கருதித் தருகிறேன்.

(கே)- புயலில் சிக்கிய படகொன்றில் பயணித்த மூன்று தமிழர்கள் ஆளரவம் எதுவுமற்ற தீவு ஒன்றில் கரை ஒதுங்குகிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? என்று ஒருவர் கேட்டிருந்தார்.

அதற்கு அவர் - மூவரும் சேர்ந்து ஒரு சங்கம் அமைப்பார்கள். பிறகு சண்டை பிடிப்பார்கள். அதன் பிறகு மூன்று சங்கம் அமைப்பார்கள். எனப் பதிலளித்திருந்தார்... இது எப்படி இருக்கு?

ஸ்ரீகாந்தாவின் புது முயற்சி ப்ற்றி என்ன சொல்லுகிறீர்கள்? ஆரோக்கியம் நிறைந்த முயற்சியா?

கு.கணேஸ், வவுனியா

என்ன செய்வது தமிழ் மக்களின் தலைவிதியை யார்? யார்? எப்படி எப்படியெல்லாம் எழுதப் போகிறார்களோ?

கிழக்கு மாகாண அரசியலில் முஸ்லிம் அரசியல்வாதிகள் நிலைமை இனி மேல் என்னவாகலாம்?

ம.தாஸ், மட்டக்களப்பு

மேலாதிக்க - பொரும்பான்மை இனவாதிகளின் பிரித்தாளும் தந்திரோபாய வலைக்குள் சிக்கிக் கொண்ட எந்தச் சிறுபான்மை இனத்தவரின் எதிர்காலமும் கேள்விக்குறியாகத் தான் இருக்கும்.



அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கு அல்லது இல.151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப்பரிசில் வழங்கப்படும்.

பெயர் : ..................................

..................................

முகவரி : ..................................

..................................

தொ.இல : ..................................

---



# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

அடுத்த தேர்தல் திருவிழா ஏப்ரல் இறுதியில் நிகழக் கூடும் எனச் செய்திகள் கசியத் தொடங்கியுள்ள நிலையில் தயாரிப்பு வேலைகளில் களமிறங்கக் காத்திருக்கும் கட்சிகள் தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளன. தேர்தல் என்ற பேச்சு வந்தாலே எங்கடை தமிழ் கட்சிகள் ஒற்றுமை பற்றி பேசத் தொடங்கித் தொகுதி வேட்பாளர்கள் பங்கீடு குறித்த பேரம் பேசுதலில் மோதி - மாறி மாறி அறிக் கைகள் விட்ட பின்னர் தனித் தனியாகப் போட்டியிடும் கோமாளித்தனத்தை நிறை வேற்றி முடிப்பார்கள்

அந்த நிகழ்வுக்கான ஆரம்ப அறிவிப்பை சுமந்திரன் ஆரம்பித்து வைக்க சி.விகே. சிவஞானம் ஐயா தொடரத் தொடங்கி விட்டார். அதாவது கட்சிகளின் ஒற்றுமை குறித்து இருவரும் வலியுறுத்த தொடங்கி விட்டனர். இதற்கிடையில் புத்திஜீவிகள் என்று ஒரு அணி புதிதாக ஏதேதோ அறிக் கைகள் விட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தா புதிய அணியொன்றின் உருவாக்கம் குறித்துப் பரபரப்பாக அறிக்கை விட, சுரேஸ் பிரேமச்சந்திரனும் தனது பங்கிற்கு அறிவிப்பு ஒன்றை செய்திருக்கிறார் சித்தார்த்தன். என்ன செய்யப் போகிறாரோ தெரியவில்லை. கஜேந்திரகுமார் தாங்கள் தான் மாற்று அணி என சுயபிரகடனம் செய்து விட்டார்.

ஆகத் தமிழ் மக்களின் தலையெழுத்தை எழுதத் துடிக்கும் இந்தத் தலைவர்கள் சொல்வது தான் என்ன? அவர்கள் சொல்வதும் அவர்களுக்கே புரியாத புதிராக இருக்கும் போது மக்கள் எப்படி அதனைப் புரிந்து கொள்ளப் போகிறார்கள்?

எங்கடை சங்கக் கடை மணியத்தார் நேற்று சந்தியில் வைத்து சொன்ன வார்த்தைகள் சத்தியமானவை தான். முந்திப்பெடியள் இருக்கேக்க பொத்திக் கொண்டு இருந்தவங்கள் எல்லாம் இப்ப கத்திக் கொண்டு திரியத் தொடங்கீற்றினம். ஒற்றுமை குறித்து அறி க்கை சண்டை பிடிக்கினம். முந்தி சந்திரிக்கா அம்மையார் சமாதானத்திற்கான யுத்தம் என்று அறிக்கை விட்ட மாதிரி. கூட்டமைப்புத் தொடங்கேக்க எப்படி கைகட்டி வாய் பொத்தி கண்ணியமாக அரசியல் நடத்தினாங்களோ தெரியாது அது அந்த தலைவனால சாதிக்க முடிந்தது. இப்ப தலை ஒன்று பேசுது. வால் ஒன்றுக்கு வால் பிடிக்குது. படுக்கைக்கு போகேக்க ஒரு அறிக்கை விடுறாங்கள். கனவு கண்டு நித்திரையால விழிக்கேக்க இன்னொரு அறிக்கை விடுறாங்க ஐயா சாமி கொஞ்ச நாளைக்கு பேசாமல் இருங்கடா என்றால் கேட்கிறாங்களில்லை. முந்திக் காலமெண்டா இவங்களை எப்பவோ போஸ்ரிலை கட்டி விட்டிருப்பாங்கள். சண்முகத்தார் கொச்சைத் தனமாகப் பேசினாலும் கூட அதில் தொனித்த ஆதங்கம் அர்த்தமுள்ள தாகவே இருந்தது

★★★

எதிர்வரும் தேர்தலில் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்தால் 19 ஆவது திருத்தச் சட்டம் இரத்தாகும் என்று ஜனாதிபதி கோட்பாய ராஜபக்ச அவர்கள் இந்தியாவில் வைத்து தெரிவித்திருக்கிறார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்குரிய அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த இந்த 19 வது திருத்தச் சட்டம் இடயூறாக இருப்பதே இதற்கு காரணம். காரணம் எதுவானாலும் இச் சட்டம் ரத்தானால் தற்போது பிரதமராக இருக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குரிய அதிகாரங்களுக்கு தான் பாதிப்பு ஏற்படும். எது எப்படியானாலும் அதிகாரங்கள் அனைத்தும் ராஜபக்சக்களின் குடும்பத்துக்குள்ளேயே இருக்கப் போவது உண்மை. ஆனால் பாராளுமன்றத்திற்கான அதிகாரத்தை பலப்படுத்தும் 19 வது திருத்தச் சட்டத்திற்கு முழு ஆதரவை ராஜாங்க அமைச்சர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறாரே!

# இரு மாணவச் சாதனையாளர்கள்!

வவுனியா மாவட்டத்தில் உள்ள நகர மற்றும் கிராமப்புற பாட சாலையை சேர்ந்த இரு மாணவர்கள் இரு வேறு சாசனைகளை நிகழ்த்தியுள்ளனர். இதன் மூலமாக வவுனியா மாவட்டத்தை எல்லோரும் திரும்பி பார்க்க வைக்கும் ஒரு மாவட்டமாக மாற்றியுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களினை பெரிதும் கொண்ட வவுனியா மாவட்டத்தில் பூவரசங்குளம் பூவரசு ஆரம்பபாடசாலையை சேர்ந்த ஜெயசங்கர் அட்சயன் என்ற மாணவனும், வவுனியா சைவப்பிரகாசா மகளீர் கல்லூரியை சேர்ந்த ரோகிதா புஸ்பதேவன் என்ற மாணவியுமே இச்சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர்.



## ஜெயசங்கர் அட்சயன்

கடந்த காலப் பள்ளி வாழ்க்கையில் கூட எப்படி பாடசாலைக்கு விடுமுறை எடுக்கலாம் என்று காரணத்தை தேடிக்கொண்டிருப்போம். இது போன்றே திரைப்படங்களிலும் எமது சின்னத்திரை நாடகங்களிலும் மாணவர்களின் மனநிலை என காட்டப்பட்டு வந்திருக்கின்றன. என்ற போதும் வவுனியா வேலங்குளம் கோவல்மோட் டையை சேர்ந்த ஜெயசங்கர் அட்சயன் என்ற 10 வயது மாணவன் முதலாமாண்டில் இருந்து 5 ஆம் ஆண்டு வரையான 5 வருட காலப்பகுதியில் தினமும் பாடசாலைக்கு சென்று மிகப்பெரும் வரலாற்று சாதனையை நிகழ்த் தியுள்ளார்.

தனது வீட்டில் இருந்து ஒரு கிலோமீட்டர் துரம் வரை தனது தங்கையுடன் நடந்து சென்று மீண்டும் 7 கிலோமீட்டர் துரம்வரை பேருந்தில் பயணம் செய்தே பாடசாலைக்கு சென்று வரும் நிலையிலும் கூட மனம் தளராது இச்சா தனையை நிகழ்த்தியுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் பாட சாலை செல்வதற்கு பேருந்து இல்லாத சந்தர்ப்பத்தில் கூட முச்சக்கரவண்டியில் பயணித்து பாடசாலை சென்ற சந்தர்ப்பங்களும் இடம் பெற்றிருக்கிறது. அதன் பின்னர் முச்சக்கரவண்டிக்கான பணத்தினை செலுத்த அவரின் தந்தையார் பெரும் திண்டாட்ட த்திற்கு உள்ளாவது வேறு கதை.

இவரின் தந்தை ஊடகவியலாளராவும், தாயார் தனியார் வைத்தியசாலையில் பணியாற்றி வரும் நிலையில் வறுமை நிலையிலேயே தனது கல்வியை ஆர்வத்துடன் முன்னெடுத்த இம் மாணவன் சுகவீனமென்ற போதிலும் தனது பாடசாலைக்கு அருகில் உள்ள அரச வைத்தியசாலையில் மருந்து பெற்ற பின்னர் பாடசாலைக்கு சென்று வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான முன்மாதிரியான மாணவன் எமது மாவட்ட த்திற்கு கிடைத்தமை எமது மண்ணுக்கும் பெருமையாகும் என்பதற்கு அப்பால் இதனை எல்லா மாணவர்களும் கடைபிடிக்கும் பட்சத்தில் சிறந்த கல்விச்சமூகத்தை எதிர்கா லத்தில் உருவாக்க முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.




## ரோகிதா புஸ்பதேவன்

ஆர்வமும், விடா முயற்சியும், தேடல்களும் இருந்தால் நமது இலக்கை அடைவது கடினம் இல்லை என்பதை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 12 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் ரோகிதா புஸ்பதேவன் என்ற மாணவி நிகழ்த்திக் காட்டியுள்ளார். குறிப்பாக நமக்கு தேவையில்லை என்று தூக்கி வீசப்பட்ட கழிவுப்பொருட்களை கொண்டு இப்படியும் செய்யலாம் என்று செய்து காட்டியுள்ளார். இன்றைய மருத்துவ உலகில் பல புதிய கண்டுபிடிப்புக்கள் நாளுக்கு நாள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. என்றாலும் கூட இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இவை மிக அரிதாகவே உள்ளது. குறிப்பாக இலங்கையின் வடக்கே அமைந்துள்ள வவுனியா நகரில் இவ்வறான கண்டுபிடிப்பு என்பது அரிதான ஒரு விடயமாகும்.


கடந்த கால யுத்தத்தில் களமுனையில் தனது தந்தையை இழந்து தனது தாயாரின் அரவணைப்பில் வாழும் ரோகிதா புஸ்பதேவன் விஞ்ஞான தொழில்நுட்ப பாடத்தினை மிகுந்த ஆர்வத்துடன் கற்றுவருகின்றார். இதன் வெளிப்பாடாக இரத்தப் பரிசோதனைக்காக இரத்தத்தினை தானியங்கி முறையில் நோயாளர்களிடம் பெறும் ரோபோ இயந்திரத்தினை கண்டுபிடித்துச் சாதனை செய்துள்ளார். வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 12ம் ஆண்டில் கல்வி கற்கும் மாகாண மட்டத்தில் இடம்பெற்ற ரேபோட்டிக் போட்டியில் பங்கேற்பதற்காகப் பாடசாலை அதிபர் திருமதி பி. கமலேஸ்வரியின் ஒத்துழைப்பு டனும், பாடசாலை ஆசிரியர்களின் துணையுடனும் கழிவுப்பொருட்களின் ஊடாக ரோபோ ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் குறித்த மாணவி ஈடுபட்டிருந்தார். இந்நிலையிலேயே மாகாண மட்டப் போட்டியில் பங்கேற்க ஆர்வம் கொண்டு இக் கண்டுபிடிப்பில் ஈடுபட்போதிலும் போதியளவு நிதிவசதிகள் இல்லாமையினால் அதிபரினூடாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் மூலம் சிறு தொகைப் பணத்தினை பெற்று தனது முயற்சியை ஆரம்பித்திருந்தார்.





கோகுலன்

இதன்போது கழிவுப்பொருட்கள் எனத் பயன்படுத்தாது எறியப்பட்ட பொருட்களையும் தனது கண்டுபிடிப்புக்கு மாணவி பயன்படுத்தியிருந்தார். இவற்றைப் பயன்படுத்தி இரத்த பரிசோனைக்காக இரத்தத்தினை நோயாளியிடம் இருந்து பெறுவதற்கான தானியங்கி முறைமையை (AUTO NEEDEL INJECTOR) கண்டுபிடித்தார். இக் கண்டுபிடிப்பினை மாகாண மட்டத்தில் இடம்பெற்ற ரேபோட்டிக் போட்டியில் பங்கேற்க வைத்ததன் ஊடாக மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்ட இம் மாணவி தேசிய மட்டத்தில் இடம்பெறும் போட்டிக்கும் தெரிவாகியுள்ளார். எமது இலக்கை அடைவதற்கு விடா முயற்சியும் தளராத நம்பிக்கையும் இருந்தால் எதனையும் சாதிக்க முடியும் என்பதை இம்மாணவி மற்றவர்களிற்கு எடுத்துக் காட்டியுள்ளார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.


குறித்த பாடசாலையின் அதிபர் கருத்து தெரிவிக்கையில், ரோகிதா புஸ்பதேவன் மாகாண மட்டத்தில் ரோபொட்டிக் போட்டியில் பங்கேற்பதற்காக ரோபோ ஒன்றினை செய்ய விரும்பமுள்ளதாக தெரிவித்திருந்தார். அத்துடன் கழிவுப்பொருட்களுடாக அதனைச் செய்யவுள்ளதாகவும் சில பொருட்களை வாங்க வேண்டியுள்ளதனால் சிறுதொகை நிதி தேவை எனவும் தெரிவித்தார். எனவே நிச்சயமாக அதனை செய்யுமாறு நான் தெரிவித்ததுடன் நிதியுதவியை பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக பெற்று தரலாம் என தெரிவித்தேன். அதன் பிரகாரம் நான்காயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை மாத்திரம் வெளியில் வாங்கியிருந்தார். மற்றைய பொருட்கள் எல்லாவற்றையும் கழிவுப்பொருட்களில் இருந்து பெற்றுக்கொண்டார். அந்த மாணவிக்கும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர் குழாமிற்கும் நன்றிகளை தெரிவிக்கி ன்றேன். இந்த மாணவி ஏனைய மாணவர்களுக்கு முன்மாதிரியாக செயற்பட்டு பெண்களாலும் சாதிக்க முடியும் என வெளிப்படுத்தியுள்ளார். அவர் மாகாண மட்டத்தில் முதலாமிடத்தினை பெற்றமை வவுனியா மாவட்டத்திற்கும் எமது வலயத்திற்கும் பாடசாலைக்கும் பெருமையைத் தேடித்தந்துள்ளார்.










தீபம் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விளம்பர முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 077 198 9445

இந்தப் பத்திரிகை இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தால் 08.12.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.